# வனப்பாதுகாப்பு திணைக்களம்

# செயலாற்றுகை அறிக்கை - 2018

**மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு**

# செயற்பணி

**“ இலங்கை மக்களின் அபிவிருத்தியை**

**உறுதிப்படுத்தும் பொருட்டு**

**வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி**

**செய்தலும் “**

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| | **1 ஆவது அத்தியாயம்** | |
| | சமூக வனவியல் மற்றும் வனவிரிவாக்கல் பிரிவு | 2 |
| 1.1 | அறிமுகம் | 2 |
| 1.2 | பிரிவின் பிரதான பணிகள் | 2 |
| 1.3 | நிருவாகக் கட்டமைப்பு | 2 |
| 1.4 | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலதன செலவினங்கள் வரவு செலவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள் | 3 |
| 1.4.1 | நாற்றுகளை உருவாக்குதல் | 3 |
| 1.4.2 | விழிப்பூட்டலும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களும் | 3 |
| 1.4.3 | பங்களிப்புடனான மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் | 3 |
| 1.4.4 | புதிய விவசாய வனச் செய்கைகளை தாபித்தல் | 4 |
| 1.4.5 | 2016/2017 ஆம் ஆண்டுகளில் தாபிக்கப்பட்ட விவசாய வனச் செய்கை முகாமை பராமரிப்பு | 4 |
| 1.4.6 | வீட்டுத் தோட்ட அபிவிருத்தியும் தாவர முகாமைத்துவமும் | 5 |
| 1.4.7 | வன விரிவாக்கல் பணிக்குத் தேவையான தொடர்பாடல் கருவிகளைத் தயாரித்தல் | 6 |
| | 02 ஆவது அத்தியாயம் | |
| | வனவியல் மற்றும் வன முகாமைத்துவப் பிரிவு | 7 |
| 2.1 | அறிமுகம் | 7 |
| 2.2 | இந்தப் பிரிவின் அடிப்படை நோக்கங்கள் | 7 |
| 2.3 | நிறுவனக் கட்டமைப்பு | 7 |
| 2.4 | பிரதான பணிகள் மற்றும் செயற்பாட்டுப் பொழிப்பும் | 8 |
| 2.4.1 | மீள் வனச் செய்கை | 8 |
| 2.4.2 | வனவியல் சிகிச்சைகளும் வனச் செய்கைகளில் அறுடையைப் பெற்றுக் கொள்ளுவதற்கான திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் நிருவகித்தலும் | 8 |
| 2.4.3 | அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளல் | 8 |
| 2.4.4 | பைனஸ் ஒளியோ ரெசின் பிரித்தெடுப்புப் பணிகளை நடைமுறைப்படுத்துதல் | 8 |
| 2.4.5 | காடுகளின் வளங்களை மேம்படுத்தல். | 9 |
| 2.5.1 | சுற்றாடல் மீளமைப்பு | 9 |
| 2.5.2 | மீளமைக்கப்பட்ட வனங்களை பராமரித்தல். | 9 |

| | | |
|---|---|---|
| 2.5.3 | புனரமைப்புச் செய்யப்பட்ட காடுகள் பராமரித்தல் | 9 |
| 2.6 | 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம் | 9 |
| 2.6.1 | மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் - 2018 | 9 |
| 2.6.2 | நாற்று உற்பத்திகள்- 2018 | 10 |
| 2.6.3 | வளர்ச்சியடையாத வனச் செய்கைப் பராமரிப்பு - 2018 | 11 |
| 2.7 | வனச் செய்கைகளில் வனவியல் தொழிற்பாடுகள் - 2018 | 12 |
| 2.7.1 | வர்த்தகத்திற்கு முன்னரான நலிவடைவு | 12 |
| 2.7.2 | வர்த்தக நலிவடைவு | 13 |
| 2.7.3 | வளர்ந்த வனச் செய்கைகளில் புத்துயிர்ப்பை அகற்றுதல் | 13 |
| 2.7.4 | வெட்டு மரங்களை வீழ்த்தியதன் பின்னரான புள்ளிவிபரம் | 13 |
| 2.7.5 | சிறிய காடுகளின் பராமரிப்பு | 14 |
| 2.7.6 | துப்புரவு செய்தல் | 14 |
| 2.7.7 | மத்திய மலைநாட்டின் மலையுச்சியைப் பேணுதல் | 15 |
| 2.7.8 | பைனஸ் வனச் செய்கையை அகன்ற இலை வனச் செய்கையாக மாற்றுதல் | 15 |
| 2.7.9 | காடுகளின் குணாம்சங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | 16 |
| 2.7.10 | பைனஸ் வனச் செய்கையின் மூலம் ஒலியோ ரெசின் பிரித்தெடுப்பு - 2018 | 16 |
| 2.7.11 | அரசாங்க திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகை 2018 | 17 |
| 2.7.12 | தனியார் பிரிவின் மீள் வனச் செய்கை | 17 |
| 2.7.13 | வனச் செய்கைகளினால் பெறப்பட்ட அறுவடை | 18 |
| 2.7.14 | உல்லாச விடுதிகளினால் பெறப்பட்ட வருமானம் - 2018. | 20 |
| 2.7.15 | நிதிசார் முன்னேற்றம் -2018 | 21 |
| | 3 வது அத்தியாயம் | |
| | வனப் புள்ளி விபர பௌதீக தகவல் முறைமை பிரிவு | 21 |
| 3.1 | அறிமுகம் | 21 |
| 3.2 | பிரதான நோக்கங்கள் | 21 |
| 3.3 | நிருவாக கட்டமைப்பு | 22 |
| 3.4 | இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள் | 22 |
| 3.4.1 | காடுகளை உள்ளடக்கியதான வரைபடத்தை தயாரிப்பதற்கான தொலைத்தொடர்பு | 22 |
| 3.4.2 | வன புள்ளிவிபர பணிகள் | 23 |
| 3.4.3 | வனச் செய்கை தரவுப் பொதிகள் (FORDATA) முகாமைத்துவம் | 23 |
| 3.4.4 | தேசிய வனக் கணிப்பீடு (NFI) தரவுத் தொகுதி | 23 |
| 3.4.5 | அளவை மற்றும் எல்லைகளை குறியீடு இடுதல். | 23 |
| 3.4.6 | புவியியல் தரவு முறைமைகளை முகாமை செய்தல். | 23 |
| | 04 ஆவது அத்தியாயம் | |

| | | |
|---|---|---|
| | சுற்றாடல் பேணல் மற்றும் முகாமைப் பிரிவு | 24 |
| 4.1 | அறிமுகம் | 24 |
| 4.2 | பிரதான செயற்பாடுகள் | 24 |
| 4.3 | தாபன ஏற்பாடுகள் | 25 |
| 4.4 | வருடாந்த செயற்பாடுகள். | 25 |
| 4.4.1 | உலக மரபுரிமை காடுகளை பாதுகாத்தலும் ஒதுக்குகளை பராமரித்தலும் | 25 |
| 4.4.2 | பேணல் நிலைய முகாமைத்துவம். | 25 |
| 4.4.3 | ஹூருளு சுற்றாடல் பூங்காவனத்தின் செயற்பாடுகள் | 26 |
| 4.4.4 | உல்லாசப் பிரயாணிகளின் தகவல்கள் மற்றும் அவர்களிடமிருந்து பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள். | 26 |
| 4.4.5 | காடுகளில் படப்பிடிப்பின் மூலம் கிடைக்கப்பட்ட வருமானம் | 29 |
| 4.4.6 | சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு | 30 |
| 4.4.7 | சுற்றாடல் தகவல் முகாமை முறைமை | 30 |
| | 05 ஆவது அத்தியாயம் | |
| | வன ஆய்வு ,கற்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு | 31 |
| 5.1 | அறிமுகம் | 31 |
| 5.2 | ஆய்வு மற்றும் கற்கைப் பிரிவின் பிரதான செயற்பாடுகள் | 31 |
| 5.3 | தாபனக் கட்டமைப்பு. (தலைமை அலுவலகம்) | 32 |
| 5.4 | புதிய ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் செயலாற்றுகை - 2018 | 32 |
| 5.5 | ஆராய்ச்சிப் பராமரிப்புகள் | 34 |
| 5.6 | ஆராய்ச்சிகளின் போது பெறப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை மற்றவர்களுக்கும் வழங்குதல். | 34 |
| 5.7 | தேசிய வனத்துறை ஆராய்ச்சிக் குழு. | 36 |
| 5.8 | நூலகம். | 41 |
| 5.9 | வனவியல் தகவல் சேவை. | 42 |
| 5.10 | வனவியல் கற்கை | 42 |
| 5.10.1 | திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பொதுவான பாடநெறிகள். | 42 |
| 5.10.2 | வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 44 |
| 5.10.3 | ஏனைய நிறுவனங்களுக்கான குறுகிய கால பயிற்சிகள். | 46 |
| 5.10.4 | சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் பயன்படுத்தி இலங்கை வனவியல் நிறுவனத்தை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல். | 47 |
| | 06 ஆவது அத்தியாயம் | |
| | வனப் பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவு | 47 |
| 6.1 | அறிமுகம் | 47 |

| | | |
|---|---|---|
| 6.2 | பிரதான செயற்பாடுகள் | 47 |
| 6.3 | தாபன ஏற்பாடுகள் | 48 |
| 6.4 | செயற்பாடுகள் தொடர்பான பொதுவான மீளாய்வு | 48 |
| 6.5 | காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் கீழ் புதிய காட்டுப் பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல் | 49 |
| 6.6 | பாதுகாப்பு நடவடிக்கைகளிலுள்ள முன்னேற்றம் | 49 |
| 6.6.1 | பொது | 49 |
| 6.6.2 | அவசர சுற்றிவளைப்புப் பிரிவின் செயலாற்றுகை | 49 |
| 6.6.3 | மரப் பரிசோதனை நிலையம் | 50 |
| 6.6.4 | தனியார் மர வியாபாரம் | 50 |
| 6.7 | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | 50 |
| 6.8 | நன்கொடை வழங்குதல் | 50 |
| 6.9 | நிதிசார் முன்னேற்றம் | 51 |
| 6.10 | காடுசாராத பொருட்களின் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்தல் | 51 |
| | 07ஆவது அத்தியாயம் | |
| | திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு | 52 |
| 7.1 | அறிமுகம் | 52 |
| 7.2 | இந்தப் பிரிவின் பிரதான நோக்கங்கள் | 52 |
| 7.3 | தாபன ஏற்பாடுகள் | 52 |
| 7.4 | பிரதான செயற்பாடுகள் | 53 |
| 7.4.1 | வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தையும் மூலதன வரவு செலவுத் திட்டத்தையும் தயாரித்தல் | 53 |
| 7.4.2 | முன்னேற்ற அறிக்கையை வழங்குதல். | 53 |
| 7.4.3 | கட்டட நிருமாணிப்புகள் மற்றும் திருத்தங்கள் | 53 |
| 7.4.3.1 | கட்டட நிருமாணிப்புகள் | 53 |
| 7.4.3.2 | கட்டடங்களின் பராமரிப்பு | 54 |
| | 08 ஆவது அத்தியாயம் | |
| | போக்குவரத்துப் பிரிவு | 59 |
| 8.1 | அறிமுகம் | 59 |
| 8.2 | பதவியணி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு | 59 |
| 8.3 | நிதிசார் கொள்கை | 59 |
| | 09 ஆவது அத்தியாயம் | |
| | மனித வள முகாமைத்துவம், நிருவாகம் மற்றும் தாபன அபிவிருத்திப் பிரிவு | 60 |

| | | |
|---|---|---|
| 9.1 | அறிமுகம் | 60 |
| 9.2 | இடமாற்றம் | 62 |
| 9.3 | ஆட்சேர்ப்புகள் | 62 |
| 9.4 | பதவியுயர்வுகள் | 63 |
| 9.5 | கடன் வழங்குதல். | 63 |
| 9.6 | தகவல் உரிமை அலகு | 63 |
| | 10 ஆவது அத்தியாயம் | |
| | நிதிப் பிரிவு | 64 |
| 10.1 | அறிமுகம் | 64 |
| 10.2 | நிதிப் பிரிவின் பிரதான செயற்பாடுகள் | 64 |
| 10.3 | தாபன ஏற்பாடுகள் | 64 |
| 10.4 | வரவு செலவு தகவல்கள் | 64 |
| 10.5 | முற்பணக் கணக்கு | 66 |
| 10.6 | வருமானங்களைச் சேகரித்தல் | 66 |
| 10.7 | வனப் பாதுகாப்புத் திணைக்கள நிதியம் | 67 |

## அட்டவணைப் பட்டியல்


| | | | |
|---|---|---|---|
| 1 | அட்டவணை 1.1 | நாற்றுகளை உருவாக்குதல் | 3 |
| 2 | அட்டவணை 1.2 | விழிப்பூட்டலும் பிரச்சார நிகழ்ச்சித் திட்டங்களும் | 4 |
| 3 | அட்டவணை 1.3 | மரநடுகை செயற்பாடுகள் | 4 |
| 4 | அட்டவணை 1.4 | புதிய விவசாய வனச் செய்கைகளை தாபித்தல் | 5 |
| 5 | அட்டவணை 1.5 | 2015 / 2016 ஆம் ஆண்டுகளில் தாபிக்கப்பட்ட விவசாய வனச் செய்கை பராமரிப்பு . | 6 |
| 6 | அட்டவணை 2.1 | மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்-2018 | 10 |
| 7 | அட்டவணை 2.2 | நாற்று உற்பத்தி – 2018 | 10 |
| 8 | அட்டவணை 2.3 | வளர்ச்சியடையாத வனச்செய்கைப் பராமரிப்பு- 2018 | 11 |
| 9 | அட்டவணை 2.4 | வர்த்தகத்திற்குமுன்னரானநலிவடைவு- 2018 | 12 |
| 10 | அட்டவணை 2.5 | வர்த்தகநலிவடைவு- 2018 | 13 |
| 11 | அட்டவணை 2.6 | வெட்டு மரங்களை வீழ்த்தியதன் பின்னரான புள்ளிவிபரம்- 2018 | 14 |
| 12 | அட்டவணை 2.7 | சிறிய காடுகளின் பராமரிப்பு - 2018 | 14 |
| 13 | அட்டவணை 2.8 | துப்பரவு செய்தல் 2018 | 14 |
| 14 | அட்டவணை 2.9 | புனரமைக்கப்பட்ட வனச் செய்கைப் பராமரிப்பு | 15 |
| 15 | அட்டவணை 2.10 | மத்திய மலைநாட்டின் மலையுச்சியில் 2015 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட வனச் செய்கைப் பராமரிப்பு. | 15 |
| 16 | அட்டவணை 2.11 | அகன்ற இலை வனச் செய்கையைத் தாபித்தல் | 15 |
| 17 | அட்டவணை 2.12 | 2017 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட அகன்ற இலை வனச் செய்கையைத் தாபித்தல் | 15 |
| 18 | அட்டவணை 2.13 | 2016 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட அகன்ற இலை வனச் செய்கையைத் தாபித்தல் | 16 |
| 19 | அட்டவணை 2.14 | 2015 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட அகன்ற இலை வனச் செய்கையைத் தாபித்தல் | 16 |
| 20 | அட்டவணை 2.15 | காடுகளின் குணாம்சங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் | 16 |
| 21 | அட்டவணை 2.16 | குத்தகைக்கு விடப்பட்ட காணிகளின் அளவும் குத்தகை வருமானமும்- 2018 | 17 |
| 22 | அட்டவணை 2.17 | 2018 ஆம் ஆண்டில் தனியார் பிரிவின் மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்ட நிலைமை . | 18 |
| 23 | அட்டவணை 2.18 | வன வளங்களினால் கிடைக்கப் பெற்ற வருமானம் - 2018 | 19 |

| | | | |
|---|---|---|---|
| 24 | அட்டவணை 2.19 | உல்லாச விடுதிகளினால் பெறப்பட்ட வருமானம் - 2018 | 20 |
| 25 | அட்டவணை 2.20 | வனப் புள்ளிவிபர முகாமைப்பிரிவின் நிதிசார் முன்னேற்றம் - 2018 | 21 |
| 26 | அட்டவணை 4..1 (அ) | உடவத்தகெலே (கண்டி) | 26 |
| 27 | அட்டவணை 4.1 (ஆ) | நகல்ஸ் காடு (டின்ஸ்டன் , கண்டி) | 26 |
| 28 | அட்டவணை 4.1 (இ) | நகல்ஸ் காடு (பிட்டவளபத்தன , மாத்தளை) | 27 |
| 29 | அட்டவணை 4.1 (ஈ) | சிங்கராஜ காடு ( பிட்டதெனிய , மாத்தறை) | 27 |
| 30 | அட்டவணை 4.1 (உ) | சிங்கராஜ காடு ( குடவ , இரத்தினபுரி) | 27 |
| 31 | அட்டவணை 4.1 (ஊ) | ஹுருளு சுற்றாடல் பூங்கா ( ஹபரன , பொலன்நறுவ) | 28 |
| 32 | அட்டவணை 4.1 (எ) | கொட்டாவ காடு (காலி) | 28 |
| 33 | அட்டவணை 4.1 (ஏ) | கன்னெலியகாடு (காலி) | 28 |
| 34 | அட்டவணை 4.1 (ஐ) | மாகந்தாவ காடு (கேகாலை) | 29 |
| 35 | அட்டவணை 4.1 (ஒ) | கந்தேஎல கல்விப் பூங்கா (நுவரெலியா) | 29 |
| 36 | அட்டவணை 5.1 | ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள். | 36 |
| 37 | அட்டவணை 5.2 (அ) | வனவியல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி NVQ 5 மட்ட பாடநெறியின் 1 வது கல்வித் தவணையின் பாடநெறி உள்ளடக்கம். | 42 |
| 38 | அட்டவணை 5.2 (ஆ) | வனவியல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி NVQ 5 மட்ட பாடநெறியின் 2 வது கல்வித் தவணையின் பாடநெறி உள்ளடக்கம். | 43 |
| 39 | அட்டவணை 5.3 | 2018 ஆண்டுக்குள் இலங்கை வனவியல் நிறுவனத்தில் வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள். | 44 |
| 40 | அட்டவணை 5.4 | ஏனைய நிறுவனங்களுக்கான குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | 46 |
| 41 | அட்டவணை 6.1 | அவசர சுற்றிவளைப்புப் பிரிவின் முன்னேற்றம் | 50 |
| 42 | அட்டவணை 6.2 | வனப்பாதுகாப்பு திணைக்கள நிதியத்தின் நிதிசார் முன்னேற்றம் - 2018 | 51 |
| 43 | அட்டவணை 7.1 | திரட்டிய நிதியத்தைப் பயன்படுத்திநிருமாணிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் - 2018 | 53 |
| 44 | அட்டவணை 7.2 | 2018 ஆம் ஆண்டின் கட்டட நிருமாணிப்பு தொடர்பிலான நிதிசார் செலவு | 53 |
| 45 | அட்டவணை 7.3 | 2018 ஆம் ஆண்டுக்குள் பராமரிக்கப்பட்ட கட்டடங்களின் விபரங்கள் | 54 |
| 46 | அட்டவணை 7.4 | கட்டடப் பராமரிப்பு - நிதிசார் முன்னேற்றம் - 2018 | 58 |

| | | | |
|---|---|---|---|
| 47 | அட்டவணை 7.5 | 2018 ஆம் ஆண்டு வீட்டுத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் தொடர்பான நிதிச் செயலாற்றுகை | 58 |
| 48 | அட்டவணை 7.6 | 2018 ஆம் ஆண்டு இயந்திரப் பொறிமுறைகள் கொள்வனவு தொடர்பான நிதிச் செயலாற்றுகை | 58 |
| 49 | அட்டவணை 7.7 | 2018 ஆண்டு இயந்திர பொறிமுறைகள் பராமரிப்பு தொடர்பான நிதிச் செயலாற்றுகை | 58 |
| 50 | அட்டவணை 8.1 | போக்குவரத்து பிரிவுக்கு 2018 ஆம் ஆண்டில் கிடைத்த ஒதுக்கீடுகள் மற்றும் அவை செலவிடப்பட்ட முறை | 59 |
| 51 | அட்டவணை 9.1 | வனப் பாதுகாப்பு திணைக்கள பதவியணி தகவல்கள் | 60 |
| 52 | அட்டவணை 9.2 | 2018 ஆம் ஆண்டின் ஆட்சேர்ப்பு | 61 |
| 53 | அட்டவணை 9.3 | 2018 ஆம் ஆண்டின் ஓய்வு பெறல் | 61 |
| 54 | அட்டவணை 9.4 | சேவையிலிருந்து விலகல்/பதவியிலிருந்து விடுவித்தல் | 61 |
| 55 | அட்டவணை 9.5 | மரணமடைந்த உத்தியோகத்தர்கள் பற்றிய விபரம் | 61 |
| 56 | அட்டவணை 9.6 | ஒழுக்காற்று நடவடிக்கைகள் | 62 |
| 57 | அட்டவணை 9.7 | சேவை வெறிதாக்கல் | 62 |
| 58 | அட்டவணை 9.8 | ஆட்சேர்ப்புகள் | 62 |
| 59 | அட்டவணை 9.9 | வழங்கிய தகவல்களுக்கு எதிராக தகவல் ஆணைக்குழு விசாரணை செய்த மேன்முறையீடுகள் | 63 |
| 60 | அட்டவணை 10.1 | திணைக்கள வரவுசெலவுத் திட்ட முன்னேற்றங்கள் | 65 |
| 61 | அட்டவணை 10.2 | அரசாங்க ஊழியர்களின் முற்பணக் கணக்குகள் | 66 |
| 62 | அட்டவணை 10.3 | வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வருமானங்கள் | 66 |
| 63 | அட்டவணை 10.4 | வனப் பாதுகாப்புத் திணைக்கள நிதியக் கணக்கின் கொடுக்கல் வாங்கல் பற்றிய பொழிப்பு | 67 |

**இணைப்பு பட்டியல்**


| | | | |
|---|---|---|---|
| 1 | இணைப்பு I | வனக் குற்றங்களின் பொழிப்பு ( நீதிமன்ற வழக்குகள்) –2018 | 68 |
| 2 | இணைப்பு II | காட்டுக்கட்டளைச் சட்டத்தின் 30 வது பிரிவின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வனக் குற்றங்கள் - 2018 | 70 |
| 3 | இணைப்பு III | 2018 ஆம்ஆண்டில் அரசுடமையாக்கப்பட்ட வாகனங்கள் | 71 |
| 4 | இணைப்பு IV | செயற்பாட்டு நிலையில் உள்ள பதிவு செய்த வெட்டு மர தொழில் முயற்சிகள் - 2018.12.31 | 76 |
| 5 | இணைப்பு V | புதிய வெட்டுமரக் களஞ்சியப் பதிவுகள் 2018 | 77 |
| 6 | இணைப்பு VI | அன்பளிப்பு வழங்கள் -2018 | 78 |
| 7 | இணைப்பு VII | பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் – 2018 | 79 |
| 8 | இணைப்பு VIII | திடீர் சுற்றிவளைப்புப் பரிவின் செயலாற்றுகை - 2018 | 80 |
| 9 | இணைப்பு IX | நாற்று வகைகள் காட்டு விளை பொருட்கள் ஏற்றுமதியின் மூலம் கிடைத்த வருமானம் (பொதுவான சேவை ) - 2018 | 81 |
| 10 | இணைப்பு X | அரிந்த மரங்கள், வீட்டுத்தளபாடங்கள், கைப்பணிப் பொருட்கள் , விளையாட்டுப் பொருட்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட மரங்கள் ஏற்றுமதியின் மூலம் கிடைத்த வருமானம் மற்றும் பெறுமதி சேர் வரி ஒரு நாள் சேவை - 2018 | 82 |
| 11 | இணைப்பு XI | அரிந்த மரங்கள், வீட்டுத்தளபாடங்கள், கைப்பணிப் பொருட்கள் , விளையாட்டுப் பொருட்கள், பெறுமதி சேர்க்கப்பட்ட மரங்கள் ஏற்றுமதியின் மூலம் கிடைத்த வருமானம் துரித சேவை (வீட்டுத் தளபாடங்கள் மற்றும் ஏனைய) 2018 | 83 |
| 12 | இணைப்பு XII | சாதாரண சேவை (வீட்டுத் தளபாடங்கள் மற்றும் ஏனைய) 2018 | 84 |
| 13 | இணைப்பு XIII | நாற்று மற்றும் வேறு காட்டு விளைபொருட்கள் ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் ஆண்டு வருமானம் -துரித சேவை ( நாற்று மற்றும் வேறு காட்டு விளைபொருட்கள்) - 2018 | 85 |
| 14 | இணைப்பு XIV | நாற்று மற்றும் வேறு காட்டு விளைபொருட்கள் ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் ஆண்டு வருமானம் -ஒருநாள் சேவை ( நாற்று மற்றும் வேறு காட்டு விளைபொருட்கள்) - 2018 இணைப்பு XIV | 86 |

# அறிமுகம்

தேசத்தின் செழிப்பை உறுதிப்படுத்தும் பொருட்டு இலங்கையின் வன வளங்களைப் பேணி அபிவிருத்தி செய்தல் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் செயற்பணியாகும். இந்த செயற்பணியை உறுதிப்படுத்தும் பொருட்டு பல்வேறுபட்ட செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டில் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டவையாகும். இந்தக் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் மூலம் பின்வரும் நோக்கங்களை அடைவதற்கு உறுதுணையாகவிருந்தது.

- சமூக மற்றும் சுற்றாடல் நன்மைகளை திறமுறையானவாறு பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உச்ச வனப் பாதுகாப்பும் பராமரிப்பும்

- நாட்டின் மரத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் பொருட்டு மர வழங்களை மேம்படுத்துவதற்காக தேசிய வனச் செய்கைகளை தாபித்தல் மற்றும் அவற்றை முகாமைப்படுத்தல்.

- தேசியவனக்கொள்கை மற்றும் வனப் பாதுகாப்பு கட்டளைச் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக காடுகளின் பாதுகாப்பைவலுப்படுத்தல்.

- அரச, பொதுமக்கள் மற்றும் தனியார் பிரிவின் ஒத்துழைப்புடன் மர நடுகையை மேம்படுத்தல்.

- ஆராய்ச்சி ,கல்வி மற்றும் பிரிவின் மூலம் தேசிய வன அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொழிநுட்ப ஒத்துழைப்பு வழங்குதல்..

- சமூக வன முகாமைத்துவப் பணிகளை அபிவிருத்தி செய்தல்.

வனப் பாதுகாப்புத் திணைக்களமானது பிரதான அலுவலக மட்டத்தில் 07 தொழிநுட்ப பிரிவுகளின் கீழ் செயற்படுகின்றது. அதாவது சமூக வனவியல்,வன விரிவாக்கல் பிரிவு, வனப் புள்ளிவிபர முகாமைத்துவப் பிரிவு, சுற்றாடல் முகாமைப் பிரிவு, ஆய்வு மற்றும் கற்கைப் பிரிவு, வனப் பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவு திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு என்பதாகும் இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் அன்றாட நிதி முகாமைத்துவம், தாபனப்பணிகளை முறையே நிதிப்பிரிவினாலும், மனித வள முகாமைத்துவம், நிருவாகம் மற்றும் தாபன அபிவிருத்திப் பிரிவு என்னும் பிரிவுகளினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்தப் பிரிவுகள் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பணிகள் தொடர்பில் நீண்ட தகவல்கள் அடங்கிய விபரங்கள் பின்வரும் அத்தியாயங்களின் மூலம் விபரிக்கப்பட்டுள்ளன இதன் வெளிக்களப் பணிகள் அம்பாறை, அனுராதபுரம், பதுளை, மட்டக்களப்பு ,காலி, கம்பஹா, ஹம்பாந்தோட்டை, களுத்துறை கண்டி, கேகாலை, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொணறாகலை, நுவரெலியா, பொலன்நறுவை புத்தளம், இரத்தினபுரி, திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி போன்ற இடங்களில் அமைந்துள்ள மாவட்ட வன அலுவலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுகின்றன. இப் பிராந்தியங்களின் பணிகளை கொழும்பு, இரத்தினபுரி, நுவரெலியா, அனுராதபுரம் மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் தாபிக்கப்பட்டுள்ள வலய பிரதி காடு பேணுநர் அதிபதி அலுவலகங்கள் மூலம் மேற்பார்வை செய்யப்படுகின்றன.

இந்தத் திணைக்களத்தின் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை இலங்கை வனவியல் நிறுவகத்தின் பணிப்பாளர் / காடு பேணுநர் அதிபதியின் (கற்கைகள்) தலைமைத்துவத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலதிக காடு பேணுநர் தலைமை அதிபதி ( வன ஆராய்ச்சி, கற்கைகள் மற்றும் அபிவிருத்தி) இனால் ஆராய்ச்சிப் பணிகள் மேற்பார்வை செய்யப்பட்டு ஒருங்கிணைப்பு செய்யப்படுகின்றது. இப் பணிகள் கும்பல்பொல மற்றும் பதுளையில் தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி நிலையங்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றன.

# 01 ஆவது அத்தியாயம்

# சமூக வனவியல் மற்றும் வனவிரிவாக்கல் பிரிவு

## 1.1 அறிமுகம்

தேசிய மட்டத்திலான விரிவாக்கல்கள் மற்றும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுடன் சகல பங்களிப்புடனானதும் சமூக வனவியல் நிகழ்ச்சித் திட்ட அபிவிருத்தியும் மேற்பார்வையும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் அதற்கான நாற்றுப் பயிர் உற்பத்தியும் , பயிற்சியும் மற்றும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான அச்சுப் பொருட்களை ஆக்குவதும் அருகாமையிலுள்ள பொது மக்களுக்கு பிரதான மட்டத்திலான வருவாய்களை ஈட்டக்கூடிய கருத்திட்டங்களைத் திட்டமிடுதலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும் போன்ற பணிகளில் ஈடுபடுதல். சமூக வனவியல் மற்றும் வனவிரிவாக்கல் பிரிவின் கடமைகளாகும். இந்தப் பிரிவின் பங்களிப்புடனான வனச்செய்கையும் பங்களிப்புடனான வன முகாமைக்குத் தேவையான வழிகாட்டிகளை உருவாக்குதலும் இக்கடமைகளுக்குள் உள்ளடக்கப்படும். இயற்கைக் காடுகளில் மேற்கொள்கின்ற சமூக முகாமைத்துவ நடவடிக்கைளும் இந்த சமூக வனவியல் மற்றும் வனவிரிவாக்கல் பிரிவிற்குக் கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளின் ஒன்றாகும்.

### 1.2 பிரிவின் பிரதான பணிகள்

பொது மக்களுக்கு பொதுவான விழிப்பூட்டும் நிகழ்ச்சிகளை நடாத்துதல்.

வனவியல் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் பல்வேறுபட்ட தரப்பினர்களைக் கொண்ட குழுக்களுக்கு விரிவாக்கல் சேவைகளை வழங்குதல்.

பொது மக்களையும் இணைத்துக் கொண்டு பல்வேறுபட்ட மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- ✓ வீட்டுத் தோட்ட அபிவிருத்தி
- ✓ பங்களிப்புடனான பாதுகாப்பு மரநடுகை நிகழ்ச்சித் திட்டம்.
- ✓ வீதி இரு மருங்கிலும் மரநடுகை நிகழ்ச்சித் திட்டம்.
- ✓ வனச்செய்கை / கமப் பயிர்ச்செய்கை
- ✓ நாற்றுகள் உற்பத்தி போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இயற்கை வன வளங்களைப் பாதுகாப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் பங்களிப்புடனான வன முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்.

## 1.3 நிருவாகக் கட்டமைப்பு

இப் பிரிவு காடுபேணுநரின் தலைமையின் கீழ் செயற்படுகின்றது. பிரிவின் பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்கு உதவிக் காடுபேணுநர் ஒருவர், விசேட வனக் கட்டுப்பாட்டாளர் 01, வனக் கட்டுப்பாட்டாளர் 01 நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் 01, பிரதான முகாமைத்துவ உதவியாளர் 01, பகுதி வன உத்தியோகத்தர் 03, வன விரிவாக்கல் உத்தியோகத்தர் 02 வன வெளிக்கள உத்தியோகத்தர் 01 மற்றும் ஏனைய பணியாட் தொகுதியினரும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர் வெளிக்கள செயற்பாடுகள் அனைத்தும் வலய பிரதி காடுபேணுநர்களின் மேற்பார்வையின் கீழ் மாவட்ட வன அலுவலகங்களின் மூலம் நெறிப்படுத்தப்படுகின்றன.

## 1.4 வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மூலதன செலவினங்கள் வரவு செலவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள்.

### 1.4.1 நாற்றுகளை உருவாக்குதல்

வன விரிவாக்கல் பணிகளுக்குத் தேவையான நாற்றுகளை வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் நாற்று மேடைகளில் உருவாக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டு உற்பத்தி செய்யப்பட்ட மொத்த நாற்றுக்களின் எண்ணிக்கை 558,850 ஆகும்.

உருவாக்கப்பட்ட மொத்த நாற்றுக்களில் 124,686 நாற்றுகள் விற்பனை செய்யப்பட்டதுடன் 283,382 நாற்றுகள் மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்துக்காக ஏனைய அரசாங்க மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன. மீதி "வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன.

### 1.4.2 விழிப்பூட்டலும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களும்

அட்டவணை 1.1 இல் காட்டப்பட்டுள்ள விழிப்பூட்டலும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களும் குறித்த காலப்பகுதிக்குள் நடாத்தப்பட்டன.

**அட்டவணை 1.1 விழிப்பூட்டலும் விரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டங்களும்**

| வகைகள் | எண்ணிக்கை |
|---|---|
| விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டம் | 1322 |
| மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் | 786 |
| மேற்கொள்ளப்பட்ட பிற நிகழ்ச்சித் திட்டங்கள் | 247 |
| **மொத்தம்** | **2,355** |

### 1 . 4. 3 பங்களிப்புடனான மரநடுகை நிகழ்ச்சித் திட்டங்கள்

"வன ரோப்பா" தேசிய மரநடுகை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்புக்களை கையளித்துள்ள பிரதான நிறுவனங்களில் ஒரு நிறுவனம் தான் இந்த வனப் பாதுகாப்புத் திணைக்களம். "வன ரோப்பா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டு 1,956.9 ஹெக்டயார் இடப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட நாற்று நடும் பணிகளுக்கு 2,153,479 நாற்றுகள் திணைக்களத்தினால் விநியோகிக்கப்பட்டன.

வனவிரிவாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் வருடாந்த வேலைத் திட்டத்தின் கீழ் பின்வரும் மரநடுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இது தொடர்பான மேலதிகத் தகவல்கள் அட்டவணை 1.2 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.2 மரநடுகை செயற்பாடுகள்**

| **செயற்பாடுகள்** | **நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை** |
|---|---|
| வீதி இருமருங்கிலுமான மர நடுகை | 26 |
| ஆற்றுப் பள்ளத்தாக்கு மற்றும் நீரோடைகளில் மர நடுகை | 53 |
| பாடசாலைகளில் மர நடுகை | 203 |
| ஏனைய அரச நிறுவனங்களுடனான மர நடுகை | 75 |
| மத வழிபாட்டுத் தளங்களில் மர நடுகை | 41 |
| பிற மர நடுகை நிகழ்ச்சித் திட்டம் | 388 |
| **மொத்தம்** | **786** |

### 1.4.4 புதிய விவசாய வனச் செய்கைகளை தாபித்தல்

இந்த ஆண்டுக்குள் 101.2 ஹெக்டயார் விவசாய வனச் செய்கை தாபிக்கப்பட்டுள்ளது. மேலதிகத் தகவல்கள் அட்டவணை 1.3 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.3. புதிய விவசாய வனச் செய்கைகளை தாபித்தல்**

| **மாவட்டம்** | **வனச் செய்கை (ஹெக்)** | **கலந்து கொண்ட கமக்காரர்களின் எண்ணிக்கை** |
|---|---|---|
| அனுராதபுரம் | 20.2 | 42 |
| அம்பாறை | 25 | 50 |
| பதுளை | 11 | 18 |
| திருகோணமலை | 05 | 10 |
| மட்டக்களப்பு | 05 | 05 |
| மொணராகல | 20 | 20 |
| மன்னார் | 10 | 20 |
| வவுனியா | 05 | 05 |
| மொத்தம் | **101.2** | **170** |

### 1.4.5. 2016/2017 ஆம் ஆண்டுகளில் தாபிக்கப்பட்ட விவசாய வனச் செய்கை முகாமை பராமரிப்பு

2016 / 2017 ஆம் ஆண்டுகளில் விவசாய வனச் செய்கை 241 ஹெக்டயாரில் விஞ்ஞான முகாமைத்துவம் செய்யப்பட்டது. மேலதிகத் தகவல்கள் இணைப்பு 1.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.4** 2016 / 2017 ஆம் ஆண்டுகளில் **தாபிக்கப்பட்ட விவசாய வனச் செய்கை முகாமை .**

| **மாவட்டம்** | **வனச் செய்கையின் அளவு (ஹெக்.)** |
|---|---|
| பதுளை | 25.0 |
| அம்பாநதோட்டை | 39.0 |
| அனுராதபுரம் | 40.0 |
| வவுனியா | 10.0 |
| அம்பாறை | 20.0 |
| திருகோணமலை | 20.0 |
| மட்டக்களப்பு | 15.0 |
| மன்னார் | 15.0 |
| மொணராகல | 41.0 |
| கண்டி | 16.0 |
| **மொத்தம்** | **241** |

### 1.4.6 வீட்டுத் தோட்ட அபிவிருத்தியும் தாவர முகாமைத்துவமும்

6087 வீட்டுத் தோட்டங்களுக்கு நாற்றுகள் வழங்கியும் தொழினுட்ப ஒத்துழைப்பு வழங்கியும் காணிகள் அபிவிருத்தி செய்யப்பட்டன. 106 தாவர முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. மேலதிகத் தகவல்கள் அட்டவணை 1.5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 1.5 வீட்டுத் தோட்ட அபிவிருத்தியும் தாவர முகாமைத்துவமும்**

| மாவட்டம் | அபிவிருத்தி செய்யப்பட்ட வீட்டுத் தோட்டங்களின் எண்ணிக்கை | தாவர முகாமைத்துவ நிகழ்சித்திட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| அனுராதபுரம் | 240 | 06 |
| பொலன்நறுவை | 300 | 05 |
| அம்பாறை | 300 | 06 |
| குருநாகல் | 370 | 05 |
| மாத்தளை | 300 | 06 |
| நுவரெலியா | 254 | 04 |
| பதுளை | 300 | 04 |
| கண்டி | 290 | 07 |
| கம்பஹா | 175 | 02 |
| புத்தளம் | 300 | 06 |
| இரத்தினபுரி | 220 | 08 |
| காலி | 230 | 02 |
| கேகாலை | 280 | 04 |
| மொணராகல | 260 | 05 |
| மட்டக்களப்பு | 300 | 05 |
| வவுனியா | 150 | 04 |
| திருகோணமலை | 300 | 07 |
| ஹம்பாந்தோட்டை | 200 | 06 |
| மாத்தறை | 280 | 04 |
| களுத்துறை | 225 | - |
| மன்னார் | 300 | 04 |
| கிளிநொச்சி | 313 | 03 |
| முல்லைத்தீவு | 200 | 03 |
| **மொத்தம்** | **6087** | **106** |

### 1.4.7 வன விரிவாக்கல் பணிக்குத் தேவையான தொடர்பாடல் கருவிகளைத் தயாரித்தல்

உரிய ஆண்டுக்குள் ஒரு தாவர சஞ்சிகையும் செய்திப் பத்திரகைகள் இரண்டு வெளியிடப்பட்டன., மக்கள் காடுகளைப் பற்றியும் சூழலைப் பற்றியும் ஆக்கத் திறன் வாய்ந்தவாறு தெளிவுபடுத்தும் நோக்கில் திணைக்கள உத்தியோகத்தர்களைக் கொண்ட தெரு நாடக் குழுவினால் நாடகக காட்சிகள் சில காண்பிக்கப்பட்டன.

## 02 ஆவது அத்தியாயம்

### வனவியல் மற்றும் வன முகாமைத்துவப் பிரிவு

### 2.1 அறிமுகம்

வன உற்பத்திகள் மற்றும் சேவை வழங்கலுக்காக காடுகளை நிலைபேறுடையதாக இயற்கைக் காடுகள் மற்றும் வனச் செய்கை முகாமைப்படுத்துதல் வனவியல் மற்றும் வன முகாமைத்துவப் பிரிவுக்கு அளிக்கப்பட்டுள்ள பிரதான பொறுப்பாகும். வனச் செய்கையைத் தாபித்தல் மற்றும் முகாமைப்படுத்தல் காடுகளை அதிகரிக்கச் செய்தல் இந்தப் பிரிவுக்கு உள்ள பிரதான கடமைகளாகும். வெட்டுமரங்களின் அறுவடைக்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துக்கு வனச்செய்கைளை விடுவிப்பதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் இந்தப் பிரிவு பங்களிப்பைச் செய்கின்றது.

### 2.2 இந்தப் பிரிவின் அடிப்படை நோக்கங்கள்

I 1995 ஆண்டின் வனத்துறை திட்டத்தின் மூலம் பிரேரிக்கப்பட்டுள்ளவாறு இயற்கை காடுகள் பற்றியும் வனச் செய்கைகள் பற்றியுமான முகாமைத்துவத் திட்டமொன்றைத் தயாரித்தல்.

II பல்வேறுபட்ட வனச் செய்கைகளின் தாவர வகைகளுக்கான முகாமைத்துவத் திட்டத்தின் மூலம் காட்டப்பட்டுள்ளவாறு விஞ்ஞான சிகிச்சை மற்றும் மரங்களை வெட்டும் நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்துவதனை மேற்பார்வை செய்தல்.

III அழிந்துபோகும் அரசாங்க இடங்களிலுள்ள காடுகளில் புதிய வனப் பயிர்களைத் தாபித்தல்.

IV மீண்டும் வனச் செய்கைகளைச் செய்தல் காடுகள் அல்லாத காணிகளை காடுகளாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் இதன் பின்னர் வனச் செய்கைகளை பராமரிப்புச் செய்தல்.

V தனியார் பிரிவுக்கு குத்தகைக்கு வழங்கிய பைனஸ் ஒளியோ ரெசினை பிரித்தெடுக்கும் பணிகளை மேற்பார்வை செய்தல்.

VI தெரிவு செய்யப்பட்ட அரச காணிகளில் மேற்கொள்ளப்படுகின்ற தனியார் பிரிவின் மீள வனச் செய்கைகளை மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துதலும் மேற்பார்வை செய்தலும்.

VII பிரதேச பெருந்தோட்ட கம்பனிகள் தனது தோட்டங்களிலிருந்து வெட்டு மரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒழுங்கு முறையொன்றை மேற்கொள்ளுகின்ற வன முகாமைத்துவத் திட்டங்களை மீளாய்வு செய்தல்.

VIII வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் நிறுவகிக்கப்படுகின்ற உல்லாச விடுதி முகாமை செய்தல் மற்றும் அவற்றைப் பராமரித்தல்.

### 2.3 நிறுவனக் கட்டமைப்பு

இந்தப் பிரிவானது காடு பேணுநரின் கீழ் நெறிப்படுத்தப்படுகின்றது. இந்த பிரிவுக்கு உரிய அனைத்துப் பணிகளையும் வலய அலுவலக மற்றும் மாவட்ட வன அலுவலக ஆளணியின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்படுகின்றது. இந்தப் பணிகளை திட்டமிடல், ஒருங்கிணைத்தல், நிருவகித்தல், வள ஒதுக்கீடு போன்ற பணிகளுக்காக காடு பேணுநருக்கு இரண்டு பதவி நிலை உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புகளும் கிடைக்கின்றன. இதற்கு மேலதிகமாக அபிவிருத்தி உதவியாளர் 01. அபிவிருத்தி உத்தியோகத்தர் 02. பகுதி வன உத்தியோகத்தர் 01 முகாமைத்துவ உதவியாளர் 02, வன வெளிக்கள உதவியாளர்கள் 03 மற்றும் ஏனைய ஆளணியினரும் ஒத்துழைப்பு வழங்குகின்றனர்.

## 2.4 பிரதான பணிகள் மற்றும் செயற்பாட்டுப் பொழிப்பும்

### 2.4.1 மீள் வனச் செய்கை

மீள் வனச் செய்கையின் கீழ் பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- வெட்டுமர உற்பத்திக்காக வனச் செய்கைகளை தாபித்தல்
- பாதுகாப்புத் தேவைப்பாடுகளுக்காக வனச் செய்கைகளைத் தாபித்தல்.
- முழுமையாக வெட்டி வீழ்த்தப்பட்ட வனச் செய்கைகளை மீள வனச் செய்கைக்காகத் தாபித்தல்.
- பைனஸ் வனச் செய்கையை விரிவான கலப்பு மர வகைகளுடனான வனச் செய்கையாக மாற்றுதல்.
- நாற்று மேடைகளை நிறுவுதலும் முகாமைத்துவம் செய்தலும்
- காட்டுத் தீ முகாமைத்துவம்
- வளர்ச்சியடையாத வனச் செய்கையை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்
- தனியார் பிரிவில் மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- மத்திய மலைநாட்டில் அமைந்துள்ள மலை உச்சியைப் பாதுகாத்தல்.

### 2.4.2 வனவியல் சிகிச்சைகளும் வனச் செய்கைகளில் அறுடையைப் பெற்றுக் கொள்ளுவதற்கான திட்டமிடலும் நடைமுறைப்படுத்தலும் மற்றும் நிருவகித்தலும்

வன வளத் தரவுகளை பயன்படுத்தி தரவுகளைத் தயாரித்து வனப் பயிர்களுக்கு ஏற்படுத்தக் கூடிய விஞ்ஞான ரீதியிலான சிகிச்சைகளை இனங்காணுதல் இந்த செயற்பாட்டை இந்தப் பிரிவினால் வேலைத்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டுள்ளது புத்துயிர்ப்புகளை அகற்றுதல், வர்த்தக ரிதிலான நலிவடைதல், வர்த்தகத்துக்கு முன்னரான நலிவடைதல், வெட்டுதல், துப்பரவு செய்தல், கணிப்பீடு மற்றும் சிறுகாடுகளின் முகாமைத்துவம் வனவியல் சிகிச்சைகளில் உட்படுத்தப்பட்டது இதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்பட்டது

### 2.4.3 அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்துடன் ஒருங்கிணைந்து பணிகளை மேற்கொள்ளல்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்குரிய வனச் செய்கைகளில் வெட்டு மரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதனால் இந்த நிறுவனத்துடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் செலுத்த வேண்டிய அரச பாகங்களை முறையாகக் கணக்கிடுதல் மற்றும் அறவிடுதல்.

### 2.4.4 பைனஸ் ஒளியோ ரெசின் பிரித்தெடுப்புப் பணிகளை நடைமுறைப்படுத்துதல்

பைனஸ் ஒளியோ ரெசின் பிரித்தெடுப்பதற்காகத் தெரிவு செய்யப்பட்ட தனியார் பிரிவுக் கம்பனிகளுக்கு கரிபீயன் பைனஸ் வனச் செய்கையைக் குத்தகைக்கு விடுதல் மற்றும் அப் பணிகள் கண்காணிக்கப்படுகின்றன.

## 2.5 காடுகளின் வளங்களை மேம்படுத்தல்.

இலங்கையிலுள்ள காடுகளை 29.7 % விகிதத்தில் இருந்து 32 % மாக அதிகரிப்பதற்காக காடுகளின் வளங்களை அதிகரிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பல்வேறுபட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி மேலே குறிப்பிடப்பட்ட நோக்கத்தை அடைவது வனவியல் வன முகாமைத்துவப் பிரிவின் பொறுப்பாகும்.

இந்த வேலைத் திட்டத்தின் கீழ் காடுகளை அதிகரிக்கச் செய்வதற்காக பிரதானமாக மூன்று வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டன. அவைகளாவன காடுகளை பாதுகாத்தலும் பேணுதலும், புதிய பிரதேசங்களில் காடுகளை விரிவுபடுத்துதல் மற்றும் தனியார் காணிகளில் மர நடுகையை மேம்படுத்தல். மேற்குறிப்பிட்ட வழிமுறைகளின் கீழ் 2018 ஆம் ஆண்டு பின்வரும் செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

### 2.5.1 சுற்றாடல் மீளமைப்பு

சுற்றாடல் மீளமைப்பின் மூலம் ஆரம்பத்திலிருந்த காடுகளை மீளமைப்பது இதன் நோக்கமாகும் இதற்கு இயற்கை புத்துயிர்ப்பு ஊக்குவிப்பு (ஒத்தழைப்பு இயற்கை புத்துயிர்ப்பு) நாற்று விதைப்பு, பரந்த மர நடுகை, உள்நாட்டு மரங்களைப் பயன்படுத்தி காணித் துண்டுகளாக வனச்செய்கைகள் மேற்கொள்ளப்பட்டன, வளர்ச்சிடையாத நாற்றுக்களின் வளர்ச்சிகளுக்கு தடையாகவுள்ள தாவரங்களை அகற்றி விதை முளைப்புக்கும் இயற்கைப் புத்துயிர்ப்புக்கும் பொருத்தமான நிலைமை உருவாக்கப்பட்டுகின்றன காட்டுத் தீயை தடுத்தல், மாடுகளினால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுத்தல் மனிதனின் ஏனைய தாக்கங்களைச் செலுத்தக் கூடிய செயற்பாடுகளைத் தடுத்தல் சிபாரிசு செய்யப்பட்ட செயற்பாடுகளாகும். இந்த முறைகளை வலயத்தின் ஏனைய பல நாடுகள் பயன்பாட்டுக்கு எடுத்துள்ளதுடன் திருப்திகரமான பெறுபேறுகளையும் பெற்றுள்ளனர். வனப் பாதுகாப்புத் திணைக்களம் 2016 ஆம் ஆண்டு பாதிப்புக்குள்ளான 600 ஹெக்டயார் காடுகளில் மீளமைப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது.

### 2.5.2 மீளமைக்கப்பட்ட வனங்களை பராமரித்தல்.

இந்த ஆண்டு 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மீள் வனச் செய்கை மேற்கொள்ளப்பட்ட 7583ஹெக்டயார் காடுகள் பராமரிக்கப்பட்டன.

2.5.3 புனரமைப்புச் செய்யப்பட்ட காடுகள் பராமரித்தல்

கலப்பு உள்நாட்டு மர வகைகளைப் பயன்படுத்தி 2015, மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் மீளமைக்கப்பட்ட பிரதேசங்கள் இந்த ஆண்டு பராமரிக்கப்பட்டன. இதன் கீழ் 420 ஹெக்டயார் வனச் செய்கை பராமரிக்கப்பட்டது..

## 2.6 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளின் முன்னேற்றம்

### 2.6.1 மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் - 2018

இக் காலப்பகுதியில் இந்தச் செயற்பாடுகளின் கீழ் 951.7 ஹெக்டயார் வனச் செய்கைகள் முழுமையாக அகற்றப்பட்டு வனச் செய்கை இடப்பரப்புகளில் தாபிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் அட்டவணை 2.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2.1. மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டம்- 2018**

| மாவட்டம் | பழைய மர வகை | புதிய மர வகை | இலக்கு (ஹெக் | முன்னேற்றம் (ஹெக்) |
|---|---|---|---|---|
| அம்பாறை | தேக்கு | காயா/ தேக்கு | 142 | 142 |
| அநுராதபுரம் | தேக்கு | தேக்கு/காயா/ | 109.5 | 109.5 |
| பொலன்நறுவை | தேக்கு | ஹல்மில்ல | 62 | 62 |
| மட்டக்களப்பு | தேக்கு | காயா | 150 | 150 |
| முல்லைத்தீவு | தேக்கு | தேக்கு | 50 | 50 |
| வவுனியா | தேக்கு | தேக்கு | 35 | 35 |
| மாத்தளை | தேக்கு | தேக்கு | 33 | 33 |
| மொணறாகலை | தேக்கு | தேக்கு | 52.4 | 52.4 |
| பதுளை | பைனஸ் /இயுகெலிப்டஸ் | இயுகெலிப்டஸ் /காயா | 67.6 | 67.6 |
| நுவரெலியா | பைனஸ் /இயுகெலிப்டஸ் | இயுகெலிப்டஸ் | 43.2 | 43.2 |
| களுத்துறை | பைனஸ்/கலப்பு | ஹொரா/ கலப்பு | 40 | 37.5 |
| குருநாகல் | தேக்கு | தேக்கு | 59.1 | 59.1 |
| கம்பஹா | எகேசியா | உள்நாட்டு மரங்கள் | 12 | 10 |
| புத்தளம் | தேக்கு/காயா/ | மதுரை | 40 | 40 |
| இரத்தினபுரி | காயா/ஹல்மில்ல் | இயுகெலிப்டஸ்// எகேசியா | 30 | 30 |
| மாத்தறை | பைனஸ் | ஹொரா/ கலப்பு | 30.4 | 30.4 |
| **மொத்தம்** | | | **956.2** | **951.7** |

**2.6.2. நாற்று உற்பத்திகள்- 2018**

மேற்கூறப்பட்ட மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்காக 1748639 நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. மேலதிகத் தகவல்கள் அட்டவணை 2.2 இல் காட்டப்பட்டுள்ளது. மீள் வனச் செய்கைக்கான பிரதான விசேட மரங்களாக தேக்கு, இயுகெலிப்டஸ் மற்றும் உள்நாட்டு மர வகைகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்துக்காகப் பயன்படுத்தப்பட்டன.

**அட்டவணை 2.2 நாற்று உற்பத்தி – 2018**

| மாவட்டம் | மரங்கள் | நாற்றுக்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| அம்பாறை | தேக்கு /காயா / | 249920 |
| அநுராதபுரம் | /தேக்கு /காயா | 203209 |
| மட்டக்களப்பு | காயா | 240000 |
| பொலன்நறுவ | ஹல்மில்ல | 99200 |
| இரத்தினபுரி | காயா/ காயா/இலுப்பை/மருதை/ மாதங்/விளாத்தி/பலா/ஹல்மில்ல/மில்ல | 48000 |
| மாத்தறை | ஹொரா / கலப்பு | 55500 |
| மாத்தளை | தேக்கு /காயா | 80000 |
| கண்டி | உள்நாட்டு கலப்பு | 12000 |
| நுவரெலியா | இயுகெலிப்டஸ் | 81000 |
| மொணறாகல | தேக்கு | 74200 |
| பதுளை | இயுகெலிப்டஸ்/ காயா | 149770 |
| களுத்துறை | ஹொரா / கலப்பு | 51000 |
| குருநாகல் | தேக்கு | 129000 |
| **கம்பஹா** | மஹோகனி | 50000 |
| **புத்தளம்** | காயா /மதுரை | 68000 |

| | | |
|---|---|---|
| மன்னார் | தேக்கு | 7840 |
| முல்லைத்தீவு | தேக்கு | 88000 |
| வவுனியா | தேக்கு | 62000 |
| மொத்தம் | | 1748639 |

### 2.6.3 வளர்ச்சியடையாத வனச் செய்கைப் பராமரிப்பு - 2018

வனச் செய்கை பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புற்களை அகற்றுதல் பசளையிடுதல், காட்டுத்தீயைக் கட்டுப்படுத்தல் நாற்றுகள் முளைக்காத இடங்களில் நாற்றுகளை நடுதல் போன்றவை மேற்கொள்ளப்பட்டன. குறித்த ஆண்டிலே 2349.44 ஹெக்டயாரில் வனச் செய்கைகள் பராமரிக்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக விபரங்கள் அட்டவணை 2.3 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.3. வளர்ச்சியடையாத வனச் செய்கைப் பராமரிப்பு- 2018**

| மாவட்டம் | 2016ஆண்டின் போது உருவாக்கப்பட்ட 01வருட காலத்தைக் கொண்ட வனச் செய்கையின் அளவு (ஹெக்) | | | 2015ஆண்டின் போது உருவாக்கப்பட்ட 2 வருட காலத்தைக் கொண்ட வனச் செய்கையின் அளவு (ஹெக்) | | | 2014ஆண்டின் போது உருவாக்கப்பட்ட 03 வருட காலத்தைக் கொண்ட வனச் செய்கையின் அளவு (ஹெக்) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | மரவகை | இலக்கு (ஹெக்) | முன்னேற்றம் (ஹெக் ) | மரவகை | இலக்கு (ஹெக்) | முன்னேற்றம் (ஹெக் ) | மரவகை | இலக்கு (ஹெக்) | முன்னேற்றம் (ஹெக் ) |
| குருநாகல் | தேக்கு | 83.34 | 83.34 | தேக்கு/ காயா | 62.61 | 62.61 | தேக்கு/காயா | 95.46 | 95.46 |
| கம்பஹா | - | - | - | - | | | ஹொரா/கலப்பு | 24.8 | 24.8 |
| புத்தளம் | | | | தேக்கு | 54.4 | 54.4 | - | - | - |
| களுத்துறை | ஹொரா / கலப்பு | 31 | 31 | ஹொரா | 25 | 25 | ஹொரா | 15 | 15 |
| அநுராதபுரம் | தேக்கு/காயா ஹல்மில்ல | 101.4 | 101.4 | தேக்கு | 79.8 | 79.8 | | 72 | 72 |
| அம்பாறை | தேக்கு/காயா | 87 | 87 | தேக்கு | 85 | 85 | தேக்கு | 72 | 72 |
| பொலன்நறுவை | காயா/ ஹல்மில்ல/ வேம்பு | 75 | 75 | | 35 | 35 | | 50 | 50 |
| மட்டக்களப்பு | காயா | 55 | 55 | காயா | 25 | 25 | காயா | 20 | 20 |
| திருகோணமலை | | | | தேக்கு | 56 | 56 | - | - | - |
| வவுனியா | தேக்கு | 31 | 31 | தேக்கு | 35 | 35 | - | - | - |
| முல்லைத்தீவு | தேக்கு | 48 | 48 | தேக்கு | 40 | 40 | தேக்கு | 20 | 20 |
| கண்டி | - | - | - | | | | உள்ளூர் வகை | 10 | 10 |
| நுவரெலியா | இயுகெலிப்டஸ் | 51 | 51 | இயுகெலிப்டஸ் | 74.8 | 74.8 | இயுகெலிப்டஸ் | 22.8 | 22.8 |
| மொணறாகல | தேக்கு | 50.3 | 50.3 | தேக்கு/காயா | 110.95 | 110.95 | தேக்கு/காயா | 58.04 | 58.04 |
| மாத்தளை | காயா | 69.6 | 69.6 | காயா | 75.0 | 75.0 | தேக்கு | 75 | 75 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பதுளை | இயுகெலிப்ட ஸ் | 60.2 | 60.2 | இயுகெலிப்ட ஸ் | 54 | 54 | இயுகெலி/ சைப்ரஸ் | 35 | 35 |
| இரத்தினபுரி | கலப்பு | 30 | 30 | | | | கலப்பு | 16 | 16 |
| மாத்தறை | ஹொர / கலப்பு | 36.4 | 36.4 | ஹொர / கலப்பு | 42.2 | 42.2 | ஹொர / கலப்பு | 27.4 | 27.4 |
| ஹம்பாந் தோட்டை | தேக்கு | 17.6 | 17.6 | கலப்பு | 10 | 10 | - | - | - |
| கேகாளை | - | - | - | கலப்பு | 19.84 | 19.84 | - | - | - |
| **மொத்தம்** | | **826.84** | **826.84** | | **884.6** | **884.6** | | **613.5** | **613.5** |

### 2.7. வனச் செய்கைகளில் வனவியல் தொழிற்பாடுகள் - 2018

குறித்த காலப் பகுதியில் தெரிவு செய்யப்பட்ட சில வனச் செய்கைகளில் பின்வரும் வனவியல் தொழிற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

- வர்த்தகத்திற்கு முன்னரான நலிவடைவு.
- வர்த்தக நலிவடைவு
- வெட்டு மரங்களை வீழ்த்தியதன் பின்னரான புள்ளிவிபரம்.
- சிறிய காடுகளின் பராமரிப்பு.
- துப்புரவு செய்தல்.

### 2.7.1 வர்த்தகத்திற்கு முன்னரான நலிவடைவு

8 மாவட்டங்களில் வர்த்தகத்திற்கு முன்னரான நலிவடைவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிக விபரங்கள் அட்டவணை 2.4 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.4 வர்த்தகத்திற்கு முன்னரான நலிவடைவு- 2018**

| மாவட்டம் | மரவகை | இலக்கு (ஹெக்டயார்) | முன்னேற்றம் (ஹெக்டயார்) |
|---|---|---|---|
| இரத்தினபுரி | *தேக்கு/இயுகெலிப்டஸ்* | 57 | 57 |
| பதுளை | *தேக்கு/இயுகெலிப்டஸ்* | 27.8 | 27.8 |
| நுவரெலியா | *இயுகெலிப்டஸ்* | 3 | 3 |
| மாத்தளை | *தேக்கு* | 29 | 29 |
| மொணறாகல | *தேக்கு* | 40.3 | 40.3 |
| கண்டி | *இயுகெலிப்டஸ்* | 14.5 | 14.5 |
| அநுராதபுரம் | *காயா/தேக்கு* | 49.6 | 49.6 |
| குருநாகல் | *காயாதேக்கு* | 261.32 | 311.12 |
| **மொத்தம்** | | **482.52** | **532.32** |

### 2.7.2 வர்த்தக நலிவடைவு

8 மாவட்டங்களில் வர்த்தக நலிவடைவுகள் மேற்கொள்ளப்பட்டன. மேலதிக விபரங்கள் அட்டவணை 2.5 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2.5 வர்த்தக நலிவடைவு - 2018**

| மாவட்டம் | மர வகை | இலக்கு (ஹெக்டயார்) | முன்னேற்றம் (ஹெக்டயார்) |
|---|---|---|---|
| இரத்தினபுரி | தேக்கு | 32.2 | 32.2 |
| ஹம்பாந்தோட்டை | தேக்கு | 50 | 50 |
| மாத்தளை | */காயா* | 50 | 50 |
| நுவரெலியா | *இயுகெலிப்டஸ்* | 187 | 155 |
| பதுளை | *இயுகெலிப்டஸ்* | 232 | 258.3 |
| அனுராதபுரம் | தேக்கு | 66 | 66 |
| குருநாகல் | தேக்கு | 37.8 | 37.8 |
| புத்தளம் | காயா | 46.49 | 46.48 |
| **மொத்தம்** | - | **701.49** | **695.78** |

### 2.7.3 வளர்ந்த வனச் செய்கைகளில் புத்துயிர்ப்பை அகற்றுதல்

மீள்வனச் செய்கையில் மேற்கொள்ளப்படுகின்ற புத்துயிர்ப்பை அகற்றுதல் இந்த செயற்பாட்டுக்கு உரியதானதாகும். (அட்டவணை 2..1) மலை நாட்டுப் பிரதேசங்களில் இயுகெலிப்டஸ் வனச் செய்கையிலே முழுமையான அகற்றல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இந்த காணித்துண்டுகளில் தேக்கு நடப்பட்டது. சில வளர்ந்த பைனஸ் வனச் செய்கையின் முழுமையான அகற்றலுக்கு உட்படுத்தி அந்த இடங்களில் உள்நாட்டு மர வகைகளும் நடப்பட்டன. உலர்ந்த வலயத்தில் தேக்கு வனச் செய்கையின் இரண்டாம் சுற்றில் பிரதானமாக மீண்டும் தேக்கு மரங்கள் நடப்பட்டன. எவ்வாறாயினும் யானைகளின் அச்சுறுத்தல்களுக்கு உட்பட்ட பிரதேசங்களில் தேக்குக்குப் பதிலாக காயா, மற்றும் உள்நாட்டு மர வகைகள் செய்கைபன்னப்பட்டன. இந்தச் செயற்பாடுகள் இயுகெலிப்டஸ்,பைனஸ் மற்றும் தேக்கு முகாமைத்துவ திட்டங்களுக்கு அமைவாக நடப்பட்டன.

### 2.7. 4 . வெட்டு மரங்களை வீழ்த்தியதன் பின்னரான புள்ளிவிபரம்

வனச் செய்கைகளில் வர்த்தகவியல் நலிவடைவு மற்றும் வர்த்தகவியலுக்கு முன்னரான நலிவடைவு மேற்கொண்டதன் பின்னர் வெட்டுமரங்களை வீழ்த்தியதன் பின்னரான புள்ளிவிபரம் மேற்கொள்ளப்பட்டது. (அட்டவணை 2.6)

**அட்டவணை 2.6 வெட்டு மரங்களை வீழ்த்தியதன் பின்னரான புள்ளிவிபரம்- 2018**

| மாவட்டம் | மரவகை | இலக்கு (ஹெக்) | முன்னேற்றம் (ஹெக்) |
|---|---|---|---|
| புத்தளம் | *தேக்கு/ காயா* | 46.49 | |
| குருநாகல் | *தேக்கு/ காயா* | 299.12 | 373.62 |
| மாத்தளை | *காயா* | 79 | 29 |
| நுவரெலியா | *இயுகெலிப்டஸ்* | 260.2 | 271.2 |
| மொணராகல | *தேக்கு* | 40.3 | 40.3 |
| கண்டி | *இயுகெலிப்டஸ்* | 14.5 | 14.5 |
| பதுளை | *இயுகெலிப்டஸ் /தேக்கு* | 390.8 | 91.3 |
| அனுராதபுரம் | *தேக்கு* | 115.6 | 49.6 |
| ஹம்பாந்தோட்டை | *தேக்கு* | 50 | |
| இரத்தினபுரி | *இயுகெலிப்டஸ் /தேக்கு* | 89.2 | 57 |
| **மொத்தம்** | | **1385.21** | **926.52** |

**2 .7.5 சிறிய காடுகளின் பராமரிப்பு**

. மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறு ( அட்டவணை 2.7)

**அட்டவணை 2.7 சிறிய காடுகளின் பராமரிப்பு – 2018**

| மாவட்டம் | மரவகை | இலக்கு (ஹெக்டயார்) | முன்னேற்றம் (ஹெக்டயார்) |
|---|---|---|---|
| **பொலன்நறுவை** | *இயுகெலிப்டஸ்* | 92 | 92.00 |
| **மொத்தம்** | | **92** | **92.00** |

**2.7.6 துப்புரவு செய்தல்**

152.6 ஹெக்டயார் துப்பரவு செய்தமை பின்வருமாறு (அட்டவணை 2.8).

அட்டவணை 2.8 துப்பரவு செய்தல் - 2018

| மாவட்டம் | இலக்கு (ஹெக்.) | முன்னேற்றம் (ஹெக்.) |
|---|---|---|
| அனுராதபுரம் | 15 | 15 |
| அம்பாறை | 26 | 26 |
| மட்டக்களப்பு | 50 | 50 |
| மன்னார் | 30 | 30 |
| பதுளை | 20 | 55 |
| நுவரெலியா | 17 | 49.4 |
| கண்டி | 14.5 | 14.5 |
| மாத்தளை | 18.5 | 18.7 |
| புத்தளம் | 25 | 25 |
| குருநாகல் | 27.5 | 46.1 |
| களுத்துறை | 20 | 42.9 |
| இரத்தினபுரி | 25 | 25 |
| ஹம்பாந்தோட்டை | 25 | 35 |
| **மொத்தம்** | **313.5** | **432.6** |

2.7.7 மத்திய மலைநாட்டின் மலையுச்சியைப் பேணுதல்

அட்டவணை : 2.9 - மலையுச்சிகளில் புதிய வனச் செய்கைளைத் தாபித்தல்
(2017 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட)

| மாவட்டம் | இலக்கு (ஹெக்.) | முன்னேற்றம் (ஹெக்.) |
|---|---|---|
| மாத்தளை | 6.4 | 6.4 |
| பதுளை | 55.0 | 55.0 |
| மொத்தம் | **61.4** | **61.4** |

அட்டவணை 2.10 **மத்திய மலைநாட்டின் மலையுச்சியின் வனச் செய்கை** (2015 ஆம் ஆண்டுகளில் தாபிக்கப்பட்ட) **பராமரிப்பு.**

| **மாவட்டம்** | **இலக்கு (ஹெக்.)** | **முன்னேற்றம் (ஹெக்.)** |
|---|---|---|
| நுவரெலியா | 20.0 | 20.0 |
| பதுளை | 22.5 | 22.5 |
| **மொத்தம்** | **42.5** | **42.5** |

**2.7.8. பைனஸ் வனச் செய்கையை அகன்ற இலை வனச் செய்கையாக மாற்றுதல்**
**அட்டவணை 2.11 அகன்ற இலை வனச் செய்கையைத் தாபித்தல்**

| **மாவட்டம்** | **இலக்கு (ஹெக்.)** | **முன்னேற்றம் (ஹெக்.)** |
|---|---|---|
| மாத்தறை | **4.8** | **4.8** |
| பதுளை | **20.5** | **20.5** |
| **மொத்தம்** | **25.3** | **25.3** |

**அட்டவணை 2.12 - 2017 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட அகன்ற இலை வனச் செய்கைப் பராமரிப்பு**

| மாவட்டம் | இலக்கு (ஹெக்.) | முன்னேற்றம் (ஹெக்.) |
|---|---|---|
| கண்டி | 24.0 | 24.0 |

| | | |
|---|---|---|
| காலி | 16.0 | 16.0 |
| நுவரெலியா | 2.0 | 3.5 |
| **மொத்தம்** | **42.0** | **43.5** |

**அட்டவணை 2.13 - 2016 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட அகன்ற இலை வனச் செய்கைப் பராமரிப்பு**

| **மாவட்டம்** | **இலக்கு (ஹெக்.)** | **முன்னேற்றம் (ஹெக்.)** |
|---|---|---|
| இரத்தினபுரி | 20.4 | 20.4 |
| **மொத்தம்** | **20.4** | **20.4** |

**அட்டவணை 2.14 - 2015 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட அகன்ற இலை வனச் செய்கைப் பராமரிப்பு**

| **மாவட்டம்** | **இலக்கு (ஹெக்.)** | **முன்னேற்றம் (ஹெக்.)** |
|---|---|---|
| இரத்தினபுரி | 27.0 | 27.0 |
| **மொத்தம்** | **27.0** | **27.0** |

### 2.7.9 காடுகளின் குணாம்சங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்

**பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன (அட்டவணை 2.15)**

**அட்டவணை 2.15 காடுகளின் குணாம்சங்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம்**

| | **நிகழ்ச்சித் திட்டம்** | **இலக்கு (ஹெக்.)** | **முன்னேற்றம் (ஹெக்.)** |
|---|---|---|---|
| 1 | ஒத்துழைப்பு வழங்கிய இயற்கைப் புத்துயிர்ப்பு காணிப் பராமரிப்பு (1 ஆம் ஆண்டு) | 600 | 600 |
| 2 | ஒத்துழைப்பு வழங்கிய இயற்கைப் புத்துயிர்ப்பு மேற்கொள்ளப்பட்ட காணிப் பராமரிப்பு (2 ஆம் ஆண்டு) | 6563 | 6563 |
| 3 | மீள் வனச் செய்கை காணிப் பராமரிப்பு | 420 | 420 |
| **மொத்தம்** | | **7583** | **7583** |

### 2.7.10 பைனஸ் வனச் செய்கையின் மூலம் ஒலியோ ரெசின் பிரித்தெடுப்பு - 2018

பின்வரும் 5 தனியார் அமைப்புக்கள், தமது வர்த்தக மட்டத்திலான ரெசின் பிரித்தெடுப்புக்களுக்கான உடன்படிக்கைகளை நீடித்துள்ளதுடன் வனச் செய்கை ரெசின் பிரித்தெடுப்பு நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டு பூராவும் மேற்கொள்ளப்பட்டன. இதற்குரியதான தகவல்கள் அட்டவணை 2.16 இல் காட்டப்பட்டுள்ளது.

1. கொனிபர் புரோடக்டிஸ் புரோசெசின் (தனியார்) கம்பனி
2. ஒரியன்டல் ரெசின் (தனியார்) கம்பனி
3. பயனியர் லங்கா பைனஸ்(தனியார்) கம்பனி
4. JCT.கெமிக்கல்ஸ் (தனியார்) கம்பனி
5. சிலவ் மொபைல்

**அட்டவணை 2.16 2018 ஆம் ஆண்டு குத்தகைக்கு விடப்பட்ட காணிகளின் அளவும் குத்தகை வருமானமும்**

| அமைப்பின் பெயர் | குத்தகைக்கு விடப்பட்ட காணிகளின் அளவு (ஹெக்) | குத்தகை வருமானம் (ரூபா) |
|---|---|---|
| 1. கொனிபர் கொனிபர் புரோடக்டிஸ் புரோசெசின்(தனியார்) கம்பனி | 34.3 | 224596.18 |
| 2. பயனியர்லங்கா பைனஸ்(தனியார்) கம்பனி | 343.14 | 2060161.92 |
| 3. ஒரியன்டல் ரெசின் (தனியார்) கம்பனி | 354.8 | 2199885.51 |
| 4. ஜே.சீ.டீ.கெமிக்கல்ஸ் (தனியார்) கம்பனி | 198.9 | 1105633.39 |
| 5. சிலவ் மொபைல் | 35.5 | 418553.52 |
| **மொத்தம்** | **966.64** | **6,008,830.52** |

### 2.7.11 அரசாங்க திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகை 2018

2018 ஆம் ஆண்டு அரச மரக்கூட்டுத்தாபனத்தினால் அரசாங்கத் திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய பங்குத்தொகை 1,033,853,193.16 ரூபாவாகும். இதில் பழைய வனச் செய்கை முகாமைத்துவத்தின் மூலம் பெறப்பட்ட வெட்டுமரங்களின் பெறுமதி 109,299,339.05 ரூபாவாகும் புத்துயிர்ப்பு அகற்றுதலின் மூலம் பெற்றுக் கொண்ட வெட்டுமரங்கள் 869,568,976.40 ரூபாவாகும் வனத்தில் புரியப்பட்ட குற்றங்களின் மூலம் கைப்பற்றப்பட்டு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய வெட்டுமரங்களின் பெறுமதி 54,984,877.71 ரூபாவும் உள்ளடங்கும்.

### 2.7.12. தனியார் பிரிவின் மீள் வனச் செய்கை

தனியார் பிரிவின் வளங்கள் வனச் செய்கையின் அபிவிருத்திக்கு உபயோகப்படுத்தும் நோக்கில் தனியார் பிரிவின் மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்டம் நிருமாணிக்கப்பட்டது. இந் நிகழ்ச்சித் திட்டத்தின் இரண்டு கட்டங்களும் 2000 ஆம் ஆண்டும் 2002 ஆம் ஆண்டும் ஆரம்பிக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் தனியார் பிரிவுடன். ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைகள் அட்டவணை 2.18 இன் மூலம் காட்

**அட்டவணை: 2.17 2018 ஆண்டில் தனியார் பிரிவின் மீள் வனச் செய்கை நிகழ்ச்சித் திட்ட நிலைமை .**

| மாவட்டம் | பிரதேசம் | உடன்படிக்கை இல. | மரவகை | கட்டம் | | அளவு (ஹெக்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | I | II | |
| குருநாகல் | கல்கமுவ | 1070 | தேக்கு | ✓ | | 17.80 |
| | கல்கமுவ | 1108 | தேக்கு | ✓ | | 11.42 |
| | கல்கமுவ | 1091 | தேக்கு | ✓ | | 6.244 |
| அநுராதபுரம் | அநுராதபுரம் | 2002/01 | தேக்கு | | ✓ | 40.00 |
| | அநுராதபுரம் | 2002/09 | தேக்கு | | ✓ | 83.00 |
| | கெக்கிராவ | 2002/07 | தேக்கு | | ✓ | 35.00 |
| | கெக்கிராவ | 2002/05 | தேக்கு | | ✓ | 4.00 |
| | அநுராதபுரம் | 2002/12 | தேக்கு | | ✓ | 4.00 |
| | அநுராதபுரம் | 17 | தேக்கு | ✓ | | 20.234 |
| | கெக்கிராவ | 177 | தேக்கு | ✓ | | 4.00 |
| | கெகிராவ | 234 | தேக்கு | ✓ | | 14.77 |
| | அநுராதபுரம் | 230 | தேக்கு | ✓ | | 4.02 |
| | அநுராதபுரம் | 168 | தேக்கு | ✓ | | 6.02 |
| பொலன்நறுவை | ஹபரன | 2002/26 | கலப்பு | | ✓ | 47.00 |
| மாத்தளை | நாஉல | 1180 | தேக்கு | ✓ | | 9.50 |
| | நாஉல | 1228 | தேக்கு | ✓ | | 4.00 |
| | நாஉல | 2002/15 | தேக்கு | | ✓ | 3.00 |
| | நாஉல | 2002/20 | தேக்கு/ காயா | | ✓ | 90.00 |
| | நாஉல | 2002/18 | தேக்கு | | ✓ | 5.00 |
| | நாஉல | 2002/16 | தேக்கு | | ✓ | 4.00 |
| மொத்தம் | | | | 10 | 10 | 413.008 |

### 2.7.13. வனச் செய்கைகளினால் பெறப்பட்ட அறுவடை

இந்த ஆண்டுக்குள் மேற்கொள்ளப்பட்ட பல்வேறுபட்ட வெட்டுமர அகற்றுதல் மற்றும் வனவியல் சிகிச்சை மூலம் பெற்றுக் கொண்ட வெட்டுமரத்தின் அளவின் பொழிப்பு அட்டவணை 2.18 இல் காட்டப்பட்டுள்ளது. இந்த நெறிப்படுத்துகைகளில் வர்த்தகத்திற்கு முன்னரான நலிவடைதல், வர்த்தக ரீதியான நலிவடைதல், புத்துயிர்ப்பு அகற்றல் தேர்வுக்குரிய அகற்றல் உள்ளடக்கப்பட்டுள்ளன. சிறிய தர அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு காடுகளை துப்புரவாக்கியதன் மூலமும் கிடைக்கப்பெற்ற வெட்டுமரங்களும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. 2018 ஆண்டு அரசாங்க காடுகளிலிருந்து பெறப்பட்ட அனைத்து விதமான வெட்டு மரங்களின் விற்பனைப் பெறுமதி 3,295,209,036.70 ரூபாவாகும்.

**அட்டவணை 2.18 வன வளங்களினால் கிடைக்கப் பெற்ற வருமானம் – 2018**

| மரவகை | நலிவடையச் செய்ததனால் | புத்துயிர்ப்பை அகற்றியதனாலும் | முழுமையான அறுவடை m³ | நன்கொடையாக கிடைக்கப் பெற்ற | வனக் குற்றங்களின் கீழ் கிடைக்கப் | மொத்தம் | சந்தையின் பெறுமதி (ரூபா) வரி இல்லாமல் |
|---|---|---|---|---|---|---|---|

| | கிடைக்கப் பெற்ற அறுவடை M³ | வெட்டிய தனாலும் கிடைக்கப் பெற்ற வருமானம் m³ | | வெட்டு மரங்களின் அறுவடை | பெற்ற வெட்டு மரங்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| தேக்கு மரக்குற்றி(m³) | 2,427 | 32,359 | 247 | 613 | 265 | 35,911 | 1,913,501,649.50 |
| நெதுன் மரக்குற்றி(m³) | - | - | - | 18 | 6 | 24 | 914,448.00 |
| மெகோகனி மரக்குற்றி(m³) | - | 8 | 1 | 881 | 124 | 1,014 | 42,784,716.00 |
| காட்டாமணக்கு மரக்குற்றி(m³) | - | 7 | 209 | 34 | 4 | 254 | 7,213,452.10 |
| அதிவிசேட மரக் குற்றி | - | 39 | 329 | 1,341 | 534 | 2,244 | 99,401,063.04 |
| விசேட மரக் குற்றி | 509 | 824 | 2,317 | 2,104 | 163 | 5,917 | 144,455,196.60 |
| Iஆம்வகுப்பு வெட்டுமரக்குற்றி (m³) | 9 | 518 | 1,293 | 1,840 | 67 | 3,727 | 62,979,869.16 |
| IIஆம்வகுப்பு வெட்டுமரக்குற்றி (m³) | 730 | 5,823 | 63 | 3,220 | 142 | 9,978 | 153,941,583.46 |
| III ஆம்வகுப்பு வெட்டுமரக்குற்றி (m³) | 3 | 152 | 1,830 | 2,940 | 359 | 5,282 | 28,082,101.67 |
| பைனஸ் மரக்குற்றி(m³) | 5 | 36,286 | 1,438 | 5,802 | 226 | 43,756 | 880,203,742.40 |
| அரிந்தவெட்டு மரம் m³ | - | - | 244 | 342 | 322 | 908 | 79,676.209.89 |
| மின்சார கணுக்கள் (எண்ணிக்கை) | 8031 | 243 | 67 | - | - | 8,341 | 86,487,829.00 |
| சிலிப்பர் குற்றிகள் (எண்ணிக்கை) | - | 23,140 | - | 79 | - | 23,219 | 247,259,131.00 |
| விறகு m³ | 6,153 | 33,561 | 24,907 | 13,868 | 133 | 78,622 | 47,330,143.00 |
| சுற்றுவட்டக்கணு (எண்ணிக்கை) | 39,198 | 37,270 | 13,511 | 42 | 435 | 90,456 | 11,759,280.00 |
| வட்டக்கணு (எண்ணிக்கை) | 59,176 | 14,178 | 3,140 | 4,649 | 1,692 | 82,835 | 14,827,465.00 |
| வெளிப்பட்டை (எண்ணிக்கை) | 275 | 3,723 | - | 51 | 43 | 4,092 | 605,616.00 |
| யானை வேலிக்கான கணுக்களின் எண்ணிக்கை | 7,220 | 2,221 | 2,186 | - | - | 11,627 | 45,403,435.00 |
| மொத்தம் | | | | | | | **2,861,543,53** |

**2.7.14 உல்லாச விடுதிகளினால் பெறப்பட்ட வருமானம் - 2018.**

உல்லாச விடுதிகள், பாதுகாப்பு நிலையங்கள், பார்வைக் கூடங்கள் மற்றும் முகாம்களை பொது மக்களுக்கு குத்தகைக்கு விட்டதன் மூலம் 8,828,099.01 ரூபா வருமானமாக ஈட்டப்பட்டது. இது தொடர்பான மேலதிகத் தகவல்கள் அட்டவணை 2.19 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை: 2.19 உல்லாச விடுதிகளினால் பெறப்பட்ட வருமானம் - 2018.**

| சுற்றுலா விடுதியின் பெயர் | வருமானம் (ரூபா) |
|---|---|
| அனுராதபுரம் சுற்றுலா விடுதி | 197455.00 |
| நுவரெலியா | 160080.50 |
| பட்டிபொல | 13800.00 |
| கும்பல்பொல | 32258.50 |
| தனமல்வில | 40595.00 |
| மின்னேரியா | 137410.00 |
| நாதுகல | 575.00 |
| ஒஹிய | 225687.50 |
| ஹம்பாந்தோட்டை | 8280.00 |
| கண்டி | 62560.00 |
| கதிர்காமம் | 102975.00 |
| அப்புத்தளை | 142427.00 |
| கண்ணெலிய | 1351558.00 |
| தும்பர காட்டு விடுதி | 1065785.00 |
| கண்ணெலிய அ. இலக்கம் 4 | 2357.50 |
| டின்ஸ்டன் பேணல் நிலையம் | 206287.00 |
| கந்தேஎல | 848412.50 |
| தெல்கமுவ ஓயா | 517787.50 |
| ரம்புக்ஒழுவ | 305440.00 |
| உறங்கல் அறை | 460690.00 |
| கெபின் 1,2,3 | 477623.00 |
| சிங்கராஜ ப.உ | 10292.50 |
| பிட்டதெனிய | 770947.51 |
| ஜின்கங்கை | 294687.50 |
| ஹிரிகட்டு ஓயா | 882735.00 |
| மோனிங் சைட் | 440365.00 |
| முருகெலே வத்த | 135930.00 |
| மின்னேரியா ( புதிய) | 61467.50 |
| ஹம்பாந்தோட்டை முகாம். | 73025.00 |
| பொலத்தாவ முகாம் | 23000.00 |
| கொஸ்குலான வன விடுதி | 166405.00 |
| ஹிரிகட்டு ஓயா வன விடுதி | 9200.00 |
| ஹிரிகட்டு ஓயா | 882735.00 |
| மோனிங் சைட் | 440365.00 |
| முரகெலேவத்த | 135930.00 |
| மின்னேரியா ( புதிய) | 61467.50 |
| ஹம்பாந்தோட்டை முகாம் | 73025.00 |
| பொல்லத்தாவ முகாம். | 23000.00 |
| கொஸ்குலான வன முகாம் | 166405.00 |
| ஹிரிகட்டு ஓயா முகாம் | 9200.00 |
| மொத்தம் | **8,828,099.01** |

2.7.15 நிதிசார் முன்னேற்றம் -2018

வன புள்ளி விபரங்களுக்கும் முகாமைப் பணிகளுக்கு 598,000,000 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதுடன் அதில் 596,671,767.76 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டது. இது தொடர்பான மேலதிக விபரங்கள் அட்டவணை 2.20 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 2. 20 வனப் புள்ளிவிபர முகாமைப்பிரிவின் நிதிசார் முன்னேற்றம் – 2018**

| நடவடிக்கைகள் | ஒதுக்கீடு (ரூ.) | செலவு (ரூ.) | % |
|---|---|---|---|
| கைத்தொழில் வனச் செய்கையை தாபித்தல் மற்றும் முகாமைத்துவம் | 325,000,000 | 324,671,632.81 | 99.89 |
| பைனஸ் வனச் செய்கையை விரிவான இலைகளைக் கொண்டதாக மாற்றுதல் | 10,000,000 | 9,000,550.95 | 99.99 |
| மத்திய மலைநாட்டின் மலையுச்சியை பராமரித்தல் | 8,000,000 | 8,000,000.00 | 100 |
| வனங்களை அதிகரித்தல் | 255,000,000 | 254999584.00 | 99.77 |
| **மொத்தம்** | **598,000,000** | **596,671,767.76** | **99.77** |

# 3 வது அத்தியாயம்
# வனப் புள்ளி விபர பௌதீக தகவல் முறைமை பிரிவு

## 3.1. அறிமுகம்

வனப் புள்ளிவிபர பௌதீக தகவல் முறைமை பிரிவு பிரதானமாக நாட்டின் வன வளத்தைப் பாதுகாத்தல் மற்றும் முகாமைக்குத் தேவையான தகவல்களை வழங்கும் பெறுப்புக்களைக் கொண்ட பிரிவாகும். இதன் பிரதான பணியானது நாட்டிலுள்ள காடுகளை அளத்தல், வரைபடமாக்குதல்,காடுகளின் எல்லைகளைக் குறியீடு இடுதல், இயற்கை மற்றும் மக்களால் ஆக்கப்பட்ட காடுகளை கணிப்பீடு செய்தல் வனக் காடுகளின் புள்ளிவிபர தரவுகள் அடங்கிய தரவுப் பொதியைப் பராமரித்தல், திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளின் செயற்பாடுகளுக்குத் தேவையான எண்ணியல் வரைபடம் தயாரித்தல், பேணல் காடுகள் என பிரகடனப்படுத்தலுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல் அவற்றை பரிசோதனை செய்தல் ஆகும். ,இதற்கு மேலதிகமாக அரச மரக் கூட்டுத்தாபனத்தினால் வெட்டுவதற்காக வழங்கப்படுகின்ற வனச் செய்கைக்காக அரச மரக் கூட்டுத்தாபனம் செலுத்த வேண்டிய அரச பாகங்களை கணக்கிடுதலும் இந்தப் பிரிவின் பொறுப்பாகும். அத்துடன் பழைய ஆகாய நிழல்படங்கள்,எண்ணியல் தரவுகள், பூமி வரைபடங்கள், ஆகாய புகைப்படத்திலிருந்து பெற்றுக் கொண்ட கோடுகள் காட்டுகின்ற பூமி வரைபடங்களை பாதுகாப்பாக களஞ்சியப்படுத்தி வைப்பதும் இந்தப் பிரிவின் பொறுப்பாகும்.

## 3.2 பிரதான நோக்கங்கள்

1. வன முகாமைத்துவத்தை திறமுறையாக உருவாக்குவதற்கு நாட்டிலுள்ள வன வளங்களை இனங் காண்பதற்கும் அவற்றின் அமைவை அறிந்து கொள்வதற்கும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் உள்ள இயற்கைக் காடுகளையும் வனச் செய்கைகளையும் வரைபடமாக்குதல்.
2. வனச்செய்கை முகாமைத்துவத்துக்குத் தேவையான தகவல்களை சேகரிப்பதற்கு புள்ளிவிபரத் தரவுகளைச் சேகரித்தலும் களஞ்சியப்படுத்தலும்.
3. தேவையான சந்தர்ப்பங்களில் இயற்கைக் காடுளை மதிப்பீடு செய்தல்.

4. இற்றைவரைப்படுத்தப்பட்ட வரைபடத்தை உருவாக்குவதற்கு பௌதிக தகவல் முறைமை முகாமைப்படுத்தல்.
5. வனச் செய்கைத் தரவுப் பொதியை இற்றைவரைப்படுத்தல் மற்றும் முகாமைப்படுத்துவதன் மூலம் கணிப்பீட்டு தரவுகளை தயாரித்து தகவல்களை வழங்குதல்.
6. காடுகளை அளத்தல், அதற்குரியதான அளவை வரைபடம் மற்றும் காணி விபரங்களை நில அளவையாளர் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளல் காடுகளில் எல்லைக் கணுக்களை இடுதல். அளக்கப்பட்ட காடுகளை பிரகடனப்படுத்துவதற்காக ஆவணங்களைத் தயாரித்தல்.
7. அளவை செய்யப்பட்ட சகல காடுகளின் எல்லைகளுக்குமான எண்ணியல் தரவுகளை தயாரித்து பராமரித்தல்.
8. வன புள்ளிவிபரங்கள், தரவுப் பொதிகள் முகாமைத்துவம் புவியியல் தகவல் முறைமையை பயன்படுத்தி வரைபடமாக்குதல் தொடர்பில் உத்தியோகத்தர்களை பயிற்றுவித்தல்.
9. காலத்துக்கு ஏற்றவாறு காடுகளை வரைபடமாக்குதல்.

## 3.3 நிருவாக கட்டமைப்பு

இந்தப் பிரிவு 2015 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டதுடன் இப்பிரிவு காடு பேணுநரின் கீழ் நிருவகிக்கப்படுகின்றது. இவருக்கு உதவியாக பிரதி காடுபேணுநர் ஒருவரும் உதவிக் காடுபேணுநர் ஒருவரும் செயற்படுகின்றனர். இந்தப் பிரிவுக்கு உரியதான வெளிக்கள மட்டத்திலான பணிகளை திணைக்களத்தின் வலய மற்றும் மாவட்ட மட்டத்திலான உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன. மற்றைய பதவியணியில் அபிவிருத்தி உதவியாளர் ஒருவரும் 7 பட வரைஞர்களும் தகவல் தொழில்நுட்ப உதவியாளர் ஒருவரும் அரச முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் பகுதி வன உத்தியோகத்தர் ஒருவரும் 02 அலுவலக பணியாளர்களும் கடமை புரிகின்றனர்.

## 3.4 இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பிரதான செயற்பாடுகள்

### 3.4.1 காடுகளை உள்ளடக்கியதான வரைபடத்தை தயாரிப்பதற்கான தொலைத்தொடர்பு

இந்தப் பிரிவின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றான நாட்டை உள்ளடக்கியதான வரைபடத்தை இற்றைவரைப்படுத்தலாகும். 2015 ஆம் ஆண்டு இந்த காடுகளை உள்ளடக்கியதான வரைபடத்தை இற்றைவரைப்படுத்துவதற்கு ஆரம்பிக்கப்பட்டதுடன் Google Earth Pro மென்பொருள் பயன்பாட்டின் ஊடாக தயாரிக்கப்பட்ட செய்மதி தரவுகள் இறக்கம் செய்யப்பட்டன. இந்த தொழில்நுட்பம் REDD+ அலுவலகம் மற்றும் இலங்கையின் நில அளவையாளர் திணைக்களத்தின் தொழில்நுட்ப உதவியும் பெறப்பட்டது. இந்த வசதிகளினால் செய்மதி திரையின் விஸ்தீரணம் 2m வரை மேற்கொள்ளுவதற்கு சாத்தியம் உள்ளதனால் காடுகளை உள்ளடக்கியதான விபரங்களின் நிலைமை சரியானவாறு மேற்கொள்ள முடிந்தது. ஏற்கனவே இருந்த ESRI ArcGIS மென்பொருளின் புதிய வடிவமான .10 6.1 பயன்பாட்டின் மூலம் செய்மதி வரைபடத்தினைக் கொண்டு பொருள்கோடல் செய்யப்பட்டுள்ளது . இதன் மூலம் முழு இலங்கையும் உள்ளடக்கியவாறு தயாரிக்கப்பட்ட சகல ஆரம்ப வரைபடங்களும் உத்தியோகத்தர்களினால் உறுதிப்படுத்தப்படுவதுடன் இதன் ஊடாக பெற்றுக் கொண்ட தகவல்களின் அடிப்படையில் வரைபடங்கள் மேலும் இற்றை வரைப்படுத்தப்படுகின்றன. ஏற்கனவே காடுகளின் உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்டு வகைப்படுத்தப்பட்டு இலங்கையிலுள்ள காடுகளை வரைபடமாக்கி அதற்கு உரிய தகவல் முறைமையொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. முதலாவது வெளிக்களப் பரிசோதனையின் பின்னர் (இலங்கையின் மொத்த காடுகளையும் உள்ளடக்கிய) உலக விவசாய மற்றும் உணவு அமைப்பு காடுகளை பொருள் கோடல் செய்து இறப்பர் நீக்கப்பட்டதன் பின்னர் ஹெக்டயார் 2,304,799.99 ஆகவும், இயற்கை காடுகளின் அளவு ஹெக்டயார் 2,210,507.93 ஆகவும் மற்றும் வனச் செய்கையின் அளவு ஹெக்டயார் 94,292.06 ஆகவும் குறிப்பிடலாம் மேலும் காடுகளின்

உள்ளடக்கத்தைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுமிடத்து அடர்ந்த காடு ஹெக்டயார் 1,811, 748.06 எனவும் திறந்த காடு ஹெக்டயார் 380, 209.02 எனவும் கண்டல் காடு ஹெக்டயார் 18, 550.85 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது இதற்கு மேலதிகமாக சிறு காடு மற்றும் மேய்ச்சல் பூமி ஹெக்டயார் 155, 971.02 எனவும் சதுப்பு நிலம் ஹெக்டயார் 19,234.33 எனவும் வரைபடமாக்கப்பட்டுள்ளது 2017 ஆண்டு நிறைவடையும் இந்தக் காடுகளைக் காட்டுகின்ற வரைபடங்கள் வன வெளிக்கள உதவியாளர் பிரிவு மட்டத்தில் அச்சிட்டு தயாரித்தல் வட்ட வன பகுது வன உத்தியோகத்தர்கள் உதவியாளர்கள் உரிய வரைபடத்தை வருடத்தின் முற் பகுதியி

போது இந்த பெறுமானங்கள் இறுதி வெளிக்கள பரிசோதனையின் பின்னர் மேலும் சிறியளவு மாற்றமடையலாம் மேலும் மேற்கொள்ளப்படுகின்ற இறுதி பரிசோதனையின் பின்னர் வெளிக்கள மட்டத்தில் மீண்டும் வரைபடம் தயாரித்தல், அச்சிடுதல் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்குதல் 2018 ஆண்டு மேற்கொள்ளுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.4.2 வன புள்ளிவிபர பணிகள்

அரச மரக்கூட்டுத்தாபனத்துக்கு 2017 ஆம் ஆண்டு விடுவிக்கப்பட வேண்டிய வனச் செய்கைகளின் முழுமையான மரங்களை குறியீடு இடுதல் மேற்கொள்ளப்பட்டதுடன் 636 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்ட இலக்கு பிரதேசங்களில் 725 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் மரங்களுக்கு குறியீடு இடுதல் மேற்கொள்ளப்பட்டது.

### 3.4.3 வனச் செய்கை தரவுப் பொதிகள் (FORDATA) முகாமைத்துவம்

தற்பொழுதுள்ள குறித்த தரவுப் பொதிகளை (FORDATA) இற்றைவரைப்படுத்துவதற்கு குறித்த தரவுப் பொதிகளில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணத்தினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் புதிய தரவு பொதிகளை (Database) கட்டியெழுப்ப வேண்டிய தேவைப்பாடுகள் எழுந்துள்ளன. வனத் தரவுகள் இற்றைவரைப்படுத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### 3.4.4 தேசிய வனக் கணிப்பீடு (NFI) தரவுத் தொகுதி

UN – REDD நிகழ்ச்சித் திட்டத்தின் உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட தேசிய வனக் கணிப்பீட்டுப் பணிகளின் தரவுக் களஞ்சியத்தியத்துக்காக பேணப்பட்டு வருகின்ற கணினித் தொகுதியில் இந்த தேசிய வனக் கணிப்பீட்டுத் தரவுகளை உள்ளடக்குதல் மற்றும் இற்றைவரைப்படுத்துதல் 2017 ஆம் ஆண்டு உள்ளடக்கப்பட்டது எல்லா ஆண்டும் பெறப்படுகின்ற வனக் கணிப்பீட்டுத் தரவுகளை உள்ளடக்க வேண்டியுள்ளது.

### 3.4.5 அளவை மற்றும் எல்லைகளை குறியீடு இடுதல்.

இந்த ஆண்டுக்காக எல்லைகளை குறியீடு இடும் இலக்காக 550 km இருந்ததுடன். 892.03 km காடுகள் குறியீடு இடப்பட்டதுடன் எல்லைகள் இடும் இலக்காக 200 km அளவை செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தாலும் 185.83 km அளவைப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

### 3.4.6 புவியியல் தரவு முறைமைகளை முகாமை செய்தல்.

இந்தப் பிரிவில் இருந்த Esri Arc GIS மென்பொருளை இற்றைவரைப்படுத்தி புதிய கணனிகளுக்கு போடப்பட்டுள்ளன. தற்பொழுதுள்ளது Esri Arc GIS 10.6.1 மென்பொருள் இற்றைவரைப்படுத்தப்பட்டது. காடுகளை உள்ளடக்கியதான வரைபடங்கள் மற்றும் வேறு தேவையான வரைபடங்கள் தயாரிப்பதற்கும் இந்த மென்பொருள் பயன்படுத்தப்படுகின்றன.

## 04 ஆவது அத்தியாயம்
## சுற்றாடல் பேணல் மற்றும் முகாமைப் பிரிவு

### 4.1 அறிமுகம்

சுற்றாடல் முறைமையை பாதுகாக்கும் நோக்கில் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சகல சுற்றாடல் முறைமைகளின் உயிரின பல்லினத் தன்மை, மண், நீர், வரலாற்று சிறப்பு மிக்க கலாசாரம், மதம், கலை சார்ந்த பெறுமானங்களை பாதுகாத்தலும் முகாமை செய்தலும் இந்த பிரிவின் பிரதான நோக்கங்களாகும்.

### 4.2 பிரதான செயற்பாடுகள்

- பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சிங்கராஜ மற்றும் நகல்ஸ் உலக மரபுரிமை வனப் பிரதேசங்களின் உலகலாவிய பெறுமதிகளுக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறு அவற்றைப் பாதுகாத்து முகாமைப்படுத்துதல்.
- மனிதன் மற்றும் உயிரின மண்டல பேணல் காட்டு முகாமைத்துவ பணிகளை மேற்கொள்ளல்.
- வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பேணல் மற்றும் ஒதுக்கு காடுகளின் முகாமைத்துவ பணிகளை மேற்கொள்ளல்.
- வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழுள்ள காணிகளில் மேற்கொள்ள பிரேரிக்கப்பட்டுள்ள முக்கிய அபிவிருத்திப் பணிகளுக்கு தேசிய சுற்றாடல் சட்டத்துக்கு அமைவாக மேற்கொள்ளப்பட்டுகின்ற சுற்றாடல் மதிப்பீட்டுப் செயற்பாட்டின் போது கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனமாக செயற்பட்டு ஆகக் குறைந்த சுற்றாடல் பாதிப்புகளையும் இதன் போது ஏற்படுகின்ற பாதிப்புகளை குறைத்துக் கொள்ளுவதற்கும் பொருத்தமான நிபந்தனைகளை முன் வைத்து சுற்றாடல் அங்கீகாரத்தினை வழங்குதல்.
- சுற்றாடல் மதிப்பீட்டுப் செயற்பாட்டின் போது சுற்றாடல் தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழு உறுப்பினராக செயற்பட்டு சுற்றாடல் பாதிப்புகளை குறைத்துக் கொள்ளுவதற்கான சிபாரிசுகளை வழங்குதல்.
- சுற்றாடல் உல்லாசத் தொழில் கவர்ச்சியுள்ள இடங்களில் சுற்றாடல் உல்லாசத் தொழிலை விருத்தி செய்வதற்காக நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல்.
- கண்டல் சுற்றாடல் முறைமையை பாதுகாத்தலும் முகாமைப்படுத்தலும்.
- வனப்பாதுகாப்பு திணைக்களத்தின் கட்டுப்படாட்டில் உள்ள இயற்கை அழகுமிக்க இடங்களை பொருத்தமான நிபந்தனையின் மீது படப்பிடிப்பதற்காக அனுமதியை வழங்குதலும் இதன் மூலம் தேசிய பொருளாதாரத்தை மேம்படுத்துதலும்.
- தேசிய பேணல் விசாரணைகள் மூலம் இனங்காணப்பட்டுள்ள முன்னுரிமை சுற்றாடல் முறைமைகளை பேணுவதும் முகாமைப்படுத்தலும்.
- வனச் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் பேணலை உறுதிப்படுத்துவதற்காக குறித்த முறைமைக்கு மத்தியில் மற்றும் அருகாமையில் உள்ள தனியார் காணிகளை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- பயிற்சி மற்றும் கற்கை நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் வனப்பாதுகாப்புத் திணைக்களத்தின் வெளிக்கள பதவியினரின் சுற்றாடல் முகாமைத்துவ பிரச்சினைகளை இனங்காண்பதும் அவற்றின் தீர்வுக்கான ஆற்றலை அதிகரிப்பதும்.

### 4.3 தாபன ஏற்பாடுகள்

சுற்றாடல் முகாமைத்துவப் பிரிவானது காடுபேணுநரின் கீழ் செயற்படுகின்றது. இந்தப் பிரிவின் பிரதான பணியை நெறிப்படுத்துவதற்கு காடு பேணுநருக்கு உதவி காடுபேணுநரின் ஒத்துழைப்புக் கிடைக்கின்றது. காடுபேணுநருக்கும் உதவி காடுபேணுநருக்கும் உதவியாக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருவரும், முகாமைத்துவ உதவியாளர்கள் இருவரும் இந்தப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கு மேலதிகமாக வெளிக்கள நடவடிக்கைகள் உரிய வலய பிரதி காடுபேணுநர்களினாலும் மாவட்ட வன உத்தியோகத்தர்களினாலும் வெளிக்கள பதவியினர்களினாலும் மேற்கொள்ளப்படுகின்றன.

### 4. 4 வருடாந்த செயற்பாடுகள்.

மேலே 4.2 க்கு உரியவாறாக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

#### 4.4.1 உலக மரபுரிமை காடுகளை பாதுகாத்தலும் ஒதுக்குகளை பராமரித்தலும்

(1) சிங்கராஜ, நக்கில்ஸ் உலக மரபுரிமை காடுகளில் பேணப்படுகின்ற, இயற்கை நடைபாதைகள், தங்குமிடம் உட்பட சகல வசதிகளையும் பராமரித்து நடாத்துதல்.

**சிங்கராஜ உலக மரபுரிமைக் காணி**

சிங்கராஜ உலக மரபுரிமை காட்டின் எல்லையில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரிய சகல காடுகளும் தனியார் காடுகளும் உள்ளடங்கலாக புதிதாக எல்லைகளை குறியீடுகள் இட்டு இதற்கமைவாக புதிதாக அளவீடு செய்து எல்லைக் குறியீடுகளை இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிங்கராஜ காட்டுக்கு அருகாமையில் உள்ள சகல காடுகளையும் உள்ளடக்கியதாக ஜீ.பீ.எஸ் தொழில்நுட்பத்தின் மூலம் ஒருங்கிணைப்புக்கு ஏற்ப வரைபடமாக்கப்பட்டுள்ளது . இந்த எல்லைக்குள் உட்படுகின்ற தனியார் மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரியதான காடுகளைக் கொண்ட காணிகளை கைக்கொள்ளலுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

**நகல்ஸ் உலக மரபுரிமைக் காணி**

நகல்ஸ் உலக மரபுரிமைக் காணி எல்லையின் கீழ் இந்த ஆண்டு மாத்தளை மாவட்ட எல்லைகள் அனேகமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் மீதமாக உள்ள 6 கிலோ மீற்றருக்கான அளவீட்டு பணிகளின் மீதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கு அமைவாக மாத்தளை மாவட்டத்தின் எல்லைக் குறியீடு இடும் பணிகள் 2019 ஆம் ஆண்டு பூர்த்தி செய்வதற்கு முடியுமாக இருக்கும். இந்த எல்லைக்குள் உட்படுகின்ற தனியார் மற்றும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு உரியதான காடுகளைக் கொண்ட காணிகளை கைக்கொள்ளலுக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன..

(ii) இந்த இடங்களை பார்வை இடுவதற்காக வருகின்ற மாணவர்கள் உட்பட சகல குழுக்களுக்கும் விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களையும் வழிகாட்டல் வசதிகளையும் மேற்கொள்ளல்

#### 4.4.2. பேணல் நிலைய முகாமைத்துவம்.

கண்நெலிய, கொட்டவ , உடவத்தகெலே ஒலியகண்கெலே, குருலுகெலே போன்ற பேணல் நிலையங்களையும் ஹப்புத்தளை பூங்காவுக்குத் தேவையான வசதிகள், பராமரிப்பு மற்றும் திருத்தங்களையும் மேற்கொண்டு நடாத்திச் செல்லல்.

4.4.3. **ஹூருளு சுற்றாடல் பூங்காவனத்தின் செயற்பாடுகள்**

ஹூருளு சுற்றாடல் பூங்காவனத்தின் சகல வசதிகள், பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொண்டு நடாத்திச் செல்லல்.

4.4.4 **உல்லாசப் பிரயாணிகளின் தகவல்கள் மற்றும் அவர்களிடமிருந்து பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள்.**

அட்டவணை 4.1(அ) - மூலம் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 4.1 (அ) உடவத்தகெலே (கண்டி)**

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் (இலவசம்) | 266 | - |
| பாடசாலை மாணவர்கள் (அறவீடு) | 904 | 6773.21 |
| ஆசிரியார்கள் (இலவசம்) | 34 | - |
| ஆசிரியர்கள் (அறவீடு) | 50 | 1250.00 |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 536 | 6922.80 |
| உள்நாட்டு முதியோர் | 19,682 | 512,247.84 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 421 | 122,090.00 |
| வெளிநாட்டு முதியோர் | 122,33 | 7,033,975.00 |
| **மொத்தம்** | **34,126** | **7,683,258.85** |

**அட்டவணை 4.1. (ஆ) நகல்ஸ் காடு (டீன்ஸ்டன் , கண்டி)**

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 330 | 4,125.00 |
| உள்நாட்டு முதியோர் | 3,257 | 81,425.00 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 41 | 11,890.00 |
| வெளிநாட்டு முதியோர் | 1,771 | 1,018,325.00 |
| **மொத்தம்** | 5,399 | 1,115,765.00 |

**அட்டவணை 4.1. (இ)நகல்ஸ் காடு (பிட்டவளபத்தன , மாத்தளை)**

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவ மாணவிகள் (இலவசம்) | 35 | - |

| | | |
|---|---|---|
| பாடசாலை மாணவ மாணவிகள் (அறவீடு) | 2441 | 31,958.55 |
| ஆசிரியர்கள் (இலவசம்) | 2 | - |
| உள்நாட்டுப் முதியோர் | 808 | 9441.87 |
| உள்நாட்டு பிள்ளைகள் | 54,628 | 1,249,986.25 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 3 | 783.00 |
| வெளிநாட்டு முதியோர் | 789 | 424,015.50 |
| **மொத்தம்** | **58,706** | **1,716,185.17** |

**அட்டவணை** 4.1. (ஈ) **சிங்கராஜ காடு** ( பிட்டதெனிய , மாத்தறை)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலைப் பிள்ளைகள் (இலவசம்) | 434 | - |
| ஆசிரியர்கள் (இலவசம்) | 36 | - |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 1,604 | 20188.24 |
| உள்நாட்டு முதியோர்கள் | 14,879 | 369,801.25 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 274 | 69,175.00 |
| வெளிநாட்டு முதியோர் | 6,614 | 3,271,725.00 |
| **மொத்தம்** | **23,841** | **3,730,889.49** |

**அட்டவணை** 4.1. (உ) **சிங்கராஜ காடு** ( குடவ , இரத்தினபுரி)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் (இலவசம்) | 1,682 | - |
| பாடசாலை மாணவர்கள் (அறவீடு) | 5,407 | 32,562.00 |
| ஆசிரியர்கள் (இலவசம்) | 226 | - |
| ஆசிரியர்கள் (அறவீடு) | 562 | 14,050.00 |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 1968 | 24,600.00 |
| உள்நாட்டு முதியோர் | 15,333 | 383,325.00 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 907 | 86,710.00 |
| வெளிநாட்டு முதியோர் | 7,754 | 4,808,150.00 |
| **மொத்தம்** | **33,839** | **5,349,397.00** |

**அட்டவணை** 4.1. (ஊ) **ஹுருளு சுற்றாடல் பூங்கா** ( ஹபரன , பொலன்நறுவ)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| உள்நாட்டு பிள்ளைகள் | 1,453 | 56,856.51 |
| உள்நாட்டு முதியோர் | 19,175 | 1,500,652.17 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 1,225 | 798,913.03 |

| | | |
|---|---|---|
| வெளிநாட்டு முதியோர் | 35,439 | 46,224,782.60 |
| **மொத்தம்** | 57,292 | **48,581,204.31** |

- இதற்கு மேலதிகமாக உல்லாசப் பயணிகள் வந்த 13,603 வாகனங்களுக்காக 4,435,760.87 ரூபா வருமானமாகக் கிடைத்தது.

**அட்டவணை** 4.1. (எ) **கொட்டாவ காடு** (**காலி**)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் (அறவீடு) | - | - |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 142 | 1,775.00 |
| உள்நாட்டு முதியோர் | 1,660 | 41,500.00 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 35 | 10,150.00 |
| வெளிநாட்டு முதியோர் | 335 | 204,125.00 |
| **மொத்தம்** | **2,172** | **257,550.00** |

**அட்டவணை** 4.1 (ஏ) **கன்னெலியகாடு** (**காலி**)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் (இலவசம்) | 2,219 | - |
| பாடசாலை மாணவர்கள் | 5,072 | 30,432.00 |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 1,945 | 24,312.50 |
| உள்நாட்டு முதியோர் | 53,236 | 1,330,900.00 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 110 | 31,900.00 |
| வெளிநாட்டு முதியோர் | 2,197 | 1,263,275.00 |
| **மொத்தம்** | **64,779** | **2,680,819.50** |

**அட்டவணை** 4.1 (ஐ) **மாகந்தாவ காடு** (**கேகாலை**)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் (இலவசம்) | 211 | - |
| பாடசாலை மாணவர்கள் (அறவீடு) | 7 | 100.66 |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 198 | 4208.94 |
| உள்நாட்டு முதியோர் | 1,897 | 50,538.75 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 102 | 24,635.50 |
| வெளிநாட்டு முதியோர் | 1,144 | 712,295.50 |

| | | |
|---|---|---|
| **மொத்தம்** | **3,559** | **791,779.35** |

### அட்டவணை 4.1 (ஓ) கந்தேஎல கல்விப் பூங்கா (நுவரெலியா)

| வருகை தந்தோரின் வகைகள் | வருகை தந்தோரின் எண்ணிக்கை | பிரவேசக் கட்டணமாக சேகரிக்கப்பட்ட வருமானங்கள் (ரூபா) |
|---|---|---|
| பாடசாலை மாணவர்கள் (இலவசம்) | 995 | - |
| பாடசாலை மாணவர்கள் (அறவீடு) | 1,832 | 16,825.00 |
| உள்நாட்டுப் பிள்ளைகள் | 1,346 | 10,992.00 |
| உள்நாட்டு முதியோர் | 2,726 | 68,150.00 |
| வெளிநாட்டுப் பிள்ளைகள் | 2 | 500.00 |
| வெளிநாட்டு முதியோர் | 9 | 5,175.00 |
| **மொத்தம்** | **6,910** | **101,642.00** |

- 2018 ஆம் ஆண்டு பிதுருதலாவ பேணற் காட்டை பார்வையிடுவதற்காக குழுக்களாக வருகை தந்த கார் மற்றும் வேன் வண்டிகளுக்காக அனுமதிப் பத்திரங்களை வழங்கியதன் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் 4,107,000.00 ஆகும்

மொத்தமாக பார்வையிட்டதன் மூலம் கிடைக்கப் பெற்ற வருமானம் ரூபா 80,551,251.54 ஆகும்.

#### 4.4.5. காடுகளில் படப்பிடிப்பின் மூலம் கிடைக்கப்பட்ட வருமானம்

திணைக்களத்தின் மூலம் முகாமைப்படுத்தப்பட்ட ஒதுக்குக்காடுகளில் வீடியோ படப்பிடிப்பின் மூலம் 576,000.00 ரூபா வருமானமாகக் கிடைக்கப் பெற்றது.

#### 4.4.6 சுற்றாடல் தாக்கங்களின் மதிப்பீடு

2004 ஆம் ஆண்டு தொடக்கம் வனப் பாதுகாப்புத் திணைக்களமானது அரசாங்கக் காடுகளில் செயற்படுத்திய பல்வேறுபட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களின் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் தாக்கங்களை மதிப்பிடுவதற்கான கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் முகவர் நிறுவனமாகவும் தொழிநுட்பக் குழுவாகவும் செயற்படுவதற்கு நியமிக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக 2018 ஆம் ஆண்டு வரை சுற்றாடல் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகும் தொழிநுட்ப சிபாரிசுகளை பெறுவதற்காகும் பல்வேறுபட்ட 50 கருத்திட்டப் பிரேரிப்புக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.
இந்த பிரேரிப்புகளில் பல்வேறுபட்ட 7கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் முகவர் நிலையமாக வனப் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 2018 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில் சுற்றாடல் அங்கீகாரம் வழங்கப்பட்ட பல்வேறுபட்ட கருத்திட்டங்களுக்காக பிறப்பிக்கப்பட்ட நிபந்தனைகளின் கீழ் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சுற்றாடல் அங்கீகாரம் கோரி தொடர்புபடுத்தப்பட்ட ஏனைய கருத்திட்ட பிரேரிப்புகள் தொடர்பில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இதற்கு மேலதிகமாக இந்த ஆண்டு வனப் பாதுகாப்புத் திணைக்களம் பல்வேறுபட்ட துறைகளின் ஊடாக ஆரம்பிக்கப்பட்ட 15 கருத்திட்டங்களுக்கு தொழினுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பிரதிநிதி ஒருவராகவும் செயற்பட்டது.

### 4.4.7 சுற்றாடல் தகவல் முகாமை முறைமை

இயற்கைக் காடுகளுக்குரிய உயிரியல் பல்லினத்தன்மை, மண்,நீர் போன்ற தகவல்களை சேகரித்து மேற்கொள்ளப்பட்ட தேசிய பேணல் விசாரணையின் தரவு மூலம் பாடசாலை பிள்ளைகள், ஆய்வாளர்கள் மற்றும் பல்வேறுபட்ட ஆட்கள் அத்துடன் அரச துறையினர் அனைவருக்கும் தேவையான தகவல் வழங்கப்பட்டன.

# 05 ஆவது அத்தியாயம்

## வன ஆய்வு ,கற்கை மற்றும் அபிவிருத்திப் பிரிவு

### 5.1 அறிமுகம்

இலங்கையில் விதி முறையான வனவியல் ஆய்வுப் பணிகள் 1937 ஆம் ஆண்டு வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் ஆய்வு மற்றும் கற்கைப் பிரிவால் மேற்கொள்ளப்பட்டது . அது அப்போது வனவியல் ஆய்வு அலகாக ஆரம்பிக்கப்பட்ட போது ஆகும். இந்தப் பிரிவானது, திணைக்களத்தின் அதிகார எல்லைக்குள் வனவியல் ஆய்வுப் பணிகளையும் நிருவாக மற்றும் வனவியல்துறை தொடர்பிலான கற்கைப் பணிகளையும் நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகவுள்ளது.

இந்தப் பிரிவானது குருநாகல், பதுளை போன்ற இடங்களில் அமைந்துள்ள பிரதேச ஆய்வு நிலையம், இலங்கை வனவியல் நிறுவகம் மற்றும் வனவியல் தகவல் அலகு போன்ற பிரிவுகளைக் கொண்டதாகும். வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நூலகமும் இந்தப் பிரிவிற்குக் கீழ் தான் உள்ளது.

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் வருடாந்த ஆய்வு நிகழ்ச்சித் திட்டங்கள், ஆய்வு நிலையங்கள் ஊடாக நடைமுறைப்படுத்தப்படுவதுடன் வனப் பாதுகாப்புத் திணைக்களம், அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் மற்றும் வனச் செய்கைகளில் ஈடுபட்டுள்ள தனியார் பிரிவின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நேரடியாகத் தொடர்பு படுகின்றது. இந்த நிலையத்தினால் பாதுகாப்பு , தயாரிப்பு வனவியல் தொடர்பான பிரயோக மற்றும் இசைவாக்க ஆய்வுப் பணிகளை மேற்கொள்கின்றது.

திணைக்களத்தின் தொழினுட்பச் சேவைப் பதவியினரின் ஆற்றல்களை வலுப்படுத்துவதற்கு பிரதானமாக வனவியல் மற்றும் சுற்றாடல் சார்ந்த விடயங்களின் மீது பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நுவரெலியாவில் அமைந்துள்ள இலங்கை வனவியல் நிறுவகத்தினால் நிருவகிக்கப்படுகின்றது.

வனவியல் தகவல் அலகின் மூலம் வனவியல் தொடர்பான ஆய்வுகளின் பெறுபேறுகள் அவற்றை எதிர்பார்கின்ற பயனாளிகளுக்கு மிகவும் திருப்திகரமான முறையில் வழங்கும் நோக்கில் செயற்படுகின்றது. இற்றைவரை நூலகத்தில் 31,489 புத்தகங்களும் 987 அறிக்கைகளும் 29 சஞ்சிகைகளும் உள்ளன

### 5.2 ஆய்வு மற்றும் கற்கைப் பிரிவின் பிரதான செயற்பாடுகள்

1. ஆய்வு மற்றும் அபிவிருத்தி சார்ந்த தேசிய வனத்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தொழினுட்ப ஒத்துழைப்பு வழங்குதல்.
2. தேசிய வனக்கொள்கையின் நோக்கத்தை எய்துவதற்கு இலங்கையிலே மேற்கொள்ளப்படுகின்ற வனவியல் ஆய்வுக்கு வழிகாட்டுதலும் இந்த பணிகளை ஒருங்கிணைத்தலும் முன்னேற்றங்களை நிருவகித்தலும் மீளாய்வு செய்தலும்.
3. வனச் சுற்றாடல் முறைமைக்குரிய ஆய்வு பிரேரிப்புகளை மீளாய்வு செய்யப்பட்டதும் இந்த ஆய்வுப் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டதுமான தேசிய வனத்துறை ஆய்வுக்குழுக் கூட்டங்களையும் அதுசார்ந்த நடவடிக்கைகளையும் ஒருங்கிணைத்தல்.
4. தேசிய முன்னுரிமைகளுக்கமைவாக ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை வகுத்தமைத்தலும் அவற்றை நடைமுறைப்படுத்துதலும்.
5. ஆய்வின் இறுதியில் பெறுப்பட்ட பயன்மிகு தகவல்களை வெளிக்கள பதவியினருக்கும் ஏனைய தேவையான ஆட்களுக்கும் வழங்குதலும் தேவையான தொழினுட்ப ஆலோசனைகளை வழங்குதலும்.

6. தேசிய வனக்கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஆராய்ச்சிப் பணிகளுக்கு முன்னுரிமை இடங்களை வழங்கி உரிய நிறுவனங்களுக்கு சிபாரிசுகளை வழங்குதல்.

7. வனப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் அரச மரக்கூட்டுத்தாபனத்தின் தொழினுட்ப மற்றும் உபதொழினுட்ப மட்டத்திலுள்ள உத்தியோகத்தர்களின் அறிவை மேம்படுத்துவதற்கு மற்றும் ஆற்றலை விருத்தி செய்வதற்கு ஏனைய நிறுவனங்களின் பயிற்சித் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

8. வனவியல் தகவல் பிரிவு மற்றும் வனப்பாதுகாப்புத் திணைக்கள நூலக முகாமைத்துவம்.

9. இலங்கை வனக் கல்லூரியின் நிருவாகம் மற்றும் அபிவிருத்தி போன்ற பிரிவுகளின் மொத்த மேற்பார்வை.

10. திணைக்களத்தின் பணிகளுக்குத் தேவையான சகலவிதமான ஆவணங்களை ஆங்கில மொழியிலிருந்து சிங்களத்திற்கும் சிங்கள மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கும் மொழிபெயர்த்தல்.

11. திணைக்களத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் தேவையான மொழிப் பதிப்புகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல்.

### 5.3 தாபனக் கட்டமைப்பு. (தலைமை அலுவலகம்)

இந்த பிரிவின் பிரதானியாக பிரதி காடுபேணுநர் தலைமையதிபதி ( ஆய்வு,கற்கை மற்றும் அபிவிருத்தி) ஒருவர் சேவையில் ஈடுபடுவதுடன் ஏனைய பதவியணியில் உதவிக் காடு பேணுநர் ஒருவரும் மொழிபெயர்ப்பாளர் ஒருவரும் மொழி பதிப்பாசிரியர் ஒருவரும் அபிவிருத்தி உதவியாளர் ஒருவரும் முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் வெளிக்கள உதவியாளர் ஒருவரும் அலுவலகப் பணியாளர் இருவரும் நூலகப் பதவியணிக்காக நூலகர் ஒருவரும் வன வெளிக்கள உதவியாளர்கள் இருவரும் உள்ளடங்குவர்.

### 5.4 புதிய ஆராய்ச்சிச் செயற்பாடுகளின் செயலாற்றுகை - 2018

#### i. காலநிலை மாற்றத்துக்கு இயைபாக்கம் அடைவதற்காக தேக்கு வனச் செய்கையை தாபிக்கும் போது பயன்படுத்தக் கூடிய பொருத்தமான திட்டம் பற்றி ஆய்வு செய்தல்.

நீண்ட வறண்ட காலத்தைக் கொண்ட மற்றும் அதிகமாக புல் வளரக்கூடியது போன்ற காலநிலை மாற்றத்துக்கு இயைவாக்கம் அடையக் கூடிய தேக்கு வனச் செய்கையின் ஆரம்ப கட்டத்தில் வளர்ச்சியை அதிகரிப்பதனை மேம்படுத்திய விஞ்ஞான ரீதியான திட்டமொன்றை அறிந்து கொள்ளுவதற்காக இந்த ஆராய்ச்சி வவுனியா மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது இதன்போது இயந்திரபொறிமுறையில் நிலம் பதப்படுத்தப்பட்டது. இந்த ஆராய்ச்சி 0..5 ஹெக்டயார் இடப்பரப்பில் தாபிக்கப்பட்டது.

#### ii. தேக்கு வனச் செய்கையை தாபிக்கும் போது வனவியல் சிகிச்சையின் ஊடாக வெற்றிகரமாக புற்களை கட்டுப்படுத்தும் திட்டம் தொடர்பான ஆய்வு செய்தல்.

இந்த ஆய்வின் நோக்கமானது தேக்கு மரங்களை மீளச் செய்கைபன்னப்படும் இடப்பரப்புகளில் புற்களை கட்டுப்படுத்துவதற்காக உயர் அடர்த்தியைக் கொண்ட கலப்புச் செய்கையொன்றைப் பயன்படுத்தி பொருத்தமான தாவர இனங்களை அடையாளம் காண்பதாகும். இந்த ஆராய்ச்சி வவுனியாவில்

தாபிக்கப்பட்டுள்ளது. இந்த மேலதிக தாவர வகைகள் எரிபொருள் வெட்டுமர அறுவடைக்காக தேவையான சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளுவது பொருத்தமாகும்.

**iii. காடுகளை புனரமைப்பதற்கு பொருத்தமான தாவர கலப்பு வகைகளை ஆராய்ச்சி செய்தல்.**

**கை**விடப்பட்ட சேனைக் காணிகளில் சேதத்துக்குள்ளான காடுகளை மீளப் புனரமைப்பதற்காக தாவர வகைகளை தெரிவு செய்வது இதன் நோக்கமாகும். இந்த தாவர வகைகள் உயர வளராத ஆற்றலும் வளர்ச்சி வேகம் இருத்தலும் வேண்டும் என்பதுடன் நன்மைக்களைத் தரக்கூடிய தாவர வகைகளாகவும் இருத்தல் வேண்டும். இந்த நோக்கத்தை அடைந்து கொள்ளுவதற்காக வவுனியா மாவட்டத்தில் ஒயாமடுள்ள பிரதேசத்தில் இந்த ஆராய்ச்சி ஆரம்பிக்கப்பட்டது. இதன்போது தாவர இனங்களுக்கிடையே காணப்படுகின்ற செயற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக கலப்பு தாவர இனங்கள் வளர்க்கப்பட்டன. இதன்மூலம் பல்வேறுபட்ட வளங்கள் மற்றும் காலநிலையின் தாக்கங்களும் ஆய்வு செய்யப்பட்டன. தாவர இனங்களை தெரிவு செய்யும் போது இந்த தாவரங்களின் விசேட அம்சங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது.

**iv. வெட்டு மர உற்பத்திக்காக தெரிவு செய்த உள்நாட்டு தாவர இனங்களை மேம்படுத்துவதற்காக வனவியல் சிகிச்சைகளைப் பயன்படுத்துதல்.**

ஆராய்ச்சி அனுபவத்தின் ஊடாக வெட்டுமரங்களுக்கான காடுகளுக்குப் பொருத்தமான உள்நாட்டு தாவர இனங்கள் பல இனங்காணப்பட்டன. இந்த ஆய்வின் போது இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட தாரவ இனங்களில் மிகச் சிறந்த வளர்ச்சியைப் பெற்றுக் கொள்ளக்கூடியவாறு முகாமைத்துவம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் புற்களைக் கட்டுப்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடிய மிகச் சிறந்த தன்மைமையும் இதன்போது ஆராயப்பட்டது. இந்த ஆய்வு வவுனியாவில் தாபிக்கப்பட்டுள்ளது.

**v. கண்டல் பிரதேச மண்ணில் உள்ள காபன் அளவினை மதிப்பீடு செய்யும் ஆய்வு**

கண்டல் பிரதேச சூழல் முறைமையில் முழுமையான காபன் குழுமத்தை ஆய்வு செய்யும் நோக்கில் இலங்கை கண்டல் பிரதேசங்களில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட உயிரியல் காபன் ஆய்வின் போது அடுத்த கட்ட நடவடிக்கையாக குறித்த கண்டல் பிரதேசங்களில் மண்ணின் காபன் செறவு இதன் போது ஆய்வு செய்யப்பட்டது. இந்த ஆய்வில் கண்டல் பிரதேசங்களில் பரந்து காணப்பட்ட 8 மாவட்டங்களில் 50 இடங்களில் மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. கமத் தொழில் திணைக்களத்தின் மண் ஆய்வகத்தில் காபன் விகிதம் கணிப்பீடு செய்யப்பட்டது. மண் மாதிரிகள் 105 சென்றிகிரேட் பாகையில் உலர்த்தப்பட்டு மண்ணின் செறிவு பற்றி ஆராயப்பட்டது. ஒரு மீற்றர் வரையிலான ஆழத்தில் பல்வேறுபட்ட நான்கு மண் தட்டுகளின் மண்ணின் அடர்த்தி மற்றும் காபன் விகிதம் பயன்படுத்தி காபன் அடர்த்தி (Mg/ha ஹெக்டயார்) கணக்கிடப்பட்டது. சில சந்தப்பங்களில் சில மாற்றங்கள் காட்டினாலும் காபன் அடர்த்தியில் பொதுவாக சுற்று தெளிவாக அவதானிக்கப்பட்டது. இதற்கமைவாக ஆகக் குறைந்த மண் அடர்த்தியில் ஆகக் கூடிய மண் தட்டுகள் காணப்பட்டதுடன் ஆகக் கூடிய அடர்த்தி 50 - 100 செற்றி மீற்றர் வரையில் மண் அடுக்குகள் காணப்பட்டன.

கண்டல் பிரதேசங்களில் மண் காபன்படை பரந்து அதிகூடிய காபன் விகிதம் காணப்படுகின்றமை அதிகூடிய மழை பெய்கின்ற பிரதேசங்களிலாகும் இந்த ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்ட விடயங்களுக்கு அமைவாக 0 - 50 வரையிலான மண் சென்றிமீற்றருக்கு இடையான ஆழத்தில் உள்ள சாதாரண காபன் அடர்த்தி ஹெக்டயார் ஒன்றுக்கு 80 மெகா கிராம் வரையிலாகும். 50 - 100 வரையிலான மண் சென்றிமீற்றருக்கு இடையான காபன் அடர்த்தி ஹெக்டயார் ஒன்றுக்கு 85 மெகா கிராம் வரையிலாகும். குறித்த ஒவ்வொரு மண் தட்டுகளிலும் காணப்படுகின்ற ஆகக் கூடிய காபன் அடர்த்தி முறையே ஹெக்டயார் ஒன்றுக்கு மெகா கிராம் 181 மற்றும் 217 ஆகும்.

**vi. தேக்கு மற்றும் கும்புக் தாவரங்களை ஒட்டுக்கட்டுதல்.**

ஆனப்பள்ளம ஆராய்ச்சி செய்கையில் தெரிவு செய்யப்பட்ட 20 தாய் மரமங்களைப் பயன்படுத்தி தேக்கு கன்றுகள் ஒட்டுக்கட்டப்பட்டன. தேக்கு ஒட்டுக்கட்டுவதற்காக கிளை ஒட்டுமுறை இலகுவானதும் மிகப் பொருத்தமான முறையாக இந்த ஆய்வின் போது அடையாளம் காணப்பட்டது கும்புக் தாவரத்தை ஒட்டும் சாத்தியத்தை மதிப்பிடுவதற்காக மேலும் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டது. ஆரம்ப வெற்றி 66% ஆகும். இதன்மூலம் கும்புக் தாவரம் வெற்றிகரமாக ஒட்டுக்கட்ட முடியும் என அறிந்து கொள்ள முடிந்தது. இந்த தகவலின் ஊடாக கும்புக் வனச் செய்கை தாபிப்பதற்கு தேவையான விதைகளை உற்பத்தி செய்வதற்கு சிறந்த அம்சங்களை காட்டுகின்ற தாவரங்களின் கிளைகளைப் பெற்று அவற்றை பிற கும்புக் தாவரங்களில் ஒட்டுக்கட்ட முடியும். இவ்வாறு ஒட்டுக்கட்டக் கூடிய தாவரங்கள் குருநாகல் பிரதேசங்களில் குளோனிங் செய்யப்பட்ட விதை தோட்டங்களை தாபிப்பதற்காக பயன்படுத்த முடியும்.

## 5.5 ஆராய்ச்சிப் பராமரிப்புகள்

இந்த ஆண்டுக்குள் 09 மாவட்டங்களில் 42 வெளிக்கள பரிசோதனைகள் மாவட்ட வன உத்தியோகத்தர் பணியாட் தொகுதியினால் பராமரிக்கப்பட்டன. திட்டமிட்டவாறு தரவுகளும் சேகரிக்கப்பட்டன.

**விதைத் தோப்பு**

குருநாகல் வனவியல் ஆராய்ச்சி நிலையத்தினால் 40 ஹெக்டயார் இடப்பரப்பில் பரந்து காணப்படுகின்ள விதைத் தோப்பு குருநாகல் மாவட்டத்தில் (தேக்கு மற்றும் காயா) பராமரிக்கப்பட்டன.

**விதைகளை சேகரித்தல்.**

இத் தோட்டத்தின் மூலம் இந்த ஆண்டு தேக்க விதை சுமார் 500 கி.கிராம் சேகரிக்கப்பட்டது. விதைகள் சேகரிக்கும் காலப்பகுதியில் பெய்த அதிக மழை காரணத்தால் குளியாப்பிட்டி பரிகொட மற்றும் ஹொரகெலே விதைத் தோட்டங்களில் அனைத்து மரங்களுக்கும் தாக்கத்தைச் செலுத்திய ஒட்டுண்ணித் தாவரங்களின் ஆக்கிரமிப்பின் காரணமாக விதை அறுவடை குறைவடைந்ததன் காரணத்தால் எதிர்பார்த்தவாறு விதைகள் சேகரிப்பதை பூர்த்தி செய்ய முடியவில்லை எத்கலவில் அமைந்துள்ள விதைத் தோட்டத்தில் இருந்து சிறந்த விதைகள் உற்பத்தி செய்யும் அளவுக்கு தோட்டம் பக்குவமடையவில்லை. *Eucalyptus grandis* விதைகள் 7.2 கி.கிராம் சேகரிக்கப்பட்டது.

### நாற்று உற்பத்தி

ஆய்வு நடவடிக்கைகளுக்காக பிரதானமாக உள்நாட்டு இனங்களில் சுமார் 5000 நாற்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வாறு உற்பத்தி செய்த நாற்றுகள் மர நடுகைக்காக பயன்படுத்தப்பட்டதுடன் மீதியை வெளி நிறுவனங்கள் மற்றும் தனியாருக்கு விநியோகிக்கப்பட்டன.

## 5.6 ஆராய்ச்சிகளின் போது பெறப்பட்ட புதிய கண்டுபிடிப்புகளை மற்றவர்களுக்கும் வழங்குதல்.

**ஆராய்ச்சி அறிக்கைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள ஆராய்ச்சி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

1. வனச் செய்கையில் ஆக்கிரமிப்பு தாவர இனங்களை கட்டுப்படுத்தும் நிலைமை தொடர்பான அறிக்கை.
2. இலங்கையில் உள்ள இயற்கைக் காடுகள் மற்றும் வனச் செய்கையில் காணப்படும் ஆக்கிரமிப்பு தாவரங்களின் நிலைமை தொடர்பான வரைவு அறிக்கை.
3. இலங்கையில் உள்ள பாதிப்புக்குள்ளான காடுகளை புனரமைத்தல் தொடர்பான வரைவுக் கையேடு
4. இலங்கையில் உள்ள கண்டல் சுற்றாடல் முறைமையில் மண் உள்ளடங்கிய காபனின் அளவை மதிப்பீடு செய்த அறிக்கை.

மாநாடுகளில் சமர்ப்பித்தல்.

1. இரத்தினபுரி மாவட்டத்தில் அமைந்துள்ள சிங்கராஜ உலக மரபுரிமை காடுகள் மற்றும் அதற்கு அண்மித்த பகுதியல் காணப்படுகின்ற இயற்கை காடுகள் மற்றும் வனச் செய்கையில் அக்கிரமிப்பு தாவரங்களின் தற்போதைய நிலைமை தொடர்பாக பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஈரவலய காடுகள் தொடர்பான மாநாட்டில் சமர்ப்பித்த ஆராய்ச்சி அறிக்கை ( எஸ்.எச். பந்துமாலா மற்றும் ஆர்.எம்.ஓ. அலவத்துகொட)

2. இலங்கை வடக்கு பிரதேசத்தில் உள்ள கண்டல் சூழல் முறைமையின் தற்போதைய நிலைமை தொடர்பாக மன்னார் விடத்தல்தீவில் நடைபெற்ற சர்வதேச கண்டல் ஆராய்ச்சி மாநாட்டில் உரிய விடயங்களை முன்வைத்தல். (ஆர்.எம்.ஓ. அலவத்துகொட மற்றும் கே.ரீ. பிரேமகாந்த)

**வெளியீடுகள்**

1. வன ஆராய்ச்சிக் கட்டுரைகள் (13வது மலர்)

2. தேக்கு கிளைகள் முகாமைத்துவம் தொடர்பான பிரசுரம் (சிங்கள மொழியில்)

3. *Acacia* தாவரத்தின் சுற்றாடல் தாக்கம் தொடர்பான துண்டுப் பிரசுரம் அச்சிடுவதற்காக தயாராக உள்ளது (சிங்கள மொழியில்)

**ஆராய்ச்சிக் கட்டுரைகள்**

1. பாதுகாப்பு மற்றும் வானிலை மாற்றத்தைக் குறைப்பதற்கான வழிமுறையாக இலங்கையில் மஹோகனி கலப்பு காடுகளில் பயோமாஸ் காபன் பங்கின் மதிப்பீடு குருநாகல் படகமுவ பேணல் காடு (ஆர்.எம்.ஓ. அலவத்துகொட மற்றும் கே.ரீ. பிரேமகாந்த) - ஸ்ரீலங்கா பொரஸ்ட் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்காக தயாரிக்கப்பட்டது.

2. *Chloroxylon Swietenia* தாவர இனம் தொடர்பில் *Papilio demoleus* மயிர்கொட்டிப் புழுவினால் ஏற்படும் தாக்கங்கள் (ஆர்.எம்.ஓ. அலவத்துகொட) - வன ஆராய்ச்சி கட்டுரை 13 வது மலர்.

3. *Acacia தாவரத்தின் ஊடாக தேனீக்களுக்கு ஏற்படும் தாக்கங்கள்* (ஆர்.எம்.ஓ. அலவத்துகொட) - வன ஆராய்ச்சி கட்டுரை 13 வது மலர்.

4. இலங்கை ஈர வலய வனச் செய்கைகளில் *Ochlandra stridula* கட்டுப்பாடு (எஸ்.எச் பந்துமாலா) வன ஆராய்ச்சி கட்டுரை 13 வது மலர்.

5. மீள் வனச் செய்கை மற்றும் காடுகளைப் புனரமைப்பதற்காக உள்நாட்டு தாவர இனங்களைப் பயன்படுத்தல் (ஆர்.எம்.ஓ. அலவத்துகொட மற்றும் எஸ்.எச் பந்துமாலா ) - வன ஆராய்ச்சி கட்டுரை 13 வது மலர்.

6. இலங்கை ஈர வலயத்தில் *Aquilaria subintegra* தொடர்பில் காணப்படுகின்ற பீடைகொல்லி பிரச்சினை தொடர்பான கண்காணிப்பு. ஆர்.எம்.ஓ. அலவத்துகொட மற்றும் எஸ்.எச் பந்துமாலா ) - வன ஆராய்ச்சி கட்டுரை 13 வது மலர்.

7. *Eucalyptus* வனச் செய்கையில் கறையான்களினால் ஏற்படும் தாக்கங்கள் (ஏ.எல்.எம்.சுக்ரி ) - வன ஆராய்ச்சி கட்டுரை
8. *Santalum album* தாவர இனத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்ற தண்டுப் புழுவின் ஆக்கிரமிப்பு மற்றும் அதனைக் கட்டுப்படுத்தல் (ஆர்.எம்.ஓ. அலவத்துகொட) வன ஆராய்ச்சி கட்டுரை 13 வது மலர்.

### 5.7. தேசிய வனத்துறை ஆராய்ச்சிக் குழு.

இந்தப் பிரிவு தேசிய வனத்துறை ஆராய்ச்சி குழு ஒருங்கிணைப்பு பணிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டன. உரிய ஆண்டுக்குள் 4 கூட்டங்கள் நடத்தப்பட்டன. புதிய 38 ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டன. இவற்றின் ஆராய்ச்சிப் பணிகளை நடத்திச் செல்லுவதற்குத் தேவையான அனுமதிகள் வழங்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக தற்பொழுது மேற்கொள்ளுகின்ற 17 கருத்திட்டங்களின் காலப்பகுதியும் நீடிக்கப்பட்டன.

**அட்டவணை 5.1 - ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள்.**

| | | |
|---|---|---|
| 1. | திரு. அனுர சத்துருசிங்க | காடு பேணுநர் தலைமை அதிபதி , வனப் பாதுகாப்புத் திணைக்களம். |
| 2. | திரு (கலாநிதி) என்.டீ.ஆர். வீரவர்தன | மேலதிக காடு பேணுநர் தலைமை அதிபதி (ஆராய்ச்சி, கற்கை மற்றும் அபிவிருத்தி) வனப் பாதுகாப்புத் திணைக்களம். |
| 3. | திருமதி தீபானி அலவத்துகொட | காடு பேணுநர் ( ஆராய்ச்சி ) வனவியல் ஆராய்ச்சி நிலையம் கும்பல்பொல |
| 4. | கலாநிதி சுதீரா ரங்வல | சிரேஸ்ட விரிவுரையாளர், தாவரவியல் திணைக்களம் கொழும்பு பல்கலைக்கழகம் |
| 5. | கலாநிதி. பிரியநாத் பெரேரா | சிரேஸ்ட விரிவுரையாளர், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் |
| 6. | திருமதி ஆர்.எச்.எம்.பீ அபேகோன் | பணிப்பாளர் / உயிரியல் பல்வகைத் தன்மை, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |
| 7. | திருமதி தில்ருக்ஸி ஏக்கநாயக்க | உதவிப் பணிப்பாளர், தேசிய விஞ்ஞான மன்றம் |
| 8. | கலாநிதி. எஸ்.ஏ.செலோமி கிருஷ்ணராஜா | பணிப்பாளர் நாயகம் தேசிய தாவரவியல் திணைக்களம். |
| 9 | பேராசிரியர் என்.ஏ.ஏ.எஸ்.பீ நிஸ்ஸங்க | சிரேஸ்ட விரிவுரையாளர், , பயிரியல் திணைக்களம் பேராதெனிய பல்கலைக்கழகம்.. |
| 10. | கலாநிதி. யு.கே.எல்.பீரிஸ். | பிரதிப் பணிப்பாளர் ( ஆராய்ச்சி மற்றும் கல்வி ) வன சீவராசிகள் திணைக்ளம். |
| 11. | பேராசிரியர் நிஹால் தயாவங்ச | சிரேஷ்ட விரிவுரையாளர் (விஞ்ஞான பீடம்), கொழும்பு பல்கலைக்கழகம் . |
| 12. | திரு. எம்.ஏ.ஏ.என்.ஹேமகுமார | பணிப்பாளர், மத்திய சுற்றாடல் அதிகாரசபை |

**2018 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேசிய வன வெளிக்கள ஆராய்ச்சிக் குழுக் கூட்டம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்**

**67 வது கூட்டம் ( 2018 / 01 )**

1. இலங்கை கருவாப்பட்டை மற்றும் அவற்றின் களைகளின் மூலக்கூறு மற்றும் உயிர்வேதியியல் பண்புகள் மற்றும் பல்வேறு சுற்றுச்சூழல் நிலைமைகளின் கீழ் பிரதான உயிர்வேதியியல் மரபணுக்களின் வெளிப்பாட்டை ஆராய்ச்சி செய்தல் மற்றும் இலங்கை கருவாப்பட்டையைப் பயன்படுத்தும் பெறுமானம் குறித்த தாவரத்தின் பல்வேறுபட்ட பாகங்கள் ஊடாக மேம்படுத்தல் ( கலாநிதி சீ.ஜீ பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் டீ.கே.ஜீ புஸ்பகுமார பேராதெனிய பல்கலைக்கழகம்
2. இலங்கை கருவாப்பட்டையில் காணப்படுகின்ற உயிர்வேதியியல் அம்சங்கள். உயிரியல் செயற்பாடுகளின் கலவை மற்றும் மருந்து பற்றிய ஆய்வு - கலாநிதி ஜினசேன ஹேவகே மற்றும் கலாநிதி ஹேமலிகா வடுமெனிகே - ருஹூணு பல்கலைக்கழகம்
3. இலங்கை ஓநான் மற்றும் சிலந்திகள் பற்றிய உயிரணு வகைப்படுத்தல் விஞ்ஞானவியல் ஆராய்ச்சி - பேராசிரியர் கே.பீ. ரணவக்க மடியாஸ் ஹர்மன், ஏ.என் துடுகல மற்றும் வீ.ஏ.ஓ.எஸ். ஜயரத்ன. பேராதெனிய பல்கலைக்கழகம்
4. தாவர பகுப்பாய்பு - கலாநிதி ஏ.எம்.ஏ.எஸ் அத்தநாயக்க, தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் பேராதெனிய
5. இலங்கையின் *Cryptocoryne* இன (அதிஉதயன்) வகையின் விரிவாக்கத்தை மட்டுப்படுத்தல் - ஒருங்கிணைந்த உருவவியல் மற்றும் மூலக்கூறு பைலோஜெனடிக் அணுகுமுறை - கலாநிதி சுபானி டப்லிவ் ரணசிங்க மற்றும் பேராசிரியர் தீப்தி யகந்தாவல, தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் பேராதெனிய
6. இலங்கையின் மலையுச்சிகளில் காணப்படுகின்ற தாவரங்களின் பகுப்பாய்வு - ஸ்ரீபாதமலை மலையின் தாவரங்கள் - கலாநிதி ஏ.எம்.ஏ.எஸ் அத்தநாயக்க, தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் பேராதெனிய மற்றும் கலாநிதி எச்.எஸ் கத்திரிஆரச்சி கொழும்பு பல்கலைக்கழகம்
7. கந்தப்பொல - சீதா எலிய ஒதுக்குக் காட்டில் பூக்கும் தாவரங்கள் மற்றும் தாவரங்களின் விரிவாக்கம் பற்றிய ஆராய்ச்சி - கலாநிதி ஏ.எம்.ஏ.எஸ் அத்தநாயக்க, தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் பேராதெனிய மற்றும் குலரத்ன தேசிய தாவரவியல் பூங்கா திணைக்களம் பேராதெனிய
8. பம்ப்பொட்டுவ ஒதுக்குக் காட்டில் காணப்படுகின்ற பூக்கும் தாவரங்கள், தாவரங்கள் மற்றும் பாசிகளின் பல்வகைத் தன்மையை பகுப்பாய்வு செய்யும் ஆரம்ப மீளாய்வு - கலாநிதி சுபானி டப்லிவ் ரணசிங்க மற்றும் ஏ.ஜீ. சுனில் தேவிய தாவரவியல் பூங்கா திணைக்களம், பேராதெனிய
9. இலங்கை நீர்கொழும்பு களப்புகளில் காணப்படுகின்ற அத்தலைகனிய திரவத்தின் வேதியியல் உயிரியல் திறன்: விசேட கட்டமைப்பு மற்றும் உயிரியல் செயற்பாட்டின் கலப்பை இது வரை பயன்பாட்டுக்கு எடுத்துக் கொள்ளாத வளங்கள் - பேராசிரியர். பீ.ஏ பரணகம மற்றும் கலாநிதி. கே.பீ.ஆர். என் அத்தநாயக்க. களனி பல்கலைக்கழகம்.
10. இலங்கை நகல்ஸ் உலக மரபுரிமை பேணல் காட்டில் வல் உடவெடியா இனத்தை கண்டுபிடித்தல். - கலாநிதி. எச்.ஐ.ஜீ.சீ. குமார மற்றும் வீ.ஏ.எம்.பீ.கே. சமரவிக்ரம, ருஹுணு பல்கலைக்கழகம்.
11. இலங்கையில் மேல் மற்றும் மத்திய நாட்டு ஈர வலயத்தில் உள்ள மண்ணில் காணப்படுகின்ற நச்சுக் சுவடு கூறுகளின் அடிப்படை செறிவுகள், கரைதிறன் மற்றும் இடஞ்சார்ந்து கிடைக்கும் தன்மை - கே.பீ.ஆர். என் அத்தநாயக்க மற்றும் கலாநிதி. டப்லிவ் ஏ.வீ விதாரண, பேராதெனிய பல்கலைக்கழகம்.

12. *Buctrocera dorsalis* வளாகத்தின் சர்வதேச அளவில் முக்கியமான இரண்டு பூச்சி இனங்களான *B.invadens*" Drew" Tsuruta மற்றும் White அத்துடன் *B. Kandiensis* கலாநிதி. யு.ஜி.ஏ.ஐ சிரிசேன மற்றும் கலாநிதி கென்ஜி டியுருடா. ரஜரட்ட பல்கலைக்கழகம்.

## 68 வது கூட்டம் (2018 / 02)

1. *Duttaphrynus melanostictus, Euphlyctis Cyanophlyctis* සහ *Lankanectus corrugatus* ஆகிய மூன்று anurans களின் சூழலியல், உருவவியல் மற்றும் மரபணு அமைப்பில் உள்ள மாறுபாடுகளை ஆராய்தல்.

2. இலங்கையில் காணப்படுகின்ற *Boiga* வம்சாவளி (இனம் - Colubridae) தன்மை பற்றிய ஆய்வு - பேராசிரியர். ரணவக்க, பேராதெனிய பல்கலைக்கழகம்.

3. பெருந்தெருக்கள், புகையிரத பாதைகள், மின்சாரக் கம்பிகள் போன்ற நேரொத்த அபிவிருத்தியின் ஊடாக வன சீவராசிகளுக்கு ஏற்படுகின்ற தாக்கங்கள் - பேராசிரியர். தேவக கே. வீரகோன், பேராசிரியர். எம், ஆர் விஜேசிங்க கொழும்பு பல்கலைக்கழகம்.

4. இலங்கையின் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படுகின்ற அடர்த்தியான மற்றும் திறந்த காடுகள் மற்றும் வனச் செய்கை தொடர்பான புள்ளிவிபர மற்றும் தொழிற்பாட்டு முறைமை - கலாநிதி சிவமணி சிவச்சந்திரன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

5. இலங்கையின் அனுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள வெத்தாகந்த ஒதுக்குக் காட்டின் காபன் இருப்பு மற்றும் பல்வகைத் தன்மையின் அளவு - கலாநிதி சிவமணி சிவச்சந்திரன், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

6. வாழ்விட மாறுபாட்டிற்கு பதிலளிக்கும் விதமாக குழுக் கலவை மற்றும் கட்டமைப்பில் மாற்றங்கள் - பேராசிரியர். எச்.ஆர். விஜேசிங்க. கொழும்பு பல்கலைக்கழகம்.

7. கன்னெலிய ஒதுக்குக் காட்டிற்கு அருகாமையில் அமைந்துள்ள சேதத்துக்குள்ளான பரணாங்க பிரதேசத்தின் புனரமைப்பு மற்றும் முகாமைத்துவம் - இலங்கையின் IUCN நிறுவனம்.

8. இலங்கையின் ஈர வலயத்தின் பல்வேறு வாழிடத்தைக் கொண்ட இரண்டு வகை அந்துப் பூச்சிகளின் பல்வகைத் தன்மை (Insecta, Lepidoptera) கலாநிதி சந்திமா தீபானி தங்கல்ல, கொழும்பு பல்கலைக்கழகம்.

9. இலங்கையில் காணப்படுகின்ற ஈரூடக வாழிகள் மற்றும் ஊர்வன இனங்களில் காணப்படுகின்ற இடைவெளிகள் பற்றிய ஆய்வு, இனப்பெருக்கம் மனிதனின் அச்சுறுத்தல் மற்றும் பாதுகாப்பு நிலைமை பற்றிய மதிப்பீடு - எல்.ஜே. மெண்டிஸ் விக்ரமசிங்க, தலைவர் ஈரூடக வாழிகள் மன்றம் இலங்கை.

10. மெல்சிரிபுர தொழுகந்த மற்றும் கல்கிரியாகந்த பிரதேசத்தில் மூலிகைப் பெறுமானத்தைக் கொண்ட மனித இனத்துக்குத் தேவையான தாவரவியல் தொடர்பான ஆய்வு - கலாநிதி. ஜயந்த விஜய பண்டார, பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுர்வேத ஆராய்ச்சி நிலையம்.

11. நடுத்தர தெளிவுத்திறன் கொண்ட செயற்கைக்கோள் படங்களைப் பயன்படுத்தி வீரக்கொடிச்சோலை - வன்னியாகம காடுகளை உள்ளடக்கியதாக வகைப்படுத்தல் மற்றும் மாற்றங்களை பகுப்பாய்வு செய்தல். - கலாநிதி.கே.ரீ பிரேமகாந்த

12. வீரக்கொடிச்சோலை - வன்னியாகம வன வளாகத்தின் நிலப்பரப்பு நிலை கார்பன் பங்கு மதிப்பீடு கலாநிதி கே.ரீ. பிரேமகாந்த

13 இலங்கை *Lagoenandra* பாதுகாப்பு மற்றும் அதன் உயிரியல் பௌதீகம் - பேராசிரியர்.கே.யகந்தாவல, வயம்ப பல்கலைக்கழகம், இலங்கை.

**69 வது கூட்டம் (2018 / 03)**

1. இலங்கையின் பல்வேறுபட்ட பௌதீகவியல் சார்ந்த மூன்று இடங்களில் Carnivora இனத்தைச் சேர்ந்த நடுத்தர அளவிலான ஊர்வனவின் பல்வகைத் தன்மை மற்றும் சூழலியல் - பேராசிரியர். டப்லிவ். ஏ.டீ மகஉல்பத்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
2. பாரம்பரிய மற்றும் மூலக்கூறு உயிரியல் கருவிகளை ஆகிய இரு கருவிகளையும் பயன்படுத்தி *Dendrobium* மரபணு வேறுபாடு மற்றும் வகைகளை மேம்படுத்தல் பேராசிரியர். பிரியங்கனி சேனநாயக்க.
3. *Osbeckia lantana Alston* என்னும் அழிந்து போகும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள தாவர இனத்தின் இயற்கை மூலோபாய மீட்புத் திட்டம் கலாநிதி ஏ.எம்.ஏ.எஸ். அத்தநாயக்க றோயல் தாவரவியல் தோட்டம்.
4. நீரின் தரத்தை தீர்மானிப்பதற்கான நன்னீர் பூச்சிகள் – கலாநிதி நிர்மலி பல்லேவத்த கொழும்பு பல்கலைக்கழகம்.
5. இலங்கையில் உண்ணக்கூடிய காட்டு காளான் நிலைமைகளை மேம்படுத்துதல் - கலாநிதி. முனசிங்க ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம்.
6. இலங்கையின் மழை வீழ்ச்சி காணப்படுகின்ற காடுகளின் *Ceratophara aspera* தாவர இனங்களின் அளவினை மதிப்பீடு செய்தல் மற்றும் மரபணு பல்வகைத் தன்மையை வரைபடமாக்குதல். - கலாநிதி நிர்மலி பல்லேவத்த கொழும்பு பல்கலைக்கழகம்.
7. இடம் சாராத உயிர்சக்தித் தன்மைக்காக *Gyrinops walla* தாவரங்கள் மற்றும் அது சம்பந்தமான திறன் - பேராசிரியர்.பிரீதி சொய்சா கொழும்பு பல்கலைக்கழகம்.

**70 வது கூட்டம் (2018 / 04)**

1. நுவரெலியா மாவட்டத்தின் விவசாய நிலங்களில் நத்தைகளின் பெருக்கம். அதன் அவற்றின் பருவகாலம் மற்றும் பயிர்களுக்கு சேதங்களை ஏற்பத்தும் தன்மை - கலாநிதி. என்.பீ.எஸ். கும்புரேகம,பேராதெனிய பல்கலைக்கழகம்.
2. இலங்கையில் உள்ள கறிவேப்பிலையை உணவுக்காக எடுக்கும்போது உணவில் மீதமாக உள்ள தெரிவு செய்யப்பட்ட பூச்சிகொல்லி எச்சங்களை உரிஞ்சுதல். மற்றும் அதன் கெரட்நொயிட் சேர்க்கையின் மாற்றங்கள் தொடர்பில் அதன் தாக்கம் கலாநிதி.டீ.ரீ. அபேசிங்க இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.
3. இலங்கையில் காணப்படுகின்ற Myrtaceae இனத்தைச் சேர்ந்த *Zyzygium* வகையின் DNA நிரல் குறியீடிடுதல் உருவவியல் மற்றும் மூலக்கூறு மற்றும் குடும்பப் பரம்பரை – பாதுகாப்புக்காக காணப்படுகின்ற தொடர்புகள் அத்துடன் நிலையான பயன்பாடு - கலாநிதி. எச்.எஸ் கத்திரிஆரச்சி கொழும்பு பல்கலைக்கழகம்.
4. துண்டோலா பாதுகாப்புக் கருத்திட்டம் - வாழிட மீட்சி மற்றும் சமூக விழிப்புணர்வு மூலம் துண்டோலா சுற்றாடல் முறைமையை பாதுகாத்தல். - ஹர்சனி த சில்வா, உயிரியல் பல்வகைத் தன்மை நிறுவனம். இலங்கை.

5. இலங்கையின் கண்டல் பிரதேசம் மற்றும் கடல் சதுப்பு சுற்றாடல் முறைமையில் காபனை பிடித்து வைக்கும் சாத்தியம் பற்றிய மதிப்பீடு மற்றும் வரைபடமாக்குதல். - கலாநிதி. ரேணுகா ரத்நாயக்க, தேசிய ஆரம்ப ஆய்வு நிறுவனம்.

6. இலங்கையின் *Strobilanthes* இனத்தை பாதுகாத்தல் மற்றும் வகைப்படுத்தலை மீளாய்வு செய்தல் - ஆர்.எம்.ஆர் நிலந்தி, வனசீவராசிகள் திணைக்களம் .

**<u>தற்பொழுது மேற்கொள்ளுகின்ற கருத்திட்டக் காலப்பகுதியை நீடித்தல்.</u>**

1. இலங்கையில் காணப்படுகின்ற இலைவடிவ liverworts வகைப்படுத்தல் மற்றும் உயிர் புவியியல் - கலாநிதி. சுமுது கே சுபசிங்க, பேராதெனிய பல்கலைக்கழகம்.

2. இலங்கை தும்பி இனத்தின் (Dragonflies மற்றும் Damselflies) விரிவாக்கம் மற்றும் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆய்வு, கலாநிதி ஜோர்ஜ் வென்டர் பூர்டன். ஹம்மாலிவத்த, பண்டாரகொஸ்வத்த.

3. அம்பொக்க மலையுச்சியில் தாவரங்களின் பல்வகைத் தன்மை - பேராசிரியர்.எச்.எம்.எஸ்.பி. மடவல, பேராதெனிய பல்கலைக்கழகம்.

4. இலங்கை வண்ணாத்திகளின், விரிவாக்கம் மற்றும் வாழ்க்கை வரலாறு பற்றிய ஆய்வு, கலாநிதி ஜோர்ஜ் வென்டர் பூர்டன் ஹம்மாலிவத்த, பண்டாரகொஸ்வத்த.

5. சிங்கராஜ ஒதுக்குக் காட்டின் Folicolous மரப்பாசிகள் பற்றிய வகைப்படுத்தல் ஆய்வு - கலாநிதி. ஆர்.ஜீ.யு. ஜயலால் சபரகமுவ பல்கலைக்கழகம்.

6. இலங்கையில் குரங்கு - மனிதன் மோதலுக்கான தீர்வின் ஊடாக உயிர் விலங்குகளைப் பாதுகாத்தல். - பேராசிரியர்.தேவக வீரகோன் கொழும்பு பல்கலைக்கழகம்.

7. இந்திகட அடர்ந்த காடு உத்தேச ஒதுக்குக் காட்டுக்குள் வசிக்கின்ற *Semnopithecus vetulus nester* இனத்தின் சூழலியல், உணவுப் பழக்கம் மற்றும் பயன்படுத்தும் இடப்பரப்பு பற்றிய ஆய்வு மற்றும் இந்த இனத்தை பாதுகாப்பதற்கு மக்களின் ஒத்துழைப்பை பெறல் - கலாநிதி. ஜினி தேல.

8. இலங்கையில் வசிக்கின்ற கிரேப் சிலந்திகளின் உயிரியல் பல்வகைத் தன்மை அவற்றின் உருவவியல் மற்றும் DNA நிரல் குறியீட்டினைப் பயன்படுத்தி ஆய்வு செய்தல். - பேராசிரியர். எஸ்.பீ.பென்ஜமின் தேசிய ஆரம்ப ஆய்வு நிறுவனம்.

9. இலங்கையின் தோல் விலங்கினங்களின் மூலக்கூறு முறையான, பரிணாமம் மற்றும் உயிர் புவியியல் பற்றிய ஆய்வு - கலாநிதி.கே.டீ.பீ உக்குவல ரஜரட்ட பல்கலைக்கழகம்.

10. கன்னெலிய ஒதுக்குக் காட்டின் தாவரங்களின் பல்வகைத் தன்மை கலாநிதி.லேகா வனசேகர ஹொரைசன் பல்கலைக்கழகம், மாலபே.

11. வன இயக்கவியல் பற்றிய ஆய்வுக்காக சிங்கராஜவில் உள்ள 25 ஹெக்டயார் காணிகளில் ஐந்தாவது தடவையாகவும் மேற்கொண்ட புள்ளிவிபரங்கள் - பேராசிரியர்.சிசிர எதிரிவீர, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்.

12. துணை - போசணை மட்டத்தில் மண் பொஸ்பரஸ் மற்றும் காபன் பங்குகள் சார்ந்த விரிவான புள்ளிவிபரவியலை தயாரித்தல். - கலாநிதி. டப்லிவ் ஏ. வீ விதாரண, பேராதெனிய பல்கலைக்கழகம்.

13. குமாரகல ஒதுக்குக் காட்டினுள் உள்ள மரகமுவவில் அமைந்துள்ள வெட்டு மரங்களை அகற்றிய இயுகெலிப்டஸ் வனச் செய்கையில் உயிரியல் பல்வகைத் தன்மையை பாதுகாத்தல். - பேராசிரியர். கே.பீ ரணவன, பேராதெனிய பல்கலைக்கழகம்.

14. உயிரியல் பல்வகைத் தன்மை சிறப்பாக உள்ள இடத்தை பாதுகாக்கும் செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு இலங்கையின் நன்னீர் மீன்களின் பரிணாம சூழலியல் மற்றும் பரம்பரை - கலாநிதி. மாதவ மீகஸ்கும்புர, பேராதெனிய பல்கலைக்கழகம்.

15. வெப்ப மண்டல மழை சார்ந்த காடுகளில் காபன் மற்றும் உயிரியல் பல்வகைத் தன்மை தொடர்பில் எதிர்கால வானிலை மாற்றங்களின் தாக்கம் பற்றிய எதிர்வுகூறலைத் தெரிவிப்பதற்காக மாற்றமடைகின்ற வளிமண்டல வெப்பநிலைக்கு இலங்கையில் காணப்படுகின்ற குறித்த காடுகளின் பெறுபேற்றின் அளவினை கணக்கிடல் - பேராசிரியர். டப்லிவ். ஏ.ஜே. எம். கொஸ்தா, பேராதெனிய பல்கலைக்கழகம்.

16. இலங்கையில் மரபணு ஓட்டம் மற்றும் அதன் பிரதிபலனாக ஏற்படுகின்ற தனிச் சிறப்பிற்கான தடை - வானிலை மற்றும் தட்பவெப்பநிலைகளின் தொடர்ச்சியாக உள்ளூர் பறவைகள் மற்றும் அதனது பரம்பரைக்கிடையேயான மரபணு ஓட்டம் அத்துடன் அம்ச மாற்றங்களின் மட்டம் பற்றிய ஆழமான மதிப்பீடு - கலாநிதி. சம்பத் எஸ். செனவிரத்ன கொழும்பு பல்கலைக்கழகம்.

17. Trematode மற்றும் புற ஊதா கதிர்வீச்சு தூண்டல்கள் ஊடாக ஏற்படுகின்ற மாற்றங்கள் அத்துடன் ஈருடக வாழிகள் தொடர்பிலான நச்சுயிரிகளில் மூலம் ஏற்படுகின்ற நச்சுத்தன்மை பேராசிரியர். ஆர்.எஸ் ராஜகருணா, பேராதெனிய பல்கலைக்கழகம்.

### 5.8 நூலகம்.

ரூபா. 494,347.50 பெறுமதியான புத்தகங்களும் சஞ்சிகைகளும் நூலகத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டன. 48 தலைப்புகளிலான புத்தகங்களும் 08 தலைப்புகளிலான சஞ்சிகைகளும் இவ்வாண்டின்போது கொள்வனவு செய்யப்பட்டன. அன்பளிப்பாக 60 தலைப்புகளிலான புத்தகங்கள் கிடைக்கப்பெற்றன.

CD – ISIS நூலக பொதியினைப் பயன்படுத்தி நூலக புத்தகங்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று கணனிமயப்படுத்துவது உரிய ஆண்டுக்குள். மொத்தமாக 5,100 பதிவுகள் இத்தரவு தளத்தில் பதிவு செய்யப்பட்டன.
வனப் பாதுகாப்புத் திணைக்களம் இந்த ஆண்டும் IUFRO அங்கத்துவத்தைப் பெற்றுள்ளது. (அங்கத்துவப் பணமாக 76,387.00 ரூபா செலுத்தப்பட்டுள்ளது)

### 5.9 வனவியல் தகவல் சேவை.

இலங்கை பொரஸ்ட் சஞ்சிகையின் 39 வது தொகுதி வெளியிடப்பட்டது.

## 5.10 வனவியல் கற்கை

### 5.10.1 திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பொதுவான பாடநெறிகள்.

வனவியல் டிப்ளோமா பாடநெறியின் (NVQ மட்டத்திலான) கீழ் 47 வட்ட வன உத்தியோகத்தர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன. இந்த பாடநெறிக்கு தொழில்நுட்ப மற்றும் மென்பொருள் தேர்ச்சி ஆகிய இரு வகையிலுமான பாடநெறிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. 2018 ஆம் ஆண்டு இலங்கை வனவியல் நிறுவனத்தின் ஊடாக வழங்கப்பட்ட தொழில்நுட்பவியல் NVQ 5 மட்டத்திலான பாடநெறிக்கு வரவேற்புகள் கிடைக்கப் பெற்றன. NVQ 5 பாடநெறி மற்றும் அதன் பரீட்சைகள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது. பாடநெறியின் மதிப்பீட்டு வினாப் பத்திரங்கள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட தரப்படுத்துநர்களினால் தரப்படுத்தப்பட்டது. NVQ 5 வது மட்ட பாடநெறியின் உள்ளடக்கம் 5.2(அ) மற்றும் 5.2(ஆ) அட்டவணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளன.

**அட்டவணை** 5.2 (அ) – வனவியல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி NVQ 5 மட்ட பாடநெறியின் 1 வது கல்வித் தவணையின் பாடநெறி உள்ளடக்கம்.

| மொடியுல் குறியீடு | கற்கை அலகு (மொடியுல்) | வகுதி | மணி | விரிவுரை / ஆய்வரிக்கை | செயல்முறை / ஆக்கம் /வெளிக்கள பயணம் | சுய கற்கை |
|---|---|---|---|---|---|---|
| A02C001M01 | ஆரம்ப கணிதம் | C | 50 | 30 | 10 | 10 |
| A02C001M02 | தாவரவியல் கோட்பாடு | C | 50 | 36 | 12 | 02 |
| A02C001M10 | நாற்று முகாமைத்துவம் | C | 100 | 30 | 60 | 10 |
| A02C001M03 | மர நடுகை வெட்டு மரம் சாராத காட்டு விளைபொருள் மற்றும் அவற்றின் பயன்பாடு | C | 150 | 84 | 42 | 24 |
| A02C001M04 | காடுகளை அளத்தல் மற்றும் புள்ளிவிபரம். | C | 100 | 40 | 42 | 18 |
| A02C001M06 | வனவியல் மற்றும் சுற்றாடலை அறிமுகப்படுத்தல். | C | 100 | 60 | 20 | 20 |
| A02C001M11 | அளவீடு மற்றும் வரைபடம் தயாரித்தல் | C | 75 | 24 | 42 | 09 |
| A02C001M16 | தீ முகாமைத்துவம் | C | 25 | 10 | 10 | 05 |
| வேலை வாய்ப்புத் திறன் மொடியுல் | | | | | | |
| EMPM01 | சேவை நிலையத்தின் தகவல் முகாமைத்துவம் | C | 75 | 30 | 30 | 15 |
| | | | 750 | | | |

**அட்டவணை** 5.2 (ஆ) – வனவியல் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி NVQ 5 மட்ட பாடநெறியின் 2 வது கல்வித் தவணையின் பாடநெறி உள்ளடக்கம்.

| மொடியுல் குறியீடு | கற்கை அலகு (மொடியுல்) | வகுதி | மணி | விரிவுரை / ஆய்வரிக்கை | செயல்முறை / ஆக்கம் /வெளிக்கள பயணம் | சுய கற்கை |
|---|---|---|---|---|---|---|
| A02C001M07 | தொலைத் தொடர்பு GIS - 1 | C | 50 | 20 | 22 | 08 |
| A02C001M08 | வன முகாமைத்துவம் - 1 | C | 50 | 30 | 12 | 08 |
| A02C001M12 | சுற்றாடல் சுற்றுலாத் துறை | C | 75 | 33 | 36 | 06 |
| A02C001M13 | காடுகளில் அறுவடைகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஆரம்ப பொறியியல் நுட்பம் | C | 75 | 36 | 30 | 09 |
| A02C001M14 | வெட்டுமரம் மற்றும் வெட்டுமர பாவனை | C | 75 | 30 | 36 | 09 |
| A02C001M15 | சமூக வனவியல் மற்றும் வன விரிவாக்கம் | C | 100 | 60 | 40 | 10 |
| A02C001M09 | பகுதி நிருவாகம் - 1 | C | 50 | 30 | 06 | 14 |
| A02C001M17 | சட்டத்தை நடைமுறைப்படுத்தல் | C | 100 | 72 | 24 | 04 |
| A02C001M05 | தாவரவியல் | | 75 | 30 | 36 | 09 |
| வேலை வாய்ப்புத் திறன் மொடியுல் | | | | | | |
| EMPM02 | சேவை நிலையத்தின் தொடர்பாடலை முகாமைப்படுத்தல் | C | 50 | 20 | 20 | 10 |
| EMPM03 | சேவை நிலையத்தின் கடமைகளை திட்டமிடல் மற்றும் அட்டணைப்படுத்தல். | | 75 | 30 | 20 | 25 |
| மொத்தம் | | | 750 | | | |

**5.10.2 வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்கான குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்**

சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக இலங்கை வனவியல் நிறுவனத்தில் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக சுற்றாடல் முறைமையை பாதுகாத்தல் மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் மூலம் நிதியுதவி வழங்கப்பட்டது. இலங்கை வனவியல் நிறுவனத்தின் பணியாட் தொகுதியினால் இந்த பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டதுடன் வெளி நிறுவன வள ஆளணியும் பெற்றுக் கொள்ளப்பட்டது. இந்த பாடநெறி பற்றிய சிறிய விபரம் அட்டவணை 5.3 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.3 - 2018 ஆண்டுக்குள்** இலங்கை வனவியல் நிறுவனத்தில் வனப் பாதுகாப்பு திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற உத்தியோகத்தர்களுக்காக நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்.

| தொடரிலக்கம் | பாடநெறியின் பெயர் | கலந்து கொண்ட குழு | இடம் | கலந்து கொண்டோர் எண்ணிக்கை | திகதி | நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | உலர் வலய காடுகளில் சேதத்துக்குள்ளான பிரதேசங்களை புனரமைத்தல். | வட்ட வன உத்தியோகத்தர்/ வனக் கட்டுப்பாட்டாளர் | பட்டபிலிகந்த மின்னேரி | 31 | 14.03.2018<br>16.03.2018 | 03 |
| 02 | உலர் வலய காடுகளில் சேதத்துக்குள்ளான பிரதேசங்களை புனரமைத்தல். | வட்ட வன உத்தியோகத்தர்/ வனக் கட்டுப்பாட்டாளர் | அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் அனுராதபுரம் | 30 | 06.06.2018<br>08.06.2018 | 03 |
| 03 | ஆற்றல் விருத்தி மற்றும் தலைமைத்துவ பயிற்சி | வனவியல் நிறுவனத்தின் பணியாட் தொகுதி மற்றும் வட்ட வன உத்தியோகத்தர் (பயிற்சி) | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 60 | 18.05.2018<br>19.05.2018 | 01 |
| 04 | வனவியல் தொடர்பான உயர் கணினிப் பயன்பாடு | வனவியல் நிறுவனத்தின் பணியாட் தொகுதி / ஆராய்ச்சி பணியாட் தொகுதி/ மாவட்ட வன அலுவலக | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 30 | 08.08.2018<br>10.08.2018 | 03 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | பணியாட் தொகுதி | | | | |
| 05 | சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் நீதிமன்ற நடைமுறை பற்றிய சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | வட்ட வன உத்தியோகத்தர் / பகுதி வன உத்தியோகத்தர்/ வன வெளிக்கள உதவியாளர் | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 50 | 09.07.2018<br>13.07.2018 | 05 |
| 06 | தலைமைத்துவப் பயிற்சி | வட்ட வன உத்தியோகத்தர் (பயிற்சி) | இனாமலுவ | 50 | 20.07.2018<br>22.07.2018 | 03 |
| 07 | வனவியல் நாற்று முகாமைத்துவம் சம்பந்தமான பயிற்சி | பகுதி வன உத்தியோகத்தர் / வன வெளிக்கள உதவியாளர் | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 40 | 30.07.2018<br>02.08.2018 | 05 |
| 08 | ஆக்கிரமிப்பு அந்நிய இனத் தாவரங்கள் பற்றிய முழுமையான பயிற்சி | வட்ட வன உத்தியோகத்தர்/ வனக் கட்டுப்பாட்டாளர் | பசறை, பதுளை | 38 | 18.09.2018<br>20.09.2018 | 03 |
| 09 | தேசிய தாவரவியல் பூங்காவின் வனவியலுக்கான வீட்டுத்தோட்டவியல் பற்றிய தொழில்நுட்பம் | வனவியல் நிறுவனத்தின் பணியாட் தொகுதி /வெளிக்கள தொழிலாளர்கள் | ரோயல் தேசிய தாவரவியல் பூங்கா, பேராதெனிய | 40 | 22.10.2018<br>26.10.2018 | 05 |
| 10 | சட்டத்தை நடைமுறைப்படுத்தல் மற்றும் நீதிமன்ற நடைமுறை பற்றிய சேவைக்காலப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | வட்ட வன உத்தியோகத்தர் / பகுதி வன உத்தியோகத்தர்/ வன வெளிக்கள உதவியாளர் | அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் அனுராதபுரம் | 75 | 27.08.2018<br>31.08.2018 | 05 |
| 11 | ஒழுக்காற்று நடைமுறைத் திட்டம் பற்றிய பயிற்சி | வனப் பாதுகாப்பு திணைக்கள உத்தியோகத்தர்கள், உதவி காடு பேணுநர், விசேட வனக் கட்டுப்பாட்டாளர், வனக் கட்டுப்பாட்டாளர், வட்ட வன உத்தியோகத்தர் | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 42 | 24.05.2018<br>25.05.2018 | 02 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 12 | சுற்றுச்சூழல் மேலாண்மைக்கான இயற்கை அணுகுமுறை குறித்த விழிப்புணர்வு திட்டம் | வனவியல் நிறுவனத்தின் பணியாட் தொகுதி, வட்ட வன உத்தியோகத்தர் (பயிற்சி) | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 54 | 03.12.2018 | 01 |
| 13 | புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட வெ ளிக்கள உத்தியோகத்தர்களுக்கா ன நியமன வழங்கல் பயிற்சி | வட்ட வன உத்தியோகத்தர், வன விரிவாக்கல் உத்தியோகத்தர். வன வெளிக்கள உத்தியோகத்தர் | இலங்கை வனவியல் நிறுவனம் நுவரெலியா | 38 | 05.11.2018<br>11.11.2018 | 07 |

### 5.10.3 ஏனைய நிறுவனங்களுக்கான குறுகிய கால பயிற்சிகள்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் எரிபொருள் விறகு Botany Biomass கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் திறமுறையான விறகு உற்பத்தி தொடர்பாக ஒரு குறுகிய கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டமொன்று நடத்தப்பட்டது. பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கான நிதியுதவி குறித்த கருத்திட்டத்தின் ஊடாக வழங்கப்பட்டது. பெருந்தோட்டம், கமம் ஆகிய துறைகளிலும் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் 30 பேர் இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர். குறித்த பயிற்சி தொடர்பிலான மேலதிகத் தகவல்கள் அட்டவணை 5.4 மூலம் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.4 -** ஏனைய நிறுவனங்களுக்கான குறுகிய கால பயிற்சிகள்

| தொடரிலக்கம் | பாடநெறியின் பெயர் | கலந்து கொண்ட குழு | இடம் | கலந்து கொண்டோர் எண்ணிக்கை | திகதி | நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| 01 | இலங்கையின் திறமுறையான எரிபொருள் விறகு உற்பத்தி தொடர்பான மூன்று நாள் வதிவிடப் பயிற்சி | பெருந்தோட்டம், கமம் ஆகிய துறைகளின் ஊழியர்கள் | பண்டாரவெல எரபெத்த வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நாற்று மேடை | 30 | 07.10.2018<br>09.10.2018 | 03 |

265 வன வெளிக்கள உதவியாளர்களுக்கான தாவரவியல் (ஆரம்ப மட்டம்) தொடர்பான கோட்பாட்டு பரீட்சை நடத்தப்பட்டது. கோட்பாடு மற்றும் செயல்முறை ஆகிய இரண்டு பரீட்சைகளினதும் பெறுபேறுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. ( மாவட்ட வன உத்தியோகத்தர்களினால்)

### 5.10.4 சுற்றாடல் முறைமை பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படுகின்ற நிதியுதவியைப் பயன்படுத்தி இலங்கை வனவியல் நிறுவனத்தை புனரமைத்தல் மற்றும் மேம்படுத்தல்.

உலக வங்கி உதவி வழங்குகின்ற சுற்றாடல் முறைமை பாதுகாப்பு கருத்திட்டத்தின் கருத்திட்ட தொழிற்பாட்டுப் பிரிவின் ஊடாக இலங்கை வனவியல் நிறுவனம் மற்றும் இனாமலுவ வெளிக்கள நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு மற்றும் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கருத்திட்டத்தின் ஆக்கப் பணிகள் மற்றும் கண்காணிப்பு Resource Development Consultant (Pvt) Ltd. நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு இடங்களுக்காகவும் வரைபட நிருமாணிப்புகள் தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. இதற்கான அங்கீகரிப்புகள் உரிய நிறுவனங்களிடம் இருந்து பெறப்பட்டுள்ளன. மேலதிக திட்டமிடல் பணிகள், BOQ தயாரிக்கும் பணிகள் மற்றும் கேள்வி கோரல் ஆவணங்கள் தயாரிக்கும் பணிகள் தற்பொழுது மேற்கொள்ளப்படுகின்றன.

பிரிவின் கோட்பாட்டு செயலாற்றுகை

. ***பிரிவுக்கு கிடைத்த மொத்த ஒதுக்கீட்டு அளவான 27.971 மில்லியன் தொகையில் 27.410 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டன***

# 06 ஆவது அத்தியாயம்

## வனப் பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவு

### 6.1 அறிமுகம்

வனப் பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும்பிரிவின் பிரதான நோக்கமானது சட்ட ரீதியான பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொண்டு பெறுமதி வாய்ந்த இயற்கைக் காடுகள் வனச் செய்கைகள் மற்றும் அதிலுள்ள உயிர் வாழ்வுகள் ஏனைய உயிரியல் பல்லினத்தன்மைக்கு பங்களிப்புச் செய்கின்ற வளங்களை பாதுகாப்பதற்கும் பேணுவதற்கும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் காடுகளில் தங்கி வாழ்கின்ற சுற்றாடல் சேவைகள், வன உற்பத்திகளை தொடர்ச்சியாக வழங்கி அரசுக்குரிய வளங்களுக்குக் கிடைக்ககூடிய சட்டரீதியான பாதுகாப்பை வழங்குவதாகும். இதற்கு மேலதிகமாக பிரதேச பதவியினர், துரித சுற்றி வளைப்புப் பிரிவு மற்றும் வெட்டு மரங்களை பரிசோதனையிடும் நிலையங்களூடாக சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பணிகளை மேற்கொள்கின்றது.

### 6.2 பிரதான செயற்பாடுகள்

வனப் பாதுகாப்பு மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பிரிவின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:

- I காட்டுக் கட்டளைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- II தேசிய மரபுரிமைக் காணிச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்
- III காட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காடுகளைப் பிரகடனப்படுத்துதல்.
- IV மரங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் மற்றும் மரங்களை எடுத்துச் செல்வதை கட்டுப்படுத்துதல்.
- V அரசாங்கக் காடுகளின் வளங்கள் பௌதிக ரீதியாகப் பாதுகாத்தலும் கட்டுப்படுத்துதலும்.
- VI வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதியத்திலிருந்து நிருவாகப் பணிகளை மேற்கொள்ளல்.
- VII வன உத்தியோகத்தர்களுக்கான சீருடைகள் கொள்வனவு செய்தலும் விநியோகித்தலும்.
- VIII வெட்டுமரம் மற்றும் வெட்டுமரம் சாராத காட்டு விளைபொருள்களின் இறக்குமதியைக் கட்டுப்படுத்துதல்.

### 6.3.தாபன ஏற்பாடுகள்

2018 ஆண்டுக்குள் இந்தப் பிரிவானது காடு பேணுநர் ஒருவரின் கீழ் நிருவகிக்கப்பட்டதுடன் மேற்பார்வைப் பணிகளுக்காக உதவிக் காடு பேணுநர் ஒருவர் விசேட வனக் கட்டுப்பாட்டாளர்கள் மூவர் பகுதி வன உத்தியோகத்தர்கள் இருவர் மற்றும் வன வெளிக்கள உதவியாளர்கள் இருவர் ஒத்துழைப்பு வழங்கினர்..

23 மாவட்ட வன உத்தியோகத்தர்களுக்கும் அவர்களது வெளிக்கள பதவியினர்களுக்கும் இயைபுள்ள மாவட்டங்களில் அமைந்துள்ள அரசாங்கக் காடுகளைப் பாதுகாப்பதற்கும் சட்டத்தை நடைமுறைப்படுத்துவற்குமான பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

பிரதேச வெளிக்கள பதவியினர் தவிர்ந்த சிரேட்ட பிரதி காடுபேணுநரின் / வலயப் பிரதி காடுபேணுநர் / இயைபுள்ள மாவட்டங்களிலுள்ள மாவட்ட வன உத்தியோகத்தர்களின் மேற்பார்வையிலும் வழிகாட்டல்களிலும் நேரடியாக சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பின்வரும் அலகுகள் உள்ளன.

I) அவசர சுற்றி வளைப்புப் பிரிவு - 02
(தலைமை அலுவலகம் 01, வடமேல்/மேல் மாகாண வலய அலுவலகம் 01)
II ) நிரந்தர மரப் பரிசோதனை நிலையம் - 02
( தம்புள்ளை, பசியாலை)

பிரதான அலுவலகத்தில் உள்ள அவசர சுற்றி வளைப்புப் பிரிவு 03 விசேட வனக் கட்டுப்பாட்டாளர்களையும் 3 வட்டவன உத்தியோகத்தர்களையும் 02 பகுதி வன உத்தியோகத்தர்களையும் 2 வன வெளிக்கள உத்தியோகத்தர்களையும் கொண்டுள்ளதுடன் உதவி காடுபேணுநரின் கண்காணிப்பின் கீழுள்ளது. நாடு பூராவும் சட்ட விரோத செயற்பாடுகளை தடுப்பதற்கு உரியதான திடீர் சுற்றி வளைப்புகள் மேற்கொள்ளப்படும். இதற்கு மேலதிகமாக 1 பிரதான முகாமைத்துவ உதவியாளர், 2 முகாமைத்துவ உதவியாளர்கள். வன 6 வெளிக்கள உத்தியோகத்தர்கள். கடமைகளில் ஈடுபடுகின்றனர். மேலும் 4 அலுவலக உதவியாளர்கள், 1 அலுவலக தொழிலாளியும் கடமை புரிகின்றனர். வலய திடீர் சுற்றிவலைப்பு பிரிவு வனக் கட்டுப்பாட்டாளர். 2 வட்ட வன உத்தியோகத்தர்கள் மற்றும் 2 பகுதி வன உத்தியோகத்தர்களின் கீழ் செயற்படுகின்றது. திடீர் சுற்றி வளைப்பு பிரிவின் விசாரணைகள் மற்றும் புலனாய்வுகள் காடு பேணுநர் தலைமை அதிபதியின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும் அத்துடன் உரிய மாவட்ட வன உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் வெட்டுமரங்களை பரிசோதனையிடும் நிலையங்கள் செயற்படுவதுடன் இந்த அலகானது சிரேட்ட வட்ட வன உத்தியோகத்தர் ஒருவரின் தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுகின்றது.

## 6.4. செயற்பாடுகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

பாதுகாப்புத் தொடர்பில் பிரதான பணிகளை 23 மாவட்டங்களுடனும் இணைக்கப் பட்டுள்ள பிரதேசப் பதவியணியினரால் மேற்கொள்ளப்படுகின்றது. 2018 ஆம் ஆண்டில் இந்த திணைக்களப் பதவியினரால் 3,757 வனக் குற்றங்களுக்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டன.

பொதுமக்களிடம் இருந்து காடு பேணுநருக்கு அல்லது காடு பேணுநர் தலைமை அதிபதிக்கு அல்லது அமைச்சுக்கு அல்லது சனாதிபதி செயலகத்துக்கு நேரடியாகக் கிடைக்கின்ற தகவல்களின் அடிப்படையில் பாரிய அளவிலான வனக் குற்ற சுற்றி வளைப்புகள் பிரதான அலுவலகத்தின் சுற்றி வளைப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

காட்டுக் கட்டளைச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைவாக 24 மணித்தியாலமும் சட்ட விரோதமாக மரங்களை ஏற்றிச் செல்வதைப் பிடிப்பதற்கு நிரந்தர பரிசோதனை நிலையங்கள் செயற்படுகின்றன.

மரங்களை அரியுமிடம், மர விற்பனை நிலையம் இயந்திரம் மற்றும் இயந்திரம் சாராத மரக்காலை, விறகு விற்பனை நிலையம் போன்றவற்றை பதிவு செய்வதற்கு மாவட்ட வன உத்தியோகத்தரினதும் பிரதேச செயலாளரினதும் சிபாரிசின் அடிப்படையில் மாவட்ட வன உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படுகின்றன.

காட்டுக் கட்டளைச்சட்டத்திற்கு அமைவாக இலங்கையிலுள்ள காடுகளை பேணல் காடாக அல்லது ஒதுக்கு காடாக பிரகடனப்படுத்துதல் இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற மேலும் ஒரு பிரதான பணியாகும். இந்த செயற்பாடுகளுக்கு மேலதிகமாக வெட்டுமரங்கள் / வெட்டுமரங்கள் சார்ந்த உற்பத்திகள் மற்றும் மரங்கள் / மரங்கள் சார்ந்த பொருட்களின் ஏற்றுமதிக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கி இந்த பொருட்களின் ஏற்றுமதிக்கான ஒழுங்குறுத்துகைகளை மேற்கொள்தலும் இந்த பிரிவின் பொறுப்பாகும்.

## 6.5. காடு பேணல் கட்டளைச் சட்டத்தின் கீழ் புதிய காட்டுப் பிரதேசங்களை பிரகடனப்படுத்துதல்

2018 ஆம் ஆண்டுக்குள் இந்த நோக்கத்தின் கீழ் 6 அதிவிசேட அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் பேணற்காடு 01 மற்றும் ஒதுக்குக் காடுகள் 09 உம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

## 6.6 பாதுகாப்பு நடவடிக்கைகளிலுள்ள முன்னேற்றம்

#### 6.6.1. பொது

சட்ட விரோத மரம் வெட்டுதல், துப்புரவு செய்தல் ஏற்றிச் செல்லுதல், மாணிக்கக் கற்கள் அகழ்வு, அரசாங்கத்தின் மரங்கள் உடைமையில் வைத்துக் கொள்ளல் மற்றும் தனியார் மர விற்பனை நிலையத்தை பதிவு செய்யாதுள்ள தனியார் மரவிற்பனை நிலையங்களை நடாத்துகின்ற போன்ற 3,757 வனக் குற்றங்கள் 2018 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டுள்ளன.

திணைக்களத்தினால் சட்டவிரோத மரங்களை உடைமையில் வைத்திருந்தமை தொடர்பில் 84 இறுதித் தீர்மானங்கள் எடுக்கப்பட்டதுடன் மீதி 3,577 வனக்குற்றங்கள் நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளன. இவ் விசாரணைக்கு 3,990 நபர்கள் சம்பந்தப்பட்டுள்ளனர். இது தொடர்பான 53 வழக்குகளில் ஆட்கள் சிறைத்தண்டனைக்கு ஆளாகியுள்ளதுடன், மேலும் 07 வழக்குகளுக்குரிய ஆட்களுக்கு கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டன. மேலும் 1994 வழக்குகளில் குற்றவாளிகளிடமிருந்து. 41,731,814.65 ரூபா தண்டப் பணமாக அறவிடப்பட்டுள்ளது. அரசுடைமையாக்கப்பட்ட 29 லொறிகள், 47 இரண்டு சக்கர உழவு இயந்திரங்கள் 07 உழவு இயந்திரங்கள், 10 மோட்டார் சைக்கிள்கள் 21 துவிச்சக்கர வண்டிகள் ஆகும். இவற்றின் மொத்தப் பெறுமதி 34,003,300.00 ரூபாவாகும். வனக் குற்றங்கள் தொடர்பான மேலதிக விபரங்கள் இணைப்பு I , II , மற்றும் III மூலம் காட்டப்பட்டுள்ளன.

#### 6.6.2. அவசர சுற்றிவளைப்புப் பிரிவின் செயலாற்றுகை

அவசர சுற்றி வளைப்புப் பிரிவின் செயலாற்றுகை பின்வரும் 6.1 அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. .(இணைப்பு VIII )

**அட்டவணை 6.1 அவசர சுற்றி வளைப்புப் பிரிவின் முன்னேற்றம்**

| பிரிவின் பெயர் | வனக் குற்றங்களின் எண்ணிக்கை | மரத்தின் அளவு (கன அளவு) | மரத்தின் பெறுமதி (ரூபா) | தண்டப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| வடமேல்/மேல் மாகாண வலய சுற்றிவளைப்பு பிரிவு | 34 | 27.493 | 1,080,006.62 | 370,000.00 |

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் திடீர் சுற்றிவளைப்பு பிரிவினால் கண்டுபிடிக்கப்படுகின்ற வனக் குற்றங்களின் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் அருகாமையில் உள்ள வட்ட வன அலுவலகத்துக்கு கையளிக்கப்படும்.

### 6.6.3 மரப் பரிசோதனை நிலையம்

2018 ஆம் ஆண்டில் தம்புள்ளை, பசியாலை, போன்ற இடங்களில் மரப் பரிசோதனை நிலையங்கள் செயற்பட்டன.

#### 6.6.4. தனியார் மர வியாபாரம்

2018 ஆம் ஆண்டில் **364** வெட்டு மரங்களை அரியுமிடம், **550** மர விற்பனை நிலையங்கள் **724**, மரக்காலை **627** வீட்டுத் தளபாட விற்பனை நிலையங்கள் **51** விறகு விற்பனை நிலையங்கள் வெட்டு மரத்தை பதப்படுத்தல் மற்றும் உற்பத்தி தொழிற்சாலைகள் 17 நடமாடும் வெட்டு மரங்களை அரியுமிடம் புதிதாகப் பதிவு செய்யப்பட்டன. (,இணைப்பு V)

2018 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ள தனியார் மர வியாபாரங்களின் எண்ணிக்கை 28731 ஆகும் ( இணைப்பு IV )

### 6.7 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்

**இந்த ஆண்டிலே பின்வரும் விழிப்பூட்டல் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.**

I. 1,243 பொலிஸ்உத்தியோகத்தர்களுக்கு 26 விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

II. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்ட 3.570 உத்தியோகத்தர்களுக்கு 85 விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

III. 1,330 வன உத்தியோகத்தர்களுக்கு **54** விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

IV. ஏனைய 20,318 ஆட்களுக்கு **556** விழிப்பூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன. ( இணைப்பு VII)

### 6.8 நன்கொடை வழங்குதல்

நீதிமன்றங்கள் மூலம் குற்றவாளியாகக் காணப்பட்ட வனக்குற்றங்களுக்கு உரியவாறான நடவடிக்கைகளுக்காக 2018 ஆம் ஆண்டு 1,927,711.00 ரூபா தொகையை **170** உத்தியோகத்தர்களுக்குவழங்கப்பட்டன. (மேலதிக விபரங்கள் இணைப்பு VI இல் காட்டப்பட்டுள்ளது)

### 6..9 நிதிசார் முன்னேற்றம்

**2018** வனப்பாதுகாப்புத் திணைக்கள நிதியத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகளுக்கு பெறப்பட்ட மொத்த நிதி ஏற்பாடு 32,000,000.00 ரூபாவாகும். 2018 ஆண்டு சீருடைக்காக 1,7000,000.00 ரூபா ஒதுக்கீடு செய்திருந்தாலும் இதில் 7,314,188.00 ரூபா செலவு செய்யப்பட்டுள்ளன. வனப்பாதுகாப்பு திணைக்கள நிதியத்தின் நிதிசார் முன்னேற்றம் 83.3% வீதமாகும். எனவும் சீருடைக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிதிசார் முன்னேற்றம் 43% ஆகும். உணவு மற்றும் சீருடைக்கான செலவுத் தலைப்பின் கீழான முன்னேற்றம் குறைவடைவதற்கான காரணம் சப்பாத்து மற்றும் இடுப்புப் பட்டிகள் வழங்குவதற்கு தெரிவு செய்த வழங்குநருக்கு உரிய காலப்பகுதிக்குள் மூலப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு முடியாமல் போனமையாகும்.

**(அட்டவணை 6 .2 இன் மூலம் மேலதிக தகவல்கள் காட்டப்பட்டுள்ளன)**

**அட்டவணை 6..2 வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிசார் முன்னேற்றம்**

| விடயம் | ஒதுக்கீடு | செலவு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| வனப்பாதுகாப்புத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய தகவல் வழங்குனர்களுக்கும் வழங்கிய நன் கொடைப் பணம் | 7,000,000.00 | 6,911,150.00 | 98.73 |

| | | | |
|---|---|---|---|
| போக்குவரத்துச் செலவு (நீதிமன்றம்) | 7,000,000.00 | 3,487,676.00 | 49.82 |
| வனப் பாதுகாப்புச் செயற்பாடுகள் | 12,000,000.00 | 11,755,052.51 | 97.95 |
| பயிற்சிகள் | 2,000,000.00 | 1,746,724.00 | 87.33 |
| பிற (அனுமதிப் பத்திர புத்தக அச்சு, வர்த்தமானி அறிவித்தல் விடுப்பதற்கு போன்றன) | 4,000,000.00 | 2,756,780.00 | 68.91 |
| **மொத்தம்** | **32,000,000.00** | **26,657,382.51** | **83.3** |

**6.10. காடுசாராத பொருட்களின் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்தல்**

காடு சாராத பொருட்களின் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துரித சேவையின் மூலம் 1,755,187.50 ரூபா தொகையும் சாதாரண சேவையின் மூலம் 168,906.25 ரூபா தொகையும் மரம், மரசார்ந்த பொருட்கள் மற்றும் விதைகள் ஏற்றுமதிக்கான அனுமதி பத்திரத்தின் மூலம் உரிய ஆண்டில் பெறப்பட்டது. அத்துடன் வீட்டு தளபாடங்கள் கைவேலைப்பாட்டுப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வெட்டுமரம் சார் உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்கு ஒரு நாள் சேவையின் ஊடாக அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மூலம் 2,273,062.50 ரூபாவும் சாதாரண சேவையின் ஊடாக அனுமதிப் பத்திரங்களை வழங்கி 762,593.75 ருபாவும் பெறப்பட்டன.மேலும் மேலே சொல்லப்பட்ட உற்பத்திகளின் ஊடாக ஒரு நாள் சேவையின் மூலம் 1,790,032.50 பெறப்பட்டன இவ்வாறு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சேவைகளின் ஊடாக 6,749,782.50 ரூபா முழுமையான வருமானமாகப் பெறப்பட்டுள்ளன. (இணைப்பு IX, X,XI,XII XIII மற்றும் **XIV** )

## 07ஆவது அத்தியாயம்

## திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவு

### 7.1 அறிமுகம்

வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பல்வேறுபட்ட செயற்பாடுகளுக்கு இயைபான வருடாந்தத் திட்டங்களை உருவாக்குவதற்கான பிரதான பொறுப்பு இந்த திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவுக் உரியதாகும். வருடாந்தத் திட்டங்கள் மற்றும் வரவு செலவுத் திட்டத்தைத் தயாரித்தல் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் வரவு செலவுகள் மற்றும் அது தொடர்பிலான சகல கருத்திட்ட முன்னேற்றங்களின் மீளாய்வு மற்றும் முன்னேற்ற அறிக்கை, புதிய கருத்திட்டத்திற்காக அறிக்கைகள் திட்டமிட்டுத் தயாரித்தல் கட்டட நிருமாணிப்பு மற்றும் கட்டட பராமரிப்பு வீட்டுத் தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் அத்துடன் இயந்திரப்பொறி முறைகள் கொள்வனவு செய்தல் போன்ற பணிகளும் இந்த திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன

### 7.2 இந்தப் பிரிவின் பிரதான நோக்கங்கள்

I எதிர்வரும் ஆண்டுக்காக திணைக்களத்தின் வரவு செலவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.

II மூலதன வரவு செலவின் கீழ் நிதிசார் பிணைப்பு உட்பட வருடாந்த நிகழ்ச்சித் திட்டங்களை திணைக்களத்திற்காகத் திட்டமிடல்.

III திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற செயற்பாடுகள் தொடர்பான மாதாந்த முன்னேற்ற மீளாய்வை சுற்றாடல் , புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு உட்பட பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கு அறிக்கையிடல்.

IV வெளிநாட்டு நிதியங்களை மற்றும் திரட்டிய நிதியங்களை பெற்றுக் கொள்வதற்கு கருத்திட்ட அறிக்கைகளைத் தயாரித்தல்

V புதிய கட்டநிருமாணிப்பு ஏற்கனவேயுள்ள கட்டடங்களின் திருத்த வேலைகள் மூலம் திணைக்களத்திற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

VI வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் போன்ற மூன்று மொழிகளிலும் ஒழுங்கு செய்து குறித்த அறிக்கையைப் பாராளுமன்றத்தின் அனுமதிக்காகச் சமர்ப்பித்தல்.

vii சுற்றாடல் முறைமையை பேணல் மற்றும் முகாமைத்துவ கருத்திட்டத்தின் மற்றும் சுற்றாடல் சார்பு பிரதேசங்களில் உயிரியல் பல்வகைத் தன்மையை பேணல் அத்துடன் சுற்றாடல் முறைமைகளில் திறமுறையானவாறு மேம்படுத்துவது தொடர்பில் கருத்திட்டப் பணிகளை மேற்கொள்ளல்.

### 7.3 தாபன ஏற்பாடுகள்

திட்டமிடல் மற்றும் கண்காணிப்புப் பிரிவானது காடு பேணுநரின் கட்டுப்பாட்டின் கீழுள்ளது. காடு பேணுநருக்கு உதவிக் காடு பேணுநர் ஒருவரின் ஒத்துழைப்புக் கிடைக்கின்றது. காடு பேணுநர் மற்றும் உதவிக் காடு பேணுநருக்கு ஒத்துழைப்புக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவரும் அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் ஒருவரும் பகுதி வன உத்தியோகத்தர் மூவரும் வன வெளிக்கள

உதவியாளர்கள் மூவரும் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவரும் இந்தப் பிரிவில் இணைக்கப்பட்டுள்ளனர்.

### 7.4 பிரதான செயற்பாடுகள்

இந்த அறிக்கையின் காலப் பகுதிக்குள் பின்வரும் பிரதான செயற்பாடுகளைத் திட்டமிடலும் கண்காணித்தலும் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டன.

#### 7.4.1 வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தையும் மூலதன வரவு செலவுத் திட்டத்தையும் தயாரித்தல்

2019 ஆம் ஆண்டுக்கான திணைக்களத்தின் வருடாந்த நிகழ்ச்சித் திட்டத்தையும் 2019 ஆம் ஆண்டுக்கான திணைக்ளத்தின் அனைத்துத் தேவைப்பாடுகளையும் கவனத்தில் எடுத்துக் கொண்டு 2019 ஆண்டுக்கான வருடாந்த மூலதன வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டது.

#### 7.4.2 முன்னேற்ற அறிக்கையை வழங்குதல்.

மூலதன வரவு செலவுத் திட்டத்தின் கீழ் நடை முறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றங்கள் காலாண்டுக்கு ஒரு தடவை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு அனுப்ப்ப்பட்டது. பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கு அவற்றின் கோரிக்கைகள் மற்றும் தேவைப்பாடுகளுக்கு அமைவாக அவ்வப்போது முன்னேற்ற அறிக்கை வழங்கப்பட்டது.

உரிய காலப்பகுதிக்குள் 2017 ஆண்டு திணைக்களத்தினால் மேற்கொண்ட செயற்பாடுகள் அடங்கிய தகவல்கள் செயலாற்றுகை அறிக்கையாக தயாரிக்கப்பட்டது.

#### 7.4.3 கட்டட நிருமாணிப்புகள் மற்றும் திருத்தங்கள்

##### 7.4.3.1 கட்டட நிருமாணிப்புகள்

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்குள் திரட்டிய நிதியத்தைப் பயன்படுத்தி 2 கட்டடங்கள் நிருமாணிக்கப்பட்டன. இது தொடர்பான மேலதிக தகவல்கள் அட்டவணை 7.1 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.1 திரட்டிய நிதியத்தைப் பயன்படுத்திநிருமாணிக்கப்பட்ட கட்டடங்கள் தொடர்பான தகவல்கள் - 2018**

| மாவட்டம் | கட்டடங்கள் |
|---|---|
| **ஹம்பாந்தோட்டை** | மாவட்ட வன உத்தியோகத்தர் அலுவலகம் - **ஹம்பாந்தோட்டை** |
| **குருநாகல்** | வட்ட வன உத்தியோகத்தர் அலுவலகம் - **குருநாகல்** |

**மேற்குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிசார் செலவு பின்வருமாறு**
**( அட்டவணை 7.2)**

**அட்டவணை 7.2 2018 ஆம் ஆண்டின் கட்டட நிருமாணிப்பு தொடர்பிலான நிதிசார் செலவு**

| நிதியம் | வருடாந்த ஒதுக்கீடு (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| திரட்டிய நிதியம் | 8,500,000.00 | 8,499,998.55 | 100 |

**7.4.3.2 கட்டடங்களின் பராமரிப்பு**

இந்த ஆண்டுக்குள் கட்டடங்களின் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இது தொடர்பான மேலதிகத் தகவல்கள் அட்டவணை 7.3 இல் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை 7.3 : 2018 ஆம் ஆண்டுக்குள் பராமரிக்கப்பட்ட கட்டடங்களின் விபரங்கள்**

| கட்டடங்கள் | இடம் |
|---|---|
| மாவட்ட வன அலுவலகம் | 1. அனுராதபுரம்<br>2. மன்னார்<br>3. முல்லைத்தீவு<br>4. வவுனியா<br>5. களுத்துறை<br>6. கம்பஹா<br>7. மாத்தளை<br>8. கேகாலை<br>9. இரத்தினபுரி<br>10. காலி<br>11. ஹம்பாந்தோட்டை<br>12. திருகோணமலை<br>13. மட்டக்களப்பு |
| மாவட்ட வன உத்தியோகத்தர் விடுதி | 1.அனுராதபுரம்<br>2. மன்னார்<br>3. வவுனியா<br>4. கம்பஹா<br>5.பதுளை<br>6.மொணறாகல<br>7. மாத்தறை<br>8.ஹம்பாந்தோட்டை<br>9.பொலன்நறுவ<br>10.மட்டக்களப்பு |
| வனக் கட்டுப்பாட்டாளர் விடுதி | 1.யாழ்ப்பாணம் |
| வட்ட வன உத்தியோகத்தர் அலுவலகம் | 1. கிளிநொச்சி<br>2.வாழைச்சேனை<br>3. லாகுகல<br>4. அம்பாறை<br>5. திருகோணமலை<br>6. கந்தளாய்<br>7. அனுராதபுரம்<br>8. மன்னார்<br>9. குருநாகல் |

| | |
|---|---|
| | 10. குளியாப்பிட்டி<br>11.மத்துகம<br>12.வக<br>13.மீரிகம<br>14.ஹட்டன்<br>15.நாவலப்பிட்டி<br>16.பிபில<br>17.வெல்லவாய<br>18.ஹுன்னஸ்கிரிய<br>19.கலவான<br>20.வெத்தாகல<br>21.கித்துல்கல<br>22.தெஹிஓவிட்ட<br>23. இரத்தினபுரி<br>24.கம்புறுபிட்டி<br>25.அக்குரெஸ்ஸ<br>26.நெலுவ<br>27.தவலம<br>28.வலஸ்முல்ல<br>29.மதவாச்சி<br>30.அக்கறைப்பற்று<br>31.தம்புத்தேகம<br>32.கெக்கிராவ<br>33.கந்தளாய்<br>34.திம்புலாகல<br>35.வாழைச்சேனை |
| வட்ட வன உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ விடுதி | 1.லாகுகல<br>2.திருகோணமலை<br>3.கிளிநொச்சி<br>4.பளை<br>5.குருநாகல்<br>6.நாவலப்பிட்டி<br>7.நாவுல<br>8.வாகொல்ல<br>9.மககுடுகல<br>10.ஹட்டன்<br>11.இரத்தினபுரி<br>12.ரம்புக்கன<br>13.வலஸ்முல்ல<br>14.எல்பிட்டிய<br>15.திருகோணமலை<br>16.மதவாச்சி |

| | |
|---|---|
| மேலதிக வட்ட வன உத்தியோகத்தர் விடுதி | 1. நாஉல<br>2. கனதொல |
| பகுதி வன அலுவலகம் | 1.அம்பாறை<br>2.பதியதலாவ<br>3.ஹுலன்னுகே<br>4.சேரன்கட<br>5.குருநகர்<br>6.யகிரல<br>7.மோல்காவ<br>8. இங்கிரிய<br>9. புளியங்குளம்<br>10.ரிதிமாலியத்த<br>11.போபன்தலாவ<br>12.இங்கினியாகல<br>13.மீகஹகிவுல<br>14.திருக்கோயில்<br>15.கோமாரி<br>16. லாகுகல<br>17.உனுவத்துரபுபுல<br>18.அரந்தலாவ<br>19.பன்னல்கம<br>20.கலன்பிந்துனுவெவ<br>21.நொச்சியாகம |
| பகுதி வன உத்தியோகத்தர் விடுதி | 1செட்டிகுளம்<br>2.வெல்லன்குளம்<br>3.மடு<br>4.ஒட்டுசுட்டான்<br>5.முலங்காவில்<br>6.வட்டக்கச்சி<br>7.வடக்குத் தீவு<br>8.பளை<br>9.வவுனியா<br>10.செட்டிகுளம்<br>11.ஓமந்தை<br>12.கல்கமுவ<br>13.தெல்தெனிய<br>14.சியம்பலாண்டுவ<br>15.மீகஹகிவுல<br>16.இலுக்கும்புர<br>17.இனாமலுவ<br>18.இவுல்தண்ட<br>19.உடுதும்பர<br>20.மஹய்யாவ |

| | |
|---|---|
| | 21.பம்பரகெலே<br>22.உஸ்வெவ<br>23.குருவிட்ட (லஸ்கந்த)<br>24.சிங்ஹராஜய<br>25.சூரியவெவ<br>26.வெத்தாகல<br>27.ரம்புக<br>28.ரத்தனகொல்ல<br>29.தொலமாவத்த<br>30. மாத்தறை<br>31.புனானை<br>32.நாவலடி<br>33.புலுக்குனாவ<br>34.வாகரை<br>35.தொப்பிகல<br>36.கலன்பிந்துனுவெவ<br>37.மன்னம்பிட்டி |
| சுற்றுலா விடுதி | 1.யாழ்ப்பாணம்<br>2.பட்டிபொல<br>3.ஹப்புத்தளை<br>4.ஹாலிஎல<br>5.சிங்கராஜ<br>6.அம்பாறை (எக்கல்ஓயா)<br>7.அனுராதபுரம்<br>8.திருகோணமலை<br>9.மாத்தறை (நாதுகல)<br>10.காலி (வேகுனுகொட) |
| வன வெளிக்கள உதவியாளர் விடுதி | 1.ஹல்துமுல்ல<br>2.ஹப்புத்தளை |
| | |
| நாற்று | 1.தெபானம<br>2.ஹுன்னஸ்கிரிய<br>3.வல்பிட்ட |
| காவல் அரண் | 1. திகம்பதான (நாஉல)<br>2.பீதுறுதலாகல<br>3.உடவத்தகெலே |
| வனவியல் கல்லூரி<br>வெளிக்கள கண்காணிப்பு அலுவலகம்<br>தகவல் நிலையம்<br>வலய அலுவலக கட்டடம் | 1. நுவரெலியா<br>2. மட்டக்களப்பு<br>3.படகமுவ<br>4. நுவரெலியா<br>5.அனுராதபுரம் |

மீளாய்வு செய்யப்பட்ட ஆண்டுக்குள் கட்டடப் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம் பின்வருமாறு (அட்டவணை 7.4)

**அட்டவணை 7. 4. கட்டடப் பராமரிப்பு - நிதிசார் முன்னேற்றம் – 2018**

| வருடாந்த ஒதுக்கீடு (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் (%) |
|---|---|---|
| 50,000,000 | 49,999,226.50 | 100 |

**அட்டவணை 7.5 : 2018 ஆண்டு வீட்டுத் தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் தொடர்பான நிதிச் செயலாற்றுகை**

| நிதியம் | வருடாந்த ஒதுக்கீடு (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| திரட்டிய நிதியம் | 9,000,000.00 | 8,997,104.97 | 91.2 |

**அட்டவணை 7.6 : 2018 ஆண்டு இயந்திர பொறிமுறைகள் கொள்வனவு தொடர்பான நிதிச் செயலாற்றுகை**

| நிதியம் | வருடாந்த ஒதுக்கீடு (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| திரட்டிய நிதியம் | 2,500,000.00 | 2,499,999.26 | 100 |

**அட்டவணை 7.7 : 2018 ஆண்டு இயந்திர பொறிமுறைகள் பராமரிப்பு தொடர்பான நிதிச் செயலாற்றுகை**

| நிதியம் | வருடாந்த ஒதுக்கீடு (ரூபா) | செலவு (ரூபா) | முன்னேற்றம் (%) |
|---|---|---|---|
| திரட்டிய நிதியம் | 3,000,000.00 | 2,997,372.68 | 100 |

# 08 ஆவது அத்தியாயம்

# போக்குவரத்துப் பிரிவு

## 8.1 அறிமுகம்

இந்தப் பிரிவின் மூலம் திணைக்களத்தின் வாகனப் பராமரிப்புக்கள், திருத்தங்கள். குழுமத்தில் உள்ள வாகனங்களுக்கு எரிபொருட்ளை வழங்குதல்.கமைகளுக்காக குழுமத்திலுள்ள வாகனங்ளை பயன்படுத்தல் மற்றும் சாரதிகளின் மேலதிக நேரக் கொடுப்பனவுகள். போக்கு வரத்துச் செலவுகளுக்காக அமைச்சின் அனுமதி பெறப்படும். இதன் கீழ் பிரதான அலுவலகத்திலுள்ள வாகனங்கள் மற்றும் வெளிக்கள அலுவலகங்களிலுள்ள வாகனப் பராமரிப்புக்கள், திருத்தங்கள். எரிபொருட்கள், போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன.

## 8.2 பதவியணி மற்றும் நிறுவன ஒழுங்கமைப்பு

இந்தப் பிரிவானது நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அலுவலர் - போக்குவரத்து ( மேலதிக காடு பேணுநர் - ஆராய்ச்சி, கல்வி மற்றும் அபிவிருத்தி ) இன் கீழ் உள்ளது. மற்றைய பதவியணியில் மூன்று அரச முகாமைத்துவ உதவியாளர்கள், ஒரு அலுவலக உதவியாளரைக் கொண்டுள்ளது.

## 8.3 நிதிசார் கொள்கை

2018 ஆம் ஆண்டுக்காக போக்குவரத்துப் பிரிவுக்கு கிடைத்த ஒதுக்கீட்டின் அளவு மற்றும் செலவுகள் பற்றிய விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. பொதுத் திறைசேரியிலிருந்து கிடைத்த ஒதுக்கீட்டுக்கு மேலதிகமாக காடுகளின் அபிவிருத்தியை விரிவுபடுத்தல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழும் எரிபொருள் வாகன பராமரிப்பு பணிகளுக்காகவும் நிதி கிடைக்கப்பெற்றது

அட்டவணை 8.1 : போக்குவரத்து பிரிவுக்கு 2018 ஆம் ஆண்டில் கிடைத்த ஏற்பாடுகள் மற்றும் அவை செலவிடப்பட்ட முறை

| பணி | கிடைத்த ஏற்பாடு | செலவினம் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| வாகனப் பராமரிப்பும் சேவையும் (செலவுத் தலைப்பு (014) | 18,800,000.00 | 18,545,406.38 | 98.64% |
| எரிபொருள் (செலவுத் தலைப்பு (009) | 12,000,000.00 | 11,960,532.69 | 99.67% |
| வாகனங்களைப் புதுப்பித்தல் (செலவுத் தலைப்பு (203) | 9,000,000.00 | 8,964,068.00 | 99.60% |

## 09 ஆவது அத்தியாயம்

## மனித வள முகாமைத்துவம், நிருவாகம் மற்றும் தாபன அபிவிருத்திப் பிரிவு

### 9.1 அறிமுகம்

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மனித வள முகாமைத்துவம், நிருவாகம் மற்றும் தாபன அபிவிருத்திப் பிரிவுக்கு ஒட்டுமொத்த நிருவாக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் ஊழியர்களது ஆற்றல்களை வலுவூட்டி பொதுமக்களுக்கும் நாட்டுக்கும் உச்சளவான சேவையைப் பெற்றுக்கொடுப்பதற்கு பொருத்தமான நிருவாக மற்றும் முகாமைத்துவ வேலை சட்டகத்திற்குள் தலைமை அலுவலகம், வலைய அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள், வட்ட வன அலுவலகங்களை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டிய பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆளணி மற்றும் நிருவாகம் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டில் இந்தப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் இவ் அனைத்து நடவடிக்கைகளும் சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறைகளுக்கு அமைவாக அனைத்து ஆட்சேர்ப்புகளும் மற்றும் பதவியுயர்வுகளும் அத்துடன் ஏனைய சலுகைகளும் வழங்குதல் இந்தப் பிரிவினால் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

2018 ஆண்டு நிறைவின் போது சிரேஷ்;ட மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் ஆரம்ப நிலை என்ற வகையிலான அனைத்துத் தொகுதிகளையும் உள்ளடக்கியதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு இந்த திணைக்களத்தின் பதவியணி அமைந்துள்ளது.

இதற்கமைவாக திணைக்களத்தின் மொத்த பதவியணி எண்ணிக்கை 3,145 ஆகும் எனவும் 2018.12.31 ஆந் திகதியாகும் போது வெற்றிட எண்ணிக்கை 505 ஆகும். விபரங்கள் அட்டவணை 9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

அட்'டவணை 9.1 வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பதவியணியினர் பற்றிய தகவல்கள்

| | **அங்கீகரிக்கப்பட்ட பதவியணி** | **தற்போதுள்ள பதவியணியினர்** | **வெற்றிடங்கள்** |
|---|---|---|---|
| சிரேஷ்ட மட்டம் | 87 | 63 | 24 |
| மூன்றாம் நிலை மட்டம் | 42 | 28 | 14 |
| இரண்டாம் நிலை மட்டம் | 1382 | 1095 | 287 |
| ஆரம்ப மட்டம் | 1634 | 1454 | 180 |
| மொத்தம் | **3145** | 2640 | 505 |

அட்'டவணை **9.2** 2018 ஆண்டின் ஆட்சேர்ப்பு

| | |
|---|---|
| வட்ட வன உத்தியோகத்தர் | 07 |
| வன விரிவாக்கல் உத்தியோகத்தர் | 54 |
| பகுதி வன உத்தியோகத்தர் | 115 |
| வன வெளிக்கள உதவியாளர் | 110 |

**இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் ஊடாக பரீட்சைகள் நடத்தப்பட்டு நேர்முகப்பரீட்சையின் மூலம் மேலே குறிப்பிட்ட ஆட்சேர்ப்புகள் செய்யப்பட்டன.**

I **2018** ஆண்டின் ஓய்வு பெறல்

உரிய காலப் பகுதியில் கீழே காட்டப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஓய்வு பெற்றனர்.

அட்'டவணை **9.3** **2018** ஆண்டின் ஓய்வு பெறல்

| | |
|---|---|
| வனக் கட்டுப்பாட்டாளர் | 03 |
| வட்ட வன உத்தியோகத்தர் | 05 |
| பகுதி வன உத்தியோகத்தர் | 26 |
| வன வெளிக்கள உதவியாளர் | 11 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 03 |
| தோட்டத் தொழிலாளர் | 12 |
| சாரதி | 03 |
| பட வரைஞர் | 02 |
| சாரதி உதவியாளர் | 02 |
| இரசாயன கூட உதவியாளர் | 01 |

II சேவையிலிருந்து விலகல்/பதவியிலிருந்து விடுவித்தல்

அட்'டவணை **9.4** சேவையிலிருந்து விலகல்/பதவியிலிருந்து விடுவித்தல்

| | |
|---|---|
| அரச முகாமைத்துவ உதவியாளர் | 02 |
| பகுதி வன உத்தியோகத்தர் | 07 |
| வன வெளிக்கள உதவியாளர் | 87 |
| வன விரிவாக்கல் உத்தியோகத்தர் | 01 |
| தோட்டத் தொழிலாளர் | 13 |

III மரணமடைந்த உத்தியோகத்தர் பற்றிய விபரங்கள்

அட்'டவணை 9.5 மரணமடைந்த உத்தியோகத்தர் பற்றிய விபரங்கள்

| | |
|---|---|
| வன விரிவாக்கல் உத்தியோகத்தர் | 02 |
| சினிமா இயந்திர இயக்குநர் | 01 |

## IV ஒழுக்காற்று நடவடிக்கைகள்

### அட்'டவணை 9.6 ஒழுக்காற்று நடவடிக்கைகள்

| | |
|---|---|
| வேலையிலிருந்து இடைநிறுத்தம் | 02 |
| மீள சேவைக்கு அமர்த்தல் | 02 |
| நிறைவு செய்த ஒழுக்காற்று விசாரணைகள் | 04 |
| இந்த ஆண்டு ஆரம்பித்த விசாரணைகள் மற்றும் முறையான ஒழுக்காற்று விசாரணைகள் | 30 |

## V சேவை வெறிதாக்கல்

### அட்டவணை 9.7 சேவை வெறிதாக்கல்

| | |
|---|---|
| தோட்டத் தொழிலாளர் | 04 |

## 9.2 இடமாற்றம்

i. இலங்கை விஞ்ஞான சேவையின் இடமாற்றத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தல்.

ii. திணைக்கள சேவைகளுக்காக இடமாற்றத் திட்டமொன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

iii. திணைக்கள பதவிகளுக்காக இடமாற்றத் திட்டமொன்று அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் நடைமுறைப்படுத்தல்.

## 9.3 ஆட்சேர்ப்புகள்

இலங்கை பரீட்சை திணைக்களத்தின் வருடாந்த கால அட்டவணைக்கு அமைவாக இத் திணைக்களத்தின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு பரீட்சைகளை நடாத்தி தகைமை வாய்ந்த உத்தியோத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

இதற்கு அமைவாக 2018 ஆம் ஆண்டுக்குள் கீழே காட்டப்பட்டுள்ளவாறு உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர்.

### அட்டவணை 9.8 - ஆட்சேர்ப்புகள்

| | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை |
|---|---|
| வட்ட வன உத்தியோகத்தர் | 07 |
| பகுதி வன உத்தியோகத்தர் (திறந்த - மட்டுப்படுத்தப்பட்ட) | 115 |
| வன வெளிக்கள உதவியாளர் (திறந்த - மட்டுப்படுத்தப்பட்ட) | 110 |
| வன விரிவாக்கல் உத்தியோகத்தர் (திறந்த) | 54 |

### 9.4 பதவியுயர்வுகள்

i. 3 வன வெளிக்கள உதவியாளர்கள், முகாமைத்துவ உதவியாளர்களாக பதவியுயர்த்தப்பட்டனர்.

ii. 07 பகுதி வன உத்தியோகத்தர்கள் , வட்ட வன உத்தியோகத்தர்களாக பதவியுயர்த்தப்பட்டனர் .

iii. 84 வன வெளிக்கள உதவியாளர்கள் , பகுதி வன உத்தியோகத்தர்களாக பதவியுயர்த்தப்பட்டனர்

iv. 13 தோட்டத் தொழிலாளர்கள் , வன வெளிக்கள உதவியாளர்களாக பதவியுயர்த்தப்பட்டனர்

### 9.5 கடன் வழங்குதல்.

திணைக்களத்தின் பதவியணி உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க ஊழியர்களுக்கு உரித்தான கடன் வசதிகளின் கீழ் பின்வரும் கடன்கள் வழங்கப்பட்டன.

01. இடர் கடன் 85

02. ஆதனக் கடன் 13 வழங்கப்பட்டன.

### 9.6 தகவல் உரிமை அலகு

01. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் 48 கோரிக்கைகள் .

| | | | |
|---|---|---|---|
| i. | காணி பற்றிய பிரச்சினைகள் | - | 11 |
| ii. | காட்டு விளைபொருட்கள் பற்றிய பிரச்சினைகள் | | 04- |
| iii. | காட்டுச் சட்ட பாவனை பற்றிய பிரச்சினைகள் | - | 11 |
| iv. | திணைக்கள ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வுக் பற்றிய பிரச்சினைகள் மற்றும் ஆளணி | | 08- |
| v. | அடிப்படை சுற்றாடல் மதிப்பீடு பற்றிய பிரச்சினைகள் | | 01- |
| vi. | வனப் பாதுகாப்பு பற்றிய பிரச்சினைகள் | | 11- |
| vii. | காட்டு தாவர வகைகள் பற்றிய பிரச்சினைகள் | | 02- |

02. திணைக்களத்திடம் இருந்து தகவல் கோரிய விண்ணப்பதாரிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| ஊடகவியலாளர்கள் | - | 04 |
| அரச சார்பற்ற அமைப்புகள் | - | 08 |
| பிரசைகள் | - | 27 |
| வன உத்தியோகத்தர்கள் | - | 05 |
| காட்டு விளைபொருள் வியாபாரிகள் | - | 04 |

03. வழங்கிய தகவல்களுக்கு எதிராக தகவல் ஆணைக்குழு விசாரணை செய்த மேன்முறையீடுகளின் எண்ணிக்கை 03 ஆகும்.

**அட்டவணை** 9.9 - வழங்கிய தகவல்களுக்கு எதிராக தகவல் ஆணைக்குழு விசாரணை செய்த மேன்முறையீடுகள்

| | மேன்முறையீட்டுக்கான காரணம் | மேன்முறையீட்டு தீர்மானம் |
|---|---|---|
| 01. | திணைக்கள பதவியுயர்வுகளை ஏற்றுக்கொள்ளாமை | நிராகரிக்கப்பட்டது. |
| 02. | திணைக்கள இடமாற்றங்களை ஏற்றுக்கொள்ளாமை | நிராகரிக்கப்பட்டது. |
